T03953
R001J01

ஸித்தாந்த த்ரயம்

மஹாமஹோபாத்யாய

கபிஸ்தலம்

ஸ்ரீ-உ-வே. தேசிகாசார்யார் ஸ்வாமியால்

அருளிச்செய்யப்பட்டது.

கும்பகோணம்

விசிஷ்டாத்வைதஸபையின் ஆதரவின்கீழ்

திவான்பகதூர்

S. ராகவய்யங்கார் அவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

கும்பகோணம்

ஸ்ரீ ஜநார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

All Rights Reserved.

விலை] 1934. [ரூ. 1.

Publishers' Note

This treatise the "Siddhanta-Traya-Sangraha" has been written in Tamil at our special request by the great scholar Mahamahopadhyaya Kapistalam Sri U-Ve-Desikachariar. We are highly grateful to him for having taken up this work in spite of his old age and passing acquaintance with Tamil. This is written with a view to help the non-Sanskrit knowing Public to get a knowledge of the Vedanta in general and the Visistadvaita in particular. All Sanskrit words have been avoided as far as possible, only those have been used which are necessary; and they too have been explained in the foot-notes. We are responsible for faults, if any, and they will be corrected in the future editions if they are pointed out by the kind public.

Our thanks are especially due to Mr. A. Srinivasa Ayyangar, M.A., who took great trouble in preparing the work for the press and correcting the proofs. Our thanks are also due to the Proprietor of the Janardana Printing Works for printing the book neatly and expeditiously.

30th June, 1934. **The Publishers.**

ஸ்ரீ:

முகவுரை.

இந்த கிரந்தத்தின் கர்த்தாவான மஹாமஹோபாத்யாயஸ்வாமியை அறியாதார் இல்லை. ஆஸேது ஹிமாசலம் உள்ள பண்டிதர்கள் இவருடைய அரும் பெருமையையும் அதிஸாதாரணமான வைதுஷ்யத்தையும் அறிவர். அத்யாத்ம சாஸ்த்ர ஞானத்தில் இவரினும் பெரியாரில்லை. வயதில் மிக முதிர்வும் மிக்க தேகாசக்தியுமுள்ள இந்த ஸ்வாமியினுடைய அத்யந்த விலக்ஷணமான ஞானத்தை ஒரு அத்யாத்மதீபம்போல் இந்த கிரந்தமுகமாக உலகத்திற்கு சாச்வதமாய் பிரகாசித்துக் கொண்டு யாவர்க்கும் தெளிவான ஞானம் உண்டாகும்படிக்கும், ஸம்சயவிபர்யயங்கள் ஏற்படாமல் இருக்கும்படிக்கும் மிகத்தெளிவாக இந்தகிரந்தம் செய்தருளியிருப்பது லோகோபகாரம் ஆகும். ஸங்கல்ப ஸூர்யோதயத்தின் பத்தாவது அங்கத்தில் "வித்யாஸந்ததிக்கு உலகத்தில் விச்சேதம் வாராதபடி செய்ய விஞ்ஞாபனம் செய்கிறேன். ச்ருதிகளின் பாக்யமான பகவானிடத்தில் ஸர்வதா மனதையுடைய இம்மஹான் பூமியில் எழுந்தருளியிருக்கிற ஸமயத்திற்குள் தத்வம் முழுவதுமறிந்த இவரிடம் அறியவிரும்பும் விஷயங்களை எல்லாம் அவதானத்தோடுகேட்டு அறிந்துகொள்வீராக" என்று ஸாதித்திருக்கிறபடிக்கும் "பீஷ்மர் எழுந்தருளியிருப்பதற்குள் மனதிலுள்ள ஸம்சயங்களை எல்லாம் கேட்டுத் தீர்த்துக்கொள்ளும்" என்று தர்மபுத்திரரைப் பார்த்து ஸர்வஸம்சயங்களுக்கும், சேத்தாவான கீதாசார்யன் ஏவினபடிக்கும்

இந்த விபூதியில் இந்த ஸ்வாமி எழுந்தருளியிருக்க நாம் பாக்யம் பெற்றிருக்கிற காலத்திலேயே இவருடைய ஞானங்கள் எல்லோருக்கும் பிரயோஜனமாகும்படி பிரகாசமாவது நம்முடைய பாக்யமே.

உத்தரதேசத்தில் வித்யைக்குப் பெயர்போன காசி முதலிய மஹாநகரங்களில் வேதாந்த வாதங்கள் பிரபலமாக நேர்ந்த காலங்களில் அங்கே ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்த ஜகத்குருக்களான ஸ்ரீஉத்தராதிஸ்வாமிகளும், ஸ்ரீபிரதிவாதி பயங்கரம் ஸ்வாமியும் இவரை எழுந்தருளப்பண்ணி இவரைக்கொண்டு வாதங்கள் செய்வித்து அங்கேயுள்ள எல்லாவித்வான்களும் இவருடைய பாண்டித்யத்தை புகழ்ந்தது எல்லோருக்கும் பிரஸித்தம். ஈசாவாஸ்ய உபநிஷத்துக்கு வியாக்யானம் செய்கிறது என்கிற வியாஜத்தைக்கொண்டு எல்லா உபநிஷத்துக்களையும் அதிலும் முக்யமான சாந்தோக்யத்திலுள்ள ஸத்வித்யையையும் அபூர்வமாகவும் அத்புதமாகவும் அசும்பிதசரமாகவும் விசாரித்து இவர் ஒரு கிரந்தம் செய்திருக்கிறார். அது சீக்கிரத்தில் பிரசுரமாகும். ஆனால் அந்த கிரந்தம் வித்வான்கள்மட்டும் நன்றாய் அறியக்கூடியது. இந்த கிரந்தம் மிகத்தெளிவாக எல்லோரும் அறியும்படி தமிழில் எழுதியது. இதில் மூன்று மதங்களின் பிரமாணப்பிரமேயங்களை எளியநடையில் தெளிவாய் காட்டியிருக்கிறது. ஸ்ரீபாஷ்யம் ஸ்ரீநிவாஸனை முன்னிட்டுக்கொண்டு அவதரித்ததுபோல இவரும் வடமாமலையின் உச்சியை மேகமயமாகச்செய்யும் கிருஷ்ணமேகத்தினிடம் சாதகபக்ஷியின் விருத்தத்தை அவலம்பித்து இந்தக் கிரந்தத்தை செய்தருளியிருக்கிறார். விசிஷ்டாத்வைத தரிசனத்திலுள்ள ஸம்பிரதாயபேதாம்சங்கள் ஒன்றையும்பாராட்டாமல் எல்லோருக்கும் பொதுவாக தரிசனம்விளக்கப்பட்டிருக்கின்றது.

சுமார் 20 வருஷங்களுக்கு மேற்பட்ட காலமாக உடையவர் ஸம்பிரதாயங்களுக்குள் சொல்லிக்கொள்ளும் பேதங்களைப்பற்றி யாதொரு விவாதமும் கூடாதென்றும் எல்லோரும் கலந்து அநுபவிக்க வேண்டும் என்றும் இந்த ஸ்வாமி பல ஸதஸுகளில் உறுதியாக ஸாதித்திருக்கிறார். அந்த நீதியிலேயே இந்த கிரந்தம் செய்தருளப்பட்டது எல்லோருக்கும் ரஸ்யம்.

ஸ்ரீபாஷ்யபிரஸ்தானத்தில் இந்த ஸ்வாமி அநவரதமும் பரிச்ரமப் பட்டுக்கொண்டே யிருந்துவருவதால் இந்தக்கிரந்தத்தில் பல இடங்களில் ஸ்ரீபாஷ்யத்தின் பதங்களும் பாவங்களும் அப்படியே ஒத்திருப்பதைக் காணலாம். 51வது பக்கத்தில் "கண்களுக்கெட்டாத அர்த்தங்களை ச்ருதி தானே சொல்லி தானே நிஷேதிக்கின்றதென்று சொன்னதாக ஆகும். இது பைத்தியக்காரனுடைய வியாபாரம்போலாகும்", என்று ஸாதித்திருப்பது, पुनस्तदेव नानुन्मत्तः प्रतिषेधति என்கிற "ப்ரக்ருதைதாவத்" ஸூத்திரத்தின் பாஷ்ய வாக்யமே ஆகும். 'அநந்தசப்தத்தின்' அர்த்தத்தை விளக்குகையில் வஸ்து பரிச்சேதம் இல்லைஎன்பதற்கு "தனக்கு மேற்பட்ட ஒரு வஸ்து இல்லாமல் இருக்கையே ஒழிய மற்றொரு வஸ்துவேயில்லை என்னும்படி இருக்கை அன்று" என்று 55-வது பக்கத்தில் ஸாதிக்கப்பட்டது. இரண்டு பிரகாரங்களாக வஸ்துவினால் அளவில்லாமை ஸித்தாந்தத்தில் உபபாதிக்கப்பட்டிருந்தாலும் ஸர்வவஸ்து ஸாமானாதிகரண்யம் பொருந்தும் யோக்யதை என்கிற பிரகாரம் ந்யாய ஸித்தாஞ்ஜன வியாக்யானத்தில் ஸாதித்தபடி புத்தியில் நிச்சங்கமாக ஆரூடமாகாததாலும் இத்தனை குணங்கானுடையவன் என்று வஸ்துவின் உயர்த்தியை அளவிட இயலாது என்கிற பக்ஷத்தில் மற்றொரு பக்ஷமும்

அடங்கிவிடுவதாலும் முதல் பக்ஷமே உயர்ந்தது என்பதைத் திருவுள்ளம்பற்றி ஸாதித்தது என்று கொள்ளவேண்டும். இங்கே இவ்வளவுகுணந்தான் உள்ளவன் என்று வரையறுக்க இயலாமை என்கிற பக்ஷமே அநேகமாய் ச்லாக்யம். ஸ்வரூபத்தினாலும்குணத்தாலும் விபூதியாலும் மற்ற எந்த ஆகாரத்தினாலும் வேறெந்த வஸ்துவைக்காட்டிலும் இளப்பமாய் இருப்பது வஸ்துபரிச்சேதம் என்று ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் நிஷ்கர்ஷமாய் அருளிச்செய்யப்பட்டது. 'எல்லாப்பொருள்களிலும் உட்புகுந்து உயிராக இருந்து ஸத்தையைக் கொடுத்து ஸ்திதியையும் ப்ரவ்ருத்தியையும் நிர்வாஹம்செய்யும் மஹாகுணத்தால் தான் ஸர்வவஸ்து ஸாமாநாதிகரண்யத்தை ஸாதிக்கவேண்டுமாகையால் குணங்களினால் நிரதிசயமான ப்ரகர்ஷம் என்கிற பக்ஷம் அழகானது' என்று "ஜந்மாத்யதிகரண" ச்ருதப்ரகாசிகை. 'ஸர்வவஸ்து ஸமாநாதிகரணார்ஹத்வமும் இதில் அந்தர்கதம். ஸர்வசரீரகத்வம்தானே அது. அதுவும் நியமந, தாரண சேஷித்வங்களின் எல்லைதானே' என்று அங்கே அருளிச்செய்யப்பட்டது.

"ஸ்வப்நத்தில் கண்டவஸ்து தூங்கியெழுந்தபின் கண்டதொழிய ஒன்றுமில்லை என்றும் முதலிலுண்டான ஞானம் ப்ரமமாய் அதில் தோன்றியவஸ்துவும் அஸத்யமாகின்றது" என்று இங்கே 46-வது பக்கத்தில் ஸாதிக்கப்பட்டது அப்யுபகமவாதமென்று கொள்ளலாம். ஸ்ரீபாஷ்யத்தில் ஜிக்ஞாஸாதிகரணத்தில் அஸத்யமானதிலிருந்து ஸத்யத்திற்கு உத்பத்தியை நிரஸநம் செய்யுமிடத்து, 'ஸ்வப்நத்தில் ஏற்படும் புத்திகளுக்கு அஸத்யத்வம் இல்லை. அங்கே பார்க்கப்படும் விஷயங்கள்தானே பொய்யாகும். அந்த விஷயங்களுக்குள் தானே இல்லை என்கிற வாதம் காணப்படுகிறது. ஏற்

பட்ட அறிவுகள் ஏற்படவில்லை என்று வாதமில்லையே' யென்று ஸாதித்தது அப்யுபகமவாதத்தால் என்று ச்ருத ப்ரகாசிகையில் ஸாதிக்கப்பட்டது. அப்யுபகமமாவது:— "பிறர் சொல்லுவதை யாம் வாஸ்தவத்தில் நம் மதத்தில் ஒப்புக்கொள்ளாவிடினும் கக்ஷிக்காக பிறர்சொல்லுவதை ஒப்புக்கொண்டே சொல்லுவது". वैधर्म्याच्च न स्वप्नादिवत् என்கிற ஸூத்ரத்தில் 'ஸ்வப்னபதார்த்தங்கள் அஸத்ய மென்று ஒப்புக்கொண்டு அப்யுபகமவாதமாக பேசப்படு கிறது' என்று ச்ருதப்ரகாசிகையில் ஸாதிக்கப்பட்டது. காரணதோஷமும் பாதகப்ரத்யயமும் ஸ்வாப்னபதார்த்தங் களுக்கு உள்ளதாகையால் அது ப்ராந்தியாகும் என்று அங்கே தீபத்திலும் ஸாரத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் அருளிச்செய்யப்பட்டது. ஸூத்ரத்திலுள்ள சகாரத் தினால் ஸ்வப்னபதார்த்தங்களும் அஸத்யமல்ல என்று பின்னாலே ஸ்வப்னாதிகரணத்தில் காட்டப்போவதாக ஸூசிப்பதாக தீபத்தில் வ்யாக்யானம் செய்யப்பட்டது. ஸ்வப்னாதிகரணத்தின் அதிகரணஸாராவளியில்

स्वप्नेऽर्थास्सन्तु सृष्टास्तदपि बहुविधा दुस्त्यजा भ्रान्तिरत्र
प्रध्वस्तानामिदानीन्तनवदनुभवात्स्थायिताद्विभ्रमाच्च ।
सत्यं श्रुत्यादिसिद्धे श्रुतिपरिहरणायोगतः सृष्टिमात्रं
स्वीकुर्म्यांशे तु बाधाद् भ्रममपि हि यथाजागरं न क्षिपामः ॥

என்கிற ச்லோகத்திலும் அதின் வியாக்யான சிந்தா மணியிலும் ஸ்வப்னபதார்த்தங்கள் ப்ராந்தி ஸித்தங்கள் ஒழிய உண்மையல்ல என்னும் பூர்வபக்ஷம் ஸத்யம் என்று பாதி அங்கீகாரம் செய்யப்பட்டது. லோகாநு பவத்திலும் அவைகள் பொய் என்று தோன்றினாலும் ச்ருதியில் 'ஈஸ்வரன் ஸ்ருஷ்டிக்கிறான்' என்கிற ஸ்ருஷ்டி

சப்தத்தால் அறிவிக்கப்படும் ஏதோ ஒரு விதமான அநிர்வாச்யமும் லோகவிஜாதீயமும் நினைக்க நினைக்க கேவலம் ஆச்சர்யமயமும் ஒரு அஸ்திரமுமான இருப்பைக் கொள்ளவேண்டும். ஆனால் அவைகள் இல்லை என்று பாதிக்கப்படுவதால் ஜாக்ரத்தசையில் பாதத்தால் பிராந்தி என்று கொள்வதுபோல இங்கேயும் பிராந்தித்வத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று சிந்தாமணி. 'ச்ருதிசொல்லுவதையும் ஸ்வப்நாதிகரண ஸூத்ரங்கள் சொல்லுவதையும்கொண்டுமட்டும் நாங்கள் அஸத்யமல்லவென்று லோகப்ரதீதியையும் தள்ளிப் பேசுகிறோம்' என்று ச்ருதப்ரகாசிகையில் காண்கிறோம். சததூஷணியில் 30-வது வாதத்தில் ஸ்வப்நத்தில் ஏற்படும் ப்ரமரூபமானஞானம் ஸத்யமாகையாலும் அந்த ப்ராந்தி ஞானத்தினால் சுபாசுபமான பலங்கள் ஸூசிதமாகையாலும் அதனால் அஸத்யத்திலிருந்து ஸத்யத்திற்கு உத்பத்தியென்பது ஸித்திக்காது. ஸ்வப்நபதார்த்தங்கள் ஈச்வரஸ்ருஷ்டம் என்கிற பக்ஷத்தில் அவைகள் மித்யை என்பது ஸித்திக்காதாகையாலும் என்றும் ஸ்வப்நாதிகளிலும் பதார்த்தங்களைப் பார்ப்பது என்பது உள்ளது தானே. விஷயங்கள் மட்டுந்தானே யில்லை என்று பாதகப்ரத்யயம் உண்டாகிறது. எந்த இடத்தில் ஸ்வப்நத்தில் ஒரு பொருள் அறியப்படுகிறதோ அந்தவிடத்தில் அது இருக்கிறது என்பதில்லையேயென்னில் அது உசிதமில்லை. அந்தக் காரணத்தினால் பிராமாண்யம் மட்டுமே நிவ்ருத்திக்கும், அறிவுக்கு விஷயமானது போகாது என்று ஸாதிக்கப்பட்டது. இந்தக் கிரந்தத்தின் 56-வது பக்கத்தில் புராணங்களில் சொல்லப்படும் ஸ்வப்ந திருஷ்டாந்தத்திற்கு ஸ்வப்நத்தில் காணப்படும் வஸ்துக்கள் போல அஸ்திரமென்பது தாத்பர்யம் என்று அஸ்திரத்

வாம்சத்தை "மின்னின் நிலையில்" என்கிற பிரகாரத்தினால் காட்டப்பட்டது. வாசஸ்பதிமிச்ரரும் மித்யாத்வம் என்று அவர்கள் சொல்வது அநித்யத்வம் என்று ஓரிடத்தில் கூறியிருக்கிறார். அதை ஸ்ரீ ரங்கராமாநுஜஸ்வாமியும் எடுத்துக் காட்டியிருக்கிறார். அப்படிக்கொள்ளில் ஒரு முக்யமான பேதாம்சம் போய்விடும். இது 43-வது பக்கத்தில் ஸ்பஷ்டமாய் ஸாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த கிரந்தத்தை ஸேவித்துக்கொள்வதால் இந்த மதங்களின் முக்யமான அம்சங்களை எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

திருச்சிறாப்பள்ளி,
12—6—34 } ஏ. வி. கோபாலாசாரி.

॥ श्रीः ॥

श्रीनिवासपरब्रह्मणे नमः ॥

॥ श्रीसिद्धान्तत्रयसंग्रहः ॥

ஸ்ரீ ஸித்தாந்த த்ரய ஸங்க்ரஹம்.

* आत्मीयनित्यनिरवद्यनितान्तहृद्य-
विद्योतमानवपुरुत्थमहः प्ररोहैः ।
मेघङ्करं वृषगिरेः शिखरं वितन्वन्
देवो दयाजलनिधिर्दिशतु श्रियं नः ॥

இதன் அர்த்தம்:—'தன்னுடையதாய், எப்பொழுதும் தோஷலேசமில்லாததாய், மிகவும் அழகானதாய், விசேஷித்துப் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் திருமேனியினின்றும் உண்டாயிருக்கிற காந்தியின் முளைக்குருத்து

* ஆத்மீய நித்ய நிரவத்ய நிதாந்த ஹ்ருத்ய
வித்யோதமான வபுருத்த மஹ: ப்ரரோஹை:
மேகங்கரம் வ்ருஷகிரே: சிகரம் விதந்வந்-
தேவோ தயா ஜலநிதிர் திசது ஸ்ரீயம் ந;

களால் திருமலையினுடைய சிகரத்தை, மேகத்தை உண்டாக்குவதாகச் செய்துகொண்டிருக்கிறவனும், கருணைக்கடலாயுமிருக்கிற ஸ்ரீநிவாஸன் நமக்கு ஞானஸம்பத்தை கொடுப்பானாக.

தாத்பர்யம் :— அநுபவிக்க அநுபவிக்க திருப்தியில்லாதபடி மேல் மேல் அநுபவத்தில் ஆசையையுண்டாக்கும் அழகையுடைய, நீர்கொண்ட மேகம்போன்ற தம்முடைய திருமேனி காந்திகளால் திருமலையின் சிகரத்தை மேகத்தால் வ்யாபிக்கப்பட்டதுபோல் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீ நி வா ஸ ன் நமக்கு ஜ்ஞான ஸம்பத்தைக் கொடுப்பானாக.

லோகோஜ்ஜீவனார்த்தமாக ஸர்வேச்வரன் ப்ரவர்த்திப்பித்த உபநிஷத்துக்களின் ஸித்தாந்தமாக அவ்வோவாதிகள் நிர்ணயித்த ஸித்தாந்தங்கள் பல உண்டு. அவைகளில் த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்று சொல்லப்படுகிற இம்மூன்று ஸித்தாந்தங்களின் ஸ்வரூபம் இங்கு ஸங்க்ரஹமாக நிரூபிக்கப்படுகிறது.

॥ द्वैतसिद्धान्तप्रकरणम् ॥

த்வைத-ஸித்தாந்த-ப்ரகரணம்.

இந்த ஸித்தாந்த-ப்ரவர்த்தகர்
ஸ்ரீ ஆநந்த-தீர்த்தர்.

श्रीमन्मध्वमते हरिः परतरः सत्यं जगत्तत्वतो
भिन्ना जीवगणा हरेरनुचरा नीचोच्चभावं गताः ।
मुक्तिर्नैजसुखानु भूतिरमला भक्तिश्च तत्साधनं
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

இந்த ச்லோகத்தின் தாத்பர்யத்தை விவரிக்கிறோம்.

ஸ்ரீமஹாவிஷ்ணு எல்லாவற்றைக் காட்டிலும் மேற்பட்டவன். இவனிடத்தில் எல்லா குணங்களும் நிறைந்திருக்கின்றன; அஜ்ஞானம் முதலிய ஒருவித தோஷமும் கிடையாது. ஆகையால் இவனுக்கு ஸர்வோத்தமத்வம் ஏற்பட்டிருக்கிறது. இவன்தான் ஜகதீச்வரன்; இவன்தான் பர-ப்ரஹ்மம். இவன் ஜகத்தினு

* ஸ்ரீமந்–மத்வ–மதே ஹரி: பரதர:
ஸத்யம் ஜகத் தத்வதோ
பிந்நா ஜீவகணா ஹரேரநுசரா
நீசோச்சபாவம் கதா:।
முக்திர்–நைஜ–ஸுகாநுபூதி:
அமலா பக்திச்ச தத்–ஸாதனம்
ஹ்யக்ஷாதி–த்ரிதயம் ப்ராமாணமகில–
ஆம்நாயைகவேத்யோ ஹரி:॥

டைய ஸ்ருஷ்டி முதலான எட்டுக் காரியங்களைச் செய்கிறான். அவையாவன—ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், நியமனம், ஞானம், பந்தம், மோக்ஷம். இவன் ஸர்வஜ்ஞன். ஜகத்திலுள்ள ஸர்வ-பதார்த்தங்களைச் சொல்லும் சப்தங்களால் மஹாயோக-வ்ருத்தியைக் கொண்டு அவனே சொல்லப்படுகிறான். மஹாயோக-வ்ருத்தியாவது—சப்தத்தின் பூர்ணமான அவயவ-சக்தி-விசேஷம்.

இவனுக்கு அப்ராக்ருதமாய் நித்யமான ஒரு சரீரமுண்டு. இந்த சரீரத்தில் பாதம் முதல் தலை யளவான ஸர்வாவயவங்களும் ஞானாநந்தாத்மகமாயிருக்கிறது. இதில் கண், காது முதலான எல்லா இந்திரியங்களும் நித்யமாயுண்டு. ஒவ்வொரு இந்திரியமும் தனித்தனியே ரூபம் ரஸம் முதலிய எல்லாவற்றையும் க்ரஹிக்க ஸாமர்த்யமுள்ளது. இந்த விக்ரஹமும், இதன் அவயவங்களும் இவன் ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறுபட்டவை யன்று. இவன் ஒருவன் தான் ஸர்வத்திலும் ஸ்வதந்த்ரன்.

இவன் வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்றும், மத்ஸ்யம், கூர்மம் முதலானதும், கேசவன் முதலானதுமான அநேக ரூபங்களுள்ளவன். எல்லா

ரூபங்களும் ஞான-ஆநந்தாதி-குணங்களால்
நிறைந்தவைகள். அளவிடமுடியாதவைகள்.
இவனிடத்திலிருக்கும் ஞான-ஆநந்தாதி-
குணங்கள், க்ரியைகள், ரூபரஸாதிகள் எல்
லாம் ஸ்வரூபத்தைக்காட்டிலும் வேறுபட்ட
வையன்று.

இவனுக்கு லக்ஷ்மி என்று ஒரு பத்னி
யுண்டு. இவள் பரமாத்மாவைக் காட்டிலும்
வேறுபட்டவள். இவனொருவனுக்கு மாத்ரம்
ஆதீனப்பட்டவள். இவனைக்காட்டிலும்
ஞான-ஆநந்தாதிகளால் குறைந்தவள்.
இவள் தான் பகவானுக்கு அடுத்தவள். ஜீவா
த்மாக்களெல்லாம் இவளுக்குத் தாழ்ந்தவர்
கள். பரமாத்மாவுக்குப் போலவே இவளுக்
கும் ஞான-ஆனந்த-ரூபமாய் அப்ராக்ருத
மான சரீரமுண்டு. அநேக ரூபங்களுமுண்டு.
அஜ்ஞாநாதி-தோஷங்கள் கிடையாது. இவ
ளும் பரமாத்மாவைப் போலவே மஹா-யோக-
வ்ருத்தியால் எல்லா-சப்தங்களாலும் சொல்ல
ப்படுகிறாள். இவளும் ஸர்வதேசத்திலும்
வ்யாபித்திருக்கிறாள்.

இவர்களிருவர்தான் நித்ய-முக்தர். ஜீவாத்
மாக்களில் நித்ய-முக்தர் கிடையாது; எல்லோ
ருமே ஸம்ஸாரத்திலிருந்து முக்தி அடைகிற
வர்கள். இந்த ச்லோகத்தில் "ஹரி:" * பரதர:

*परः—உயர்ந்தவன்; परतरः—அதற்கும் உயர்ந்தவன்.

என்கிற வித்தால் எல்லா ஜீவர்களைக்காட்டிலும் லக்ஷ்மி மேற்பட்டவள் என்றும் இவளைக்காட்டிலும் விஷ்ணு மேற்பட்டவன் என்றும் ஸூசிப்பிக்கப்படுகிறது. சராசர ரூபமான ஸகலப்ரபஞ்சமும் உண்மையாயுள்ளது; அஸத்யமன்று. ஜீவாத்மாக்கள் பரமாத்மாவைக் காட்டிலும் ஒருவருக்கொருவரும் வேறுபட்டவர்கள். இவர்கள் ஸ்த்ரீ-ஜாதி, பும்-ஜாதி என்று இருவகைப்பட்டவர்கள். புருஷஜாதியைச் சேர்ந்தவர்கள் ஸம்ஸார-தசையில் கர்மத்தால் ஸ்த்ரீ-சரீரத்தை யடைந்தாலும் மோக்ஷத்தில் புருஷ-ஜாதீயராகவே இருப்பார்கள். ஸ்த்ரீ-ஜாதீயர் ஸம்ஸார-தசையிலும் மோக்ஷ-தசையிலும் ஸ்த்ரீ-ஜாதீயராகவே இருப்பார்கள்.

இஜ்ஜீவர்கள் முக்தியோக்யர், நித்யஸம்ஸாரிகள், தமோயோக்யர் என்று மூன்று வகைப்பட்டிருப்பார்கள். இவர்களில் முக்தியோக்யர் தேவ-கணம், ரிஷி-கணம், பித்ரு-கணம், சக்ரவர்த்தி-கணம், மனுஷ்யோத்தம-கணம் என்று ஐந்து வகையினர். அந்தந்த கணத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த ஸ்தானத்தை அடைய யோக்யதை யுண்டு. ப்ரஹ்மா, வாயு முதலானவர் தேவ-கணங்கள்; நாரதர் முதலியவர் ரிஷி-கணங்கள்; சிராதிகள்

பித்ரு-கணங்கள்; ரகு அம்பரீஷன் முதலியோர் சக்ரவர்த்தி-கணங்கள்.

மனுஷ்யோத்தமர்கள் த்ருண-ஜீவர், தத்-வ்யதிரிக்த-ஜீவர் என்று இருவகைப்பட்டிருப்பார்கள். த்ருண-ஜீவர் ப்ரஹ்மத்தின் 'ஆத்மா' என்கிற ஒரு குணத்தை உபாஸிக்கிறவர்கள். இவர்கள் அபரோக்ஷ-ஞானம் பிறந்த பிறகு தேஹ-நாசாநந்தரம் இங்கேயே முக்தியை அடைகிருர்கள். த்ருண-ஜீவரைக் காட்டிலும் வேறுபட்ட மனுஷ்யோத்தமர் ப்ரஹ்மத்தின் ஸத், சித், ஆநந்தம், ஆத்மா என்கிற நான்கு குணங்களே உபாஸிப்பார்கள். இந்த முக்தி-யோக்யர்கள் மோக்ஷ-ஸாதன-அநுஷ்டானத்தால் மோக்ஷத்தை அடைய யோக்யதை யுடையவர்கள். இவர்கள் ஸதாசாரம், பகவத்-பக்தி முதலான நல்ல குணங்களேயுடையவராயிருப்பார்கள். இவர்களில் சிலருக்கு சில காலத்தில் துர்க்குணம் உண்டாவது அஸுராவேசத்தாலே.

எப்போதும் ஸுக-துக்கங்களேக் கலந்து அநுபவிப்பவர்கள் நித்ய-ஸம்ஸாரிகள். இவர்கள் புண்ய-கர்மங்களால் ஸ்வர்க்கம் போவதும், பாப-கர்மங்களால் நரகம் போவதும், பூலோகத்திற்கு வருவதுமாக சுற்றிக்கொண்டேயிருப்பார்கள்,

தமோயோக்யர் தைத்யர், அஸுரர், பிசாசர், மனுஷ்யாதமர் என்று நான்கு விதம். இவர்கள் முடிவில் நித்யமான நரகத்திலேயே விழுந்துவிடுவார்கள். இவர்கள் பகவானிடத்திலும், பகவத்-பக்தர்களிடத்திலும் த்வேஷம், துராசாரம் முதலான துர்க்குணங்களையுடையவராயிருப்பார்கள்.

ஜீவாத்மாக்கள் எல்லாரும் ஞான-ஆநந்த-ஸ்வரூபர்கள். மிகவும் அணு-பரிமாணமுடையவர்கள். பகவானுக்குக் கிங்கரர்கள். முக்தி-யோக்ய-ஜீவர்களில் ஸ்தாவர-ஜீவர்களைக்காட்டிலும் பசு-பக்ஷயாதி-ஜங்கம-ஜீவர்கள் பக்தி, பகவத்-ப்ரியத்வங்களிலும், அதன் மூலமாக மோக்ஷ-தசையில் வரும் ஆநந்தானுபவத்திலும் மேற்பட்டவர்கள். இவர்களைக் காட்டிலும் மனுஷ்யர் உத்தமர்; இவர்களைவிட ப்ராஹ்மண-மனுஷ்யர் உத்தமர்; இவர்களைக் காட்டிலும் சக்ரவர்த்திகள் நூறுபங்கு குணாதிகர். சக்ரவர்த்திகளைக் காட்டிலும் மனுஷ்ய-கந்தர்வர் நூறு பங்கு குணாதிகர்கள். இப்படியே மேல் மேல் சதுர்-முக-ப்ரஹ்ம-பர்யந்தமான ஜீவர்கள் ஞானாதிகளில் தாரதம்யமுள்ளவர்கள். இந்த தாரதம்யம் இந்த ஸித்தாந்தத்திற்கு முக்யாம்சம்.

மோக்ஷமாவது ஸ்வரூப-ஆநந்த-அனுபவம். இந்த அனுபவம் ஸம்ஸார-தசையில்

கர்மத்தாலுண்டான ப்ராக்ருத-தேஹ-ஸம்பந்தத்தால் தடைபட்டு பகவதனுக்ரஹத்தால் மோக்ஷ-தசையில் இந்தத் தடை நீங்கியபிறகு வைகுண்டலோகத்தில் வரும். இதில் ஜீவர்களில் அவரவர்கள் யோக்யதைக்குத் தக்கபடி சிலருக்கு ஸாலோக்யமும், சிலருக்கு ஸாமீப்யமும், சிலருக்கு ஸாரூப்யமும், சிலருக்கு ஸாயுஜ்யமும் வரும்.

* ஸாலோக்யமாவது :—வைகுண்டலோகத்தில் எங்கேயாவது இருந்து யதேஷ்டமான போகத்தை அனுபவிப்பது. † ஸாமீப்யமாவது:—பகவத்-ஸமீபத்திலிருந்து யதேஷ்டமானபோகத்தை அனுபவிப்பது. ‡ஸாரூப்யமாவது:—பகவானைப்போல் நான்கு கைகள், சங்கு, சக்கரம் முதலியவைகளை யுடையவர்களாய் யதேஷ்டமாய் போகத்தை அனுபவிப்பது. § ஸாயுஜ்யமாவது :—பகவானுடைய சரீரத்தில் ப்ரவேசித்து யதேஷ்ட போகத்தை அனுபவிப்பது. இப்படி முக்தர்கள் எல்லாரும் தாரதம்யமுள்ளவர்களாயிருப்பார்கள்.

இந்த மோக்ஷத்திற்கு பக்தியோடு கூடின பகவதுபாஸனம் ஸாதனம். இந்த உபாஸனம் மனுஷ்யோத்தம-கணம் முதல் ப்ரஹ்ம-கணம் வரையில் ஏக-குணோபாஸனம், சதுர்-

---

* सालोक्य † सामीप्य ‡ सारूप्य § सायुज्य.

குணோபாஸனம், அநேக-குணோபாஸனம் என்று பஹு-வித-தாரதம்யத்தோடு கூடியதாயிருக்கும்.

ப்ரத்யக்ஷம், அநுமானம், ஆகமம் என்னும் இவை மூன்றும் வஸ்துக்களை அறிவதற்கு ஸாதனமான ப்ரமாணங்கள். ஸர்வ-வேதங்களுக்கும் பொருள்பரப்ரஹ்மமே என்று இந்த ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

இந்த ஸித்தாந்தத்தில் ஜீவ-ப்ரஹ்மங்களுக்கு ஸ்வரூப-பேதம் ஒப்புக்கொள்ளுகிறபடியால் இது த்வைத-ஸித்தாந்தம் என்று சொல்லப்படுகிறது.

த்வைத-ஸித்தாந்த-ப்ரகரணம் முடிந்தது.

अद्वैतसिद्धान्त प्रकरणम् ॥

அத்வைத ஸித்தாந்த ப்ரகரணம்.

இனி அத்வைத ஸித்தாந்தத்தை நிரூபிக்கிறேம். இதற்கு ப்ரவர்த்தகர் ஸ்ரீ சங்கராச்சாரியர்.

* ब्रह्मैकं परमार्थसत्तदितरन्मायामयत्वान्मृषा
ब्रह्मैवैकमुपाधिबिम्बितमतो जीवेशभावं गतम् ।
भ्रान्तिस्संसृतिरस्य तत्प्रशमनं मुक्तिस्तदध्यात्मनो
ब्रह्मैक्यावगमाच्छ्रुति श्रवणजादित्याहुरद्वैतिनः ॥

இது இந்த ஸித்தாந்தத்தின் ஸங்க்ரஹ ச்லோகம். இதன் அர்த்தம்:—

ஏகம் = தனக்கு ஸஜாதீயமானதும், விஜாதீயமானதும், ஒன்றுமில்லாததாய், தன்னிலும்

* ப்ரஹ்மைகம் பரமார்த்த-ஸத் ததிதரன்-மாயா-மயத்வான்-ம்ருஷா
ப்ரஹ்மைவைக முபாதி-பிம்பித-மதோ ஜீவேச-பாவம் கதம் ।
ப்ராந்திஸ்-ஸம்ஸ்ருதி-ரஸ்ய தத்-ப்ரசமனம் முக்திஸ்-ததப்யாத்மநோ
ப்ரஹ்மைக்யாவகமாத் ச்ருதி-ச்ரவண-ஜாத் இத்யாஹு-ரத்வைதிந: ॥

ஒரு தர்மமும் இல்லாததான, ப்ரஹ்ம— ஆத்ம வஸ்து,பரமார்த்தஸத் = பரமார்த்தமாயுள்ளது (ஆத்மவஸ்துவுக்கு ஸஜாதீயமானது மற்ருெரு ஆத்மா, விஜாதீயமானது ஆத்மாவைக்காட்டில் வேறுபட்டது)

இதனுல் இரண்டாவது ஆத்மாயில்லை என்றும்,ஆத்மாதவிர மற்ருெருவஸ்து இல்லை என்றும், ஆத்மவஸ்துவில் ஒரு தர்மமும் இல்லை என்றும் சொன்னதாகிறது.

இங்கு 'ப்ராதிபாஸிகஸத்' 'வ்யாவஹாரிகஸத்' இவைகளைக்காட்டில் ஆத்மவஸ்துவுக்கு வாசிதோன்றுவதற்காக 'பரமார்த்தஸத்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'ததிதரன் ......ம்ருஷா'—ப்ரஹ்மத்தைக்காட்டில் வேறுபட்டது மாயையின் கார்யமானதால்பொய்; 'ப்ரஹ்மை......கதம்'—ஒரு ப்ரஹ்மமே உபாதியில் ப்ரதிபலித்ததாய் அந்த ப்ரதிபலனத்தால் ஜீவனுகவும் ஈச்வரனுகவும் ஏற்பட்டது.

'ப்ராந்தி:......அஸ்ய' ஜீவாத்மாவுக்கு நான்ஞாதா, நான்கர்த்தா, நான்போக்தா, இது முதலிய ப்ராந்திதான் ஸம்ஸாரம்.

'தத்ப்ரசமனம் முக்தி:' அந்த ப்ராந்தி யின் நிவ்ருத்திதான் மோக்ஷம்,

'ததபி.....ச்ரவணஜாத்' தத்வமஸி என்கிற வேதாந்தவாக்யச்ரவணத்தால் உண்டாகும் ப்ரஹ்மாத்மைக்ய ஜ்ஞானத்தால் (தனக்கு ப்ரஹ்மத்தோடு ஐக்யஜ்ஞானத்தால்) அந்த ப்ராந்திநிவ்ருத்தி யுண்டாகிறது.

'இத்யா.....ந:' என்றிப்படி அத்வைதி வேதாந்திகள் சொல்லுகிறுர்கள்.

1. ப்ரஹ்மத்துக்கு ஸத்யத்வ நிருபண ப்ரகரணம்.

§ப்ரிதிவீ, ஜலம்,தேஜஸ்,வாயு, ஆகாசம் என்று பெயருடைய பஞ்சபூதங்களும், அவைகளுடைய கலப்பாலுண்டான ‡'பௌதிகம்' என்று பெயருடைய சரம், அசரம் என்று இரண்டு வகைப்பட்ட நமக்குத் தென்படும் எல்லா வஸ்துக்களும் வாஸ்தவமானவையன்று. பாலைவனத்தில் †மத்யாஹ்நத்தில் ஸூர்யகிர

---

§ पृथिवी—பூமி; तेजः—அக்னி.

‡ भौतिकं—பூதங்களிலிருந்து உண்டானவை.

† मध्याह्नम्—

ணங்கள் பரவ அவ்விடத்தில் வாஸ்தவமாயில்லாத ஜலப்ரவாஹமும் அதின் அலைகளும் காணப்படுவதுபோல இந்த ப்ரபஞ்சமும் உண்மையாயில்லாதபோதிலும் உள்ளது போல் தோன்றுகிறது. அங்கே பரவிய சூரியகிரணங்கள் ஜலம்போல் தென்படுவதுபோல, இங்கும் எங்கும் பரவிய ஒரு வஸ்து இப்படி ப்ரபஞ்சரூபமாய்க் காணப்படுகிறது. இதுதான் பரப்ரஹ்மமென்று சொல்லப்படுகிறது.

வாஸ்தவமாயுள்ள ப்ரஹ்மஸ்வரூபம் தெரியாமல் பொய்யான ப்ரபஞ்சம் காணப்படுவானேன் எனில்—வாஸ்தவமான ப்ரஹ்மஸ்வரூபத்திற்கு அநாதிகாலமாக மாயையென்று ஒரு வஸ்துவின் ஸம்பந்தம் வந்திருக்கிறது. இந்த மாயைக்கு தனக்கு ஆதாரமான ப்ரஹ்மத்தை மறைப்பது ஸ்வபாவம். அப்படி மாயையினால் மறைக்கப்பட்டதால் ப்ரஹ்மஸ்வரூபம் உள்ளபடி ப்ரகாசிப்பதில்லை.

இந்த ப்ரஹ்மத்துக்கு ஸத்தை, ப்ரகாசம், ஆநந்தம் என்று மூன்று ஆகாரங்கள் உண்டு. அதனால்தான் இது ஸச்சிதாநந்தஸ்வரூபமெ

ன்று சொல்லப்படுகிறது. இந்த மூன்று ஆகாரங்களும் ப்ரஹ்மஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறுபட்டவையன்று. இந்த ப்ரஹ்மஸ்வரூபத்தில் ஒரு குணமும் கிடையாது. ஆகையால் இது நிர்குணம் என்றும் நிர்விசேஷம் என்றும் சொல்லப்படுகிறது.

ஸச்சிதாநந்த ரூபமான இந்த ப்ரஹ்மம் வாஸ்தவமாக உள்ளதென்று 'ஸத்யமாயும் விஜ்ஞானமாயும், ஆநந்தமாயும் உள்ளது ப்ரஹ்மம்' என்றிது முதலிய ச்ருதிகளாலும் அதற்கு ஒத்தாசையான யுக்திகளாலும் கிடைக்கிறது. யுக்தி எதுவெனில்—கீழ்ச்சொன்ன த்ருஷ்டாந்தத்தில் பாலைவனத்தில் பரவின ஸூர்யகிரணத்தில் ஜலப்ரமம் உண்டாகிறது. இதுபோலவே அந்தந்த ப்ரமங்களில் ஒரு வஸ்துவிலே மற்றொரு வஸ்துவுக்கு ப்ரமம் உண்டாகிறது. அவ்விதமே இங்கும் இந்த ப்ரபஞ்சத்தினுடைய ப்ரமம் ஒரு வஸ்துவில் உண்டாயிருக்கவேண்டும். அந்த வஸ்து ஸத்யமன்று என்று ஒப்புக்கொண்டால், அதன் விஷயமான ப்ரமத்திற்கு ஆதாரம் ஒன்று ஒப்புக்கொள்ளவேண்டும். இப்படியே மேல் மேல்

†ஆதார ‡பரம்பரை ஒப்புக்கொள்ளவேண்டிய தாக வருகிறது. ஆகையால் ப்ரபஞ்சப்ரமத்திற்கு ஆதாரமான வஸ்து ஸத்யமாக உள்ளது என்று ஒத்துக்கொள்ளவேண்டும் என்பதே.

॥ * प्रपञ्चमिथ्यात्वनिरूपणम् ॥

ச்ருதிப்ரமாணத்தால் இந்த ப்ரஹ்மம் ஸத்யமாய் ஸித்திக்கிருப்போல், ப்ரத்யக்ஷப்ரமாணபலத்தால் ப்ரபஞ்சம் ஸத்யமாக ஸித்திக்கத் தடையென்னவென்றால்—இது ஸத்யமென்று சொல்ல வழியில்லை. இது ஸத்யமாக இருந்தால் எப்போதும் காணப்படவேண்டும். மூன்று காலங்களிலும் உள்ளதுதான் பரமார்த்த ஸத்யமாக ஆகும். ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்கள், உண்டாவதற்கு முன்னும், நாசத்திற்குப் பின்னும் காணப்படுவ

---

† ஆதாரம்—எதில் ஒன்றுக்குத் தோற்றம் ஏற்படுகிறதோ அது ஆதாரம்.

‡ பரம்பரை—ஒன்றின்மேலொன்றாக தொடர்ந்து ஒரு முடிவின்றிக்கே வருவது.

* ப்ரபஞ்ச—மித்யாத்வ—நிரூபணம்.

தில்லை. ஸத்யமாயிருந்தால் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனப்படும் மூன்று காலங்களிலும் இருப்பதாகக் காணப்படவேண்டும். அப்படியன்றிக்கே ஒரு காலத்திலுண்டாய், சிலகாலமிருந்து, பிறகு நாசமடைந்து முன்னும் பின்னும் காணப்படாத வஸ்துக்கள் பரமார்த்தஸத்தாக ஆகமாட்டா. ஆகையால் இந்த்ர ஜாலாதிகளில் மாயையினால் அஸத்யமான வஸ்துக்கள் தோன்றுகிறது போல இங்கும் மாயையினால் இந்த ப்ரபஞ்சம் உள்ளதாகத் தோன்றுகிறது. இந்த அர்த்தம் 'மாயையையுடையவன் ஒருவன் இப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிறான்' என்றும், 'பரமாத்மா மாயைகளால் அநேக ரூபமுள்ளவனாய்த் தென்படுகிறான்' என்றும் சொல்லும் பல ச்ருதிகளால் கிடைக்கிறது.

மாயையாவது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற குணத்ரயமயமாயும், *ஸத் என்றும் †அஸத் என்றும் சொல்லமுடியாததாயும், தன்

* सत्—ஒரு காலத்திலும் இல்லையென்று சொல்லவொண்ணாத ப்ரஹ்மம்போன்றவை.

† असत्—ஒருகாலத்திலும் இல்லாத முயற்கொம்பு போன்றவை.

ஞச்ரயத்தை மறைக்கும் ஸ்வபாவமுள்ளதா யும், மேல் மேல் விகாரத்தை யடைவதுமான ஒரு வஸ்து. இது அஜ்ஞானம், அவித்யை, மோஹம் என்கிற பெயர்களாலும் வ்யவஹரிக் கப்படும். சில ச்ருதிகள் இந்த மாயைக்கு நாசத்தைச் சொல்லுகிறபடியால், இந்த மாயை ஸத்யமன்று. இந்த மாயை ப்ரஹ்ம மத்தை ஆச்ரயித்து, அதன் ஸ்வரூபத்தை மறைத்து, ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், ப்ருதிவீ என்கிற விகாரங்களையும், அதிலிருந் துண்டாகும் மற்ற விகாரங்களையும் அடைந்து வருகிறது. அப்போது ப்ரஹ்மம் அந்தந்த ரூபமாய்த் தோன்றுகிறது. காப்பு முதலிய நகைகளுக்கு தங்கம் காரணமாகிறதுபோல ப்ருதிவீ முதலியவைகளுக்கு மாயை மூலகார ணமாயிருக்கும். இப்படி அஸத்யமான *மாயா கார்யமானதால் இந்த ப்ரபஞ்சம் அஸத்யமெ ன்று கிடைக்கிறது.

அன்றிக்கே ச்ருதிகள், 'பலவாகத் தோன்றும் வஸ்துக்கள் ஒன்றும் இல்லை'

---

* மாயாகார்யம்— மாயையிலிருந்து உண்டாகும் வஸ்து.

என்று சொல்லுகிறபடியாலும், இந்த ப்ரபஞ்சம் §மித்யை என்று கிடைக்கிறது. ஆனால் முன்சொன்ன த்ருஷ்டாந்தத்தில் ஸூர்யகிரணத்தில் தென்படும் ஜலத்துக்கும் ப்ரஹ்மஸ்வரூபத்தில் தோன்றும் ப்ரபஞ்சத்திற்கும் வாசியுண்டு: அந்த ஜலாதிகள் ப்ராதிபாஸிக-ஸத்; ப்ருதிவீ முதலிய ப்ரபஞ்சம் வ்யாவஹாரிக--ஸத்.

ஸத் என்பது *ப்ராதிபாஸிகம், வ்யாவஹாரிகம், பாரமார்த்திகம் என்று மூன்றுவகைப்படும். இதில் ப்ராதிபாஸிகஸத்தாவது ப்ரஹ்மம் தவிர வேறு வஸ்துக்களில் தோன்றி, அந்த வஸ்துவின் உண்மையான ஸ்வரூபத்தை அறிவதனால் நிவ்ருத்திப்பது. அதாவது தூரத்திலிருந்து பார்க்கும்பொழுது முத்துச்சிப்பியின் ஸ்வரூபம் மறைந்து அது வெள்ளி என்று ப்ரமம் உண்டாகிறது. பின்பு ஸமீபத்தில் போய்பார்த்தால் இது வெள்ளி யன்று, †சுக்தி என்று தெரிகிறது. இங்கு ப்ரமத்திற்கு

§ मिथ्या—பொய்.

* प्रातिभासिकं, व्यावहारिकं, पारमार्थिकम्

† शुक्तिः—முத்துச்சிப்பி

ஆதாரமான சுக்தியினுடைய ஸ்வரூபஜ்ஞான த்தால் வெள்ளி நிவ்ருத்திக்கிறது. இவ்வாறு முத்துச்சிப்பியில் தோன்றும் வெள்ளிதான் 'ப்ராதிபாஸிகஸத்' என்று சொல்லப்படுகிறது.

வ்யாவஹாரிகஸத்தாவது, ப்ரஹ்மஸ்வரூபத்தில் தோன்றும் ஆகாசம் முதலிய பூத பௌதிகப்ரபஞ்சம். ப்ரஹ்மத்தின் உண்மையான ஸ்வரூபம் மறைந்து அதில் அஜ்ஞானத்தால் ஆகாசாதி-ப்ரபஞ்சம் ஏற்படுகிறது. வேதாந்த வாக்யங்களால் தத்வஜ்ஞானம் பிறந்து இரண்டாவது இல்லாததான ப்ரஹ்மஸ்வரூபத்தின் ஸாக்ஷத்காரம் உண்டாகும்போது முன் ஏற்பட்ட ஆகாசாதி-ப்ரபஞ்சம் நசித்துப் போகிறது. இதனுல் ப்ரஹ்மஸ்வரூபத்தின் தத்வஜ்ஞானம் தவிர மற்றெரு தத்வஜ்ஞானத்தால் நசிப்பது ப்ராதிபாஸிக-ஸத் என்றும், ப்ரஹ்மஸ்வரூப-தத்வஜ்ஞானம் ஒன்றினுல் மாத்ரம் நசிப்பது வ்யாவஹாரிக-ஸத் என்றும் ஏற்படுகிறது.

பரமார்த்தஸத்தாவது—ஒருகாலத்திலும் †நிவ்ருத்தியாமல் எல்லாக் காலங்களிலும்

---

† निवृत्तिः—நீங்குதல்.

‡அநுவர்த்திக்கும் வஸ்து. இதுதான் நிர் குணப்ரஹ்மம்.

---

* ॥ जीवेश्वरभेदभ्रमनिरूपणम् ॥

ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை மறைக்கும் ஸ்வபாவமுள்ளதான மாயைக்கு இரண்டு அம் சமுண்டு. ஒன்று தலையெடுத்த ஸத்வகுணத்தை யுடையதாயும், மற்றொன்று குறைந்த ஸத்வ முடையதாயும் இருக்கும். இவ்விரண்டில் முத லாவது மாயை யென்றும்,இரண்டாவது அவி த்யை யென்றும் சொல்லப்படும். இந்த இர ண்டும் கண்ணாடிபோல் பிம்பத்தை க்ரஹிக்க சக்தியுள்ளது. ஆகையால் ப்ரஹ்மம் இவை களில் ப்ரதிபலிக்கிறது. இதில் மாயையில் ப்ரதிபிம்பம் ஈச்வரனென்றும், அவித்யையில் ப்ரதிபிம்பம் ஜீவனென்றும் ஒரே ப்ரஹ்மத்தில் பேதம் உண்டாகிறது. சிலர் மாயையில் ப்ரதி பிம்பம் ஈச்வரனென்றும், மாயாபரிணாமமான அந்தக்கரணத்தில் ப்ரதிபிம்பம் ஜீவனென் றும் சொல்லுகிறார்கள். அவித்யாம்சங்களும்

---

‡ अनुवृत्तिः—இடைவிடாமல் இருத்தல்.

* ஜீவேச்வரபேதப்ரமநிரூபணம்.

அந்தக்கரணங்களும் அநேகங்களாகையால் அவைகளில் ப்ரஹ்ம--ப்ரதிபிம்பத்தால் பல ஜீவர்கள் ஏற்படுகிறார்கள்.

கண்ணாடியில் ப்ரதிபலிக்கிற முகம் நேரிலிருக்கும் முகத்தைக் காட்டிலும் உண்மையில் வேறன்று, ஆகிலும் வேறாகத் தோன்றுகிறது. அப்படியே இரண்டு கண்ணாடிகளில் ஒரு முகம் ப்ரதிபலித்தால் கண்ணாடியின் பேதத்தால் ப்ரதிபலிக்கும் முகங்களும் வேறுவேறாகத் தோன்றுகின்றன. வாஸ்தவத்தில் எல்லாம் ஒன்றே. இவ்விதமே ஒரே ப்ரஹ்மம் இரண்டு வஸ்துக்களில் ப்ரதிபலிப்பதால் மூன்றும் வேறுவேறாகத் தோன்றுகின்றன. அவற்றில், ஈச்வரரூபமான ப்ரதிபிம்பத்துக்கு ஆச்ரயமான மாயையில் அதிகமான ஸத்வகுணமிருப்பதால், அது அதிகமான ஞானம், சக்தி, முதலியவைகளை யுள்ளதாயிருக்கும். கண்ணாடியிலுள்ள தோஷங்களெல்லாம் அதில் ப்ரதிபலித்த முகத்தில் தோன்றுகிறதுபோல, மாயையிலுள்ள அதிகமான ஞானம், சக்தி முதலியவை அதில் ப்ரதிபலிக்கிற ப்ரஹ்மத்தில் தோன்றுகிறது. அதனால் ஈச்வரன் ஸர்வஜ்

ஞன், ஸர்வசக்தன், ஸத்யஸங்கல்பன் முத லான வ்யவஹாரங்கள் நடந்துவருகின்றன. இவனுக்கு அதிகமான ஞானசக்திகள் இருப் பதால் இவன் *ஆராத்யனும், தன்னை ஆரா திப்பவர்களுக்கு †பலப்ரதனும் ஆகிறான். இந்த ஈச்வரன்தான் ஸகுணப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிறான்.

ஜீவரூபமான ப்ரதிபிம்பத்துக்கு ஆச்ரய மான அவித்யை அல்லது அந்தக்கரணம் ஸத்வகுணம் குறைவாயிருப்பதால் அல்பமான ஞானசக்திகளை யுடையதாயிருக்கும். அதனால் அதில் ப்ரதிபலிக்கிற ப்ரஹ்மம் அல்பஜ்ஞ மாய் அல்பசக்திகமாய்த் தோன்றுகிறது. இத ளுல் ஜீவன் அல்பஜ்ஞன் அல்பசக்திகன் என்கிற வ்யவஹாரம் நடந்துவருகிறது.

மாயா§பரிணாமமான அந்தக்கரணத்தின் விகாரங்களான ஞானம், ‡இச்சா, ¶க்ருதி,

---

* आराध्य : —பூஜிக்கப்படுபவன் ;

† फलप्रद : —பலத்தைக்கொடுப்பவன் ;

§ பரிணாமம்—விகாரம்—மாறுதல்.

‡ इच्छा : —ஆசை ;

¶ कृतिः —முயற்சி ;

த்வேஷம், ஸுகம், துக்கம் முதலானவைகள் அந்தக்கரணத்தில் ப்ரதிபலிக்கிற ஜீவனிடத்தில் தோன்றுகிறபடியால் ஜீவனுக்கு நான் *ஞாதா, ¶போக்தா, †கர்த்தா, ஸுகீ, துக்கீ முதலிய வ்யவஹாரங்கள் நடக்கின்றன.

ஜலத்தில் ப்ரதிபலித்த சந்திரனிடத்தில் ஜலத்திலுண்டாகும் அசைதல் முதலியவை தோன்றி, சந்திரன் அசைகிறுன் என்று ப்ரமத்தால் சொல்லப்படுவதுபோல் அந்தக்கரணத்தில் உண்டாகும் ‡சலநாதிவிகாரம் அதில் ப்ரதிபலித்த ப்ரஹ்மத்தில் தோன்றுவதால், ஜீவன் §இகலோக பரலோக ஸஞ்சாரம் செய்கிறுன் என்கிற வ்யவஹாரம் உண்டாகிறது.

ஜீவனுக்கு ஞானம், சக்தி முதலியவை குறைவு. அதனுல் ராகத்வேஷாதிகளாலே தனக்கு இஷ்டமான வஸ்துவை யடைவதற்

* ज्ञाता—அறிபவன்.

¶ भोक्ता—அனுபவிப்பவன்.

† कर्ता—செய்பவன்.

‡ चलनादिविकारः—அசைதல் முதலிய செய்கைகள்.

§ इहलोकपरलोकसञ्चारः—இவ்வுலகம், மேலுலகம், இவைகளுக்குப் போவது, வருவது.

கும், அநிஷ்டமாய்த் தோன்றுவதை விலக்கு வதற்கும் சக்தியற்றவனாய், அதற்காக ஈச்வரனை உபாஸித்து, அவனுடைய அநுக்ரகத்தால் ஐச்வர்யம் முதலான †ஸாம்ஸாரிக பலத்தை அடைகிறான். §நிஷ்காமனாய் ஈச்வரனை உபாஸித்தால், அவனுடைய அநுக்ரகத்தால் சித்தசுத்தி உண்டாகி வேதாந்தச்ரவணத்திற்கு ‡அதிகாரியாகிறான்.

|| * बन्धमोक्षनिरूपणम् ||

இப்படி ப்ரஹ்மம் அந்தக்கரணத்தில் ப்ரதிபலிப்பதால் ஏற்பட்ட ஜீவாத்மா உண்மையில் நிர்விகாரமான ப்ரஹ்மமே. இப்படி இருந்தபோதிலும், அழுக்கற்ற ஸ்படிகத்தில் அதன் ஸமீபத்தில் வைக்கப்பட்ட செம்பரத்தம்பூவின் சிவப்புத் தோன்றுவதுபோல, இந்த

---

† सांसारिकफल—ஸ்வர்க்கம், பூமி இவைகளிலேயே அனுபவிக்கக்கூடிய பலம்.

§ निष्कामः—(பலத்தில்) ஆசையற்றவனாய்;

‡ अधिकारः—ஒரு காரியத்தை செய்வதற்குவேண்டிய யோக்யதை. இதை யுடையவன் அதிகாரி.

* பந்தமோக்ஷநிரூபணம்.

ஜீவனுக்கு †உபாதியான அந்தக்கரணத்தின் விகாரமான ராகம், த்வேஷம் முதலியவை இவனிடத்தில் தோன்றுகின்றன. இந்த ப்ராந்திதான் ஸம்ஸாரம்.

இப்படி ஜீவனுக்கு வந்த ஸம்ஸாரம் நீங்குவதற்கு வழி என்னவென்றால் யாகம், தானம்,ஹோமம் முதலிய வைதிககர்மங்களைக் கொண்டு இந்த ஜீவாத்மா ஈச்வரனை ஆராதித்தால், அவனுடைய அநுக்ரஹத்தால் சித்த சுத்தி பிறக்கிறது. பிறகு மோக்ஷத்தில் ஆசையுண்டாய், அதற்காக வேதாந்தச்ரவணத்தில் முயற்சிக்கிறான். பிறகு குருவினுபதேசத்தால் ‡'தத்த்வமஸி' என்கிற வேதாந்தவாக்யத்தின் அர்த்தஜ்ஞானம் உண்டாகிறது. இந்த வாக்யத்தில் 'தத்' என்கிற பதத்துக்கு ஸச்சிதாநந்தரூபமாய், ஸர்வவிகாரரஹிதமாய் அத்விதீயமான ப்ரஹ்மம் பொருள். த்வம் என்கிற பதத்துக்கு,முஞ்ஜம் என்று சொல்லப்படும் புல்லின் மேல் புரைகளைக்கழித்து அதன் நடுவிலிருக்கும் குருத்தை வேறாக எடுக்குமாப்போலே,

---

† उपाधिः ப்ரதிபலனத்திற்கு ஆதாரமாயிருப்பது.

‡ तत् त्वमसि

சரீரம், இந்திரியம் முதலிய *உபாதிகளோடு கலந்திருக்கும் ஜீவாத்ம ஸ்வரூபத்தை §விசாரத்தினுல் அவைகளைக்காட்டிலும் வேறுபட்டதாக விவேகிக்கப்பட்ட சுத்தாத்மஸ்வரூபம் பொருள். இவையிரண்டுக்கும் †அபேதம் தத், த்வம் என்கிற ‡வாக்கியத்திற்கு அர்த்தம்.

இப்படி குருபதேசத்தாலே ¶பரோக்ஷரூபமான *நிர்விசேஷசிந்மாத்ர ப்ரஹ்மாத்

---

* இங்கு உபாதி என்றால் தனக்கு ஸ்வபாவமாகவே இல்லாமல் நடுவில்வந்தவை என்று அர்த்தம்.

† அபேதம்—பேதமின்மை.

‡ वाक्यं—பதங்களின் சேர்க்கை.

§ ஆராய்தல்.

¶ கண்முதலிய இந்திரியங்களால் நாம் ஒரு விஷயத்தை அறியும்போது உண்டாகும் ஞானத்திற்கு ப்ரத்யக்ஷம் அல்லது அபரோக்ஷ ஞானம் என்று பெயர். அநுமானம் அல்லது சாஸ்திரத்தால் உண்டாவதற்கு பரோக்ஷஞானம் என்றுபெயர்.

* நிர்விசேஷம் என்றால் ஒருவிதகுணமும் தர்மமுமற்றது.

चिन्मात्र—தானுகவே ப்ரகாசிக்கிறஞானஸ்வரூபமானது.

ब्रह्मात्मैक्यं—ப்ரஹ்மமும் ஆத்மாவும் ஒன்றே என்பது.

மைக்யஜ்ஞானம் உண்டாகிறது. பின்பு குரு முகத்தாலே கேட்ட அர்த்தத்தை இடைவிடாமல் பாவனை பண்ணுவதால், 'தத் த்வமஸி' வாக்யத்தால் ஸாக்ஷாத்காரரூபமான முன் சொன்ன ஜ்ஞாநம் உண்டாகிறது. அப்போது ஸகல ப்ராந்தியும் கழிந்து ப்ராந்திகளுக்கு மூலமான அவித்யையும் கழிந்து சக்கரத்தை சுற்றிவிட்டு, நாம் கையை எடுத்துவிட்டாலும் சுழலுவது சிலகாலம் அநுவர்த்திக்கிறுப் போல இந்த கர்மத்தால் ஆரம்பிக்கப்பட்ட சரீரம் மாத்திரம் சிலகாலம் நிற்கிறது. இந்த நிலைமைதான் ஜீவன்முக்த்யவஸ்தை என்று சொல்லப்படுகிறது. பின்பு *ப்ராரப்தகர்மம் கழிந்ததும் சரீரம் கழிந்து விடுகிறது. இந்த நிலை †விதேஹமுக்தி என்றும் ‡கைவல்யம் என்றும் சொல்லப்படும் பரமமோக்ஷம். அதாவது அவித்யாரூபமான ஆவரணம் நிச்சேஷமாய்க்

---

* प्रारब्धकर्म— பலத்தைக்கொடுக்க ஆரம்பித்த புண்யபாபகர்மம்.

† विदेहमुक्तिः

‡ कैवल्यम्

கழிந்து §அகண்டாநந்தப்ரஹ்மஸ்வரூபாவிர்பாவம். இந்த மோக்ஷத்தைப் பெறுவதற்கு வேறு உலகங்களுக்குப் போகவேண்டா. இருந்த இடத்திலேயே கிடைக்கும்.

இந்த ஸித்தாந்தத்தில் ப்ரஹ்மம் தவிர வேறொன்றும் ஸத்யமானது இல்லை என்றும், ஜீவப்ரஹ்மங்கள் அபின்னமென்றும் ஒப்புக்கொள்ளுகிறபடியால் இதற்கு அத்வைதஸித்தாந்தம் என்ற பெயர் உண்டாயிற்று.

அத்வைத ஸித்தாந்த ப்ரகரணம் முடிந்தது.

---

§ अखण्डानन्द—பூர்ண ஆநந்தரூபமான

आविर्भाव:—மறைந்து இருந்த வஸ்துவினுடைய தோற்றம்.

॥ विशिष्टाद्वैतसिद्धान्तप्रकरणम् ॥

விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரகரணம்.

இனி விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிரூபிக்கிறோம். இதற்கு ப்ரவர்த்தகர் ஸ்ரீ பகவத் ராமாநுஜன்.

* श्रीमल्लक्ष्मणयोगिनस्तु भुवनं
सत्यं तदीशः श्रियः-
कान्तो ब्रह्म स एव सोऽखिलतनुः
भिन्नास्ततश्चेतनाः ।
सत्या संसृतिरीशनिग्रहकृता
मुक्तिस्तु भक्त्यादिना
तत्प्राप्तिः परमे पदे तदनुभू-
त्याख्येति संचक्षते ॥

---

* ஸ்ரீமல் லக்ஷ்மண—யோகிநஸ்து புவநம்
ஸத்யம் ததீச : ஸ்ரிய :
காந்தோ ப்ரஹ்ம ஸ ஏவ ஸோகில—தநு :
பிந்நாஸ்—தத : சேதநா : ।

இது இந்த ஸித்தாந்தத்திற்கு ஸங்க்ரஹ ச்லோகம். இதனர்த்தம் :—

ஸ்ரீ பகவத் ராமாநுஜரோ பின்வருமாறு ஸாதித்தருளுகிறார்:—‘ புவநம் ஸத்யம் ’—ப்ரபஞ்சம் வாஸ்தவமாயுள்ளது. முத்துச்சிப்பியில் தோன்றும் வெள்ளியைப்போல் பொய்யன்று. அது ப்ராந்தியினால் காணப்படுவதே யொழிய ஒரு காரியத்துக்கும் உபயோகப்படுகிறதன்று. கடையில் காணப்படும் வெள்ளி பாத்திரம் முதலியவைகளாக செய்யப்பட்டு, அந்த பாத்திரங்கள் ஜலம் முதலியவை கொண்டுவர உபயோகப்படுகிறது. ஆகையால் இது பொய்யன்று. மேலும் ஈச்வரன் ப்ரக்ருதி என்கிற வஸ்துவைக்கொண்டு இந்த ப்ரபஞ்சத்தை தன் ஸங்கல்ப மாத்திரத்தாலே ஸ்ருஷ்டிக்கிறான் என்று ச்ருதி சொல்லுகிறபடியால், ஸ்ருஷ்டிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இந்த ப்ரபஞ்சம் பொய்யாகமாட்டாது. பொய்

ஸத்யா ஸம்ஸ்ருதி—ரீச—நிக்ரஹ—க்ருதா
முக்திஸ்து பக்த்யாதிநா
தத்—ப்ராப்தி : பரமே பதே தத நு—
பூத்யாக்யேதி ஸஞ்சக்ஷதே ॥

யான வஸ்துவுக்கு ஸ்ருஷ்டி ஸம்பவியா தன்றோ? மாயையை உபகரணமாகவுடைய ஈச்வரன் இந்த ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிறான். 'மாயையாவது ப்ரக்ருதி,' என்று ச்ருதி சொல்லுகிறது. இங்கு ப்ரபஞ்ச ஸ்ருஷ்டிக்கு மாயை உபகரணமென்றும், அந்த மாயையாவது ப்ரக்ருதி என்றும் கிடைக்கிறது. இங்கு ப்ரபஞ்சத்துக்கு மூலமாகச் சொன்ன ப்ரக்ருதி விசித்ரமான ப்ரபஞ்சரூப கார்யத்தை உண்டாக்குகிறபடியால் மாயை என்று சொல்லப்பட்டதேயொழிய, அவாஸ்தவம் என்கிற அபிப்ராயத்தால் அன்று. மாயை என்கிற சப்தத்துக்கு அவாஸ்தவம் என்கிற அர்த்தமும் கிடையாது.

* मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम् ।
संभवः सर्वभूतानां ततो भवति भारत ॥

ஜகத்துக்கு மூலகாரணமான என்னுடையதான ப்ரக்ருதி என்கிற வஸ்துவில் ஜீவஸமுதாயத்தை நான் சேர்க்கிறேன். இந்தக் காரண

* 'மமயோநிர் மஹத் ப்ரஹ்ம தஸ்மிந் கர்ப்பம் ததாம்யஹம் । ஸம்பவஸ்ஸர்வ பூதாநாம் ததோபவதி பாரத ।' (பகவத்கீதை அத். 14 ச்லோ. 3.)

த்தால் ஸர்வபூதங்களும் உண்டாகின்றன என்று இந்த ச்லோகத்தின் அர்த்தம். இதில் அசேதனமான ப்ரக்ருதியோடு சேதனவஸ்துவை பகவான் சேர்ப்பதால் இந்த ப்ரபஞ்சம் உண்டாகிறது என்று சொல்லியிருப்பதால் இந்த ப்ரபஞ்சம் ப்ரஹ்மத்தின் அஜ்ஞானத்தால் கல்பிதமாகிறது என்று சொல்லுவதற்குக் கொஞ்சமும் இடமில்லை.

'ததீச:—காந்த:'—ஶ்ரிய: பதியான ஶ்ரீமந்நாராயணன் அந்த ப்ரபஞ்சத்துக்கு ஈச்வரன்.

'ப்ரஹ்ம ஸ ஏவ'—அவன்தான் பரப்ரஹ்மம். தைத்திரீயோபநிஷத்தில் ப்ருகுவல்லியில், 'எது ஜகத்காரணமோ அது ப்ரஹ்மம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாராயணோபநிஷத்து முதலான சில உபநிஷத்துக்களில் 'நாராயணன் ஜகத்காரணம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நாராயணன்தான் ப்ரஹ்மம் என்று கிடைக்கிறது. நிர்குணப்ரஹ்மம் என்று வேறொன்று கிடையாது. உபநிஷத்தில் ப்ரஹ்மம் என்று எதனால் சொல்லப்படுகிறது? என்று ஒரு கேள்வி

யைக் கேட்டு, இதனிடத்தில் பெரியதான குணங்கள் இருக்கிறபடியால், இது ப்ரஹ்மம் என்று சொல்லப்படுகிறது என்று பதில் சொல் லப்பட்டிருக்கிறது.

ஆகையால், ப்ரஹ்மசப்தம் பெரியதான குணங்களையுள்ள வஸ்துவைச் சொல்லுகி றது என்று கிடைக்கிறபடியால், குணமில் லாத வஸ்துவை இது சொல்லமாட்டாது. ஆகையால், ஸகல கல்யாண குணங்களையும் உடையவனை ஸ்ரீமந்நாராயணனைத்தான் இந்த ப்ரஹ்ம சப்தம் சொல்லுகிறது. அவன் தான் ப்ரஹ்ம சப்தத்துக்குப் பொருள்.

ஸ:அகிலதநு:--அந்த ஈச்வரன் சேதனர் கள், அசேதன வஸ்துக்கள் இவை எல்லா வற்றையும் சரீரமாக உடையவன். ஒரு சேத னனுக்கு *நியதாதேயமுமாய் நியத நியாம்ய முமாய், நியத சேஷமுமான த்ரவ்யம் அந்த சேதனனுக்கு சரீரம் என்று சொல்லப்படு கிறது.

* नियताधेय.

நியதாதேயமாகையாவது— அந்த சேத னனுடைய ஸ்வரூபத்தை எப்பொழுதும் ஆச்ரயித்திருக்கை, அதாவது, அவன் ஸ்வரூபத்தின் ஸம்பந்தத்தால் நிலைபெற்று அழியாமலிருக்கை.

நியதநியாம்யமாகையாவது—சேதனனுடைய ஸங்கல்பத்தால் தாங்கப்பட்டிருக்கை.

நியதசேஷத்வமாவது— அந்த சேதனன் ப்ரயோஜனத்துக்காகவே யிருக்கை.

நம்முடைய சரீரம் இந்த ஜீவாத்ம ஸ்வரூபத்தின் ஸம்பந்தம் இருக்கும்வரையில் இருந்து, அது தப்பிப்போனபோது அழிந்து போகிறது. ஆகையால் இந்த சரீரத்துக்கு சேதனஸ்வரூபம் ஆதாரமாய், அதனை ஆச்ரயித்திருக்கிறபடியால் இந்த சரீரம் ஆதேயமாய் இருக்கிறது. விழித்திருக்கும்போது அவனுடைய ஸங்கல்பத்தால் தாங்கப்பட்டு கீழே விழாமல் இருக்கிறது. அவனுடைய புண்ய பாபங்களாகிற கர்மத்தின் பலங்களான ஸுக துக்கங்களின் அநுபவமாகிற, அவனுடைய ப்ரயோஜனத்துக்காகவே இந்த சரீரம் உண்

டாயிருக்கிறது. ஆகையால் இது அவனுக்கு சரீரமாகிறது. இப்படியே சேதநாசேதன வஸ்துக்களெல்லாம், ஈச்வரனுடைய ஸ்வரூபத்தின் ஸம்பந்தத்தால் நிலைபெற்று அழியாமல், அவன் ஸங்கல்பத்தால் தாங்கப்பட்டு லீலா ரஸம் போகரஸம் ஆகிய அவனுடைய ப்ரயோஜனத்துக்காகவே யிருக்கிறபடியால், இவையெல்லாம் ஈச்வரனுக்கு சரீரமாகிறது. இந்த அம்சம் பலச்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிந்நா:.........சேதநா:'—இந்த ஜீவாத்மாக்களெல்லாம் ஈச்வரனைக்காட்டில் ஸ்வத: வேறுபட்டவர்கள்.

'ஸத்யா.......க்ருதா' இஜ்ஜீவாத்மாவுக்கு கர்மத்தால் நேர்ந்த ப்ரக்ருதி ஸம்பந்தம் ஸம்ஸாரம். அந்த ஸம்பந்தம் ஈச்வரனுடைய நிக்ரஹ ஸங்கல்பத்தால் உண்டாகிறபடியால் வாஸ்தவமாயுள்ளது. அந்த ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் உண்டாகும் ஆசை, த்வேஷம், ஸுகம், துக்கம், இவை முதலானவைகளும், அவற்றின் அநுபவங்களும், வாஸ்தவமாயுள்ளபடியால் அது ப்ராந்தியன்று.

'முக்திஸ்து......ததநுபூத்யாக்யா'— ஈச்வரன் விஷயத்தில் இந்த சேதனன் பண்ணும் பக்தி, ப்ரபத்தி இவையிரண்டில் ஒன்ருல் பரமபதம் என்கிற ஒரு லோகத்தில் அந்த ஈச்வரனைக்கிட்டி அவனை அனுபவிப்பது மோக்ஷம்.

ச்வேதாச்வதரோபநிஷத்தில் ஈச்வரனைத்தொடங்கி 'ப்ரக்ருதிக்கும் ஜீவாத்மாவுக்கும் பதி' என்றும் 'ஸம்ஸாரத்தினின்றும் மோக்ஷத்துக்கும் ஸம்ஸார பந்தத்துக்கும் ஹேதுவானவன்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு, ஈச்வரன் ஜீவாத்மாவுடைய ஸம்ஸார பந்தத்துக்கும் ஸம்ஸாரத்தினின்றும் விடப்படுவதற்கும் காரணபூதன் என்று சொல்லுகிறபடியால், ஈச்வரன் ஜீவாத்மாவுக்கு ஸம்ஸார ஸம்பந்தத்தையும் மோக்ஷத்தையும் உண்டாக்குகிருன் என்று கிடைக்கிறது.

तानहं द्विषतः क्रूरान् संसारेषु नराधमान् ।
क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ॥

" தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் |
க்ஷிபாம்யஜஸ்ரமசுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு "

ப. கீ. 16-19.

இந்தச்லோகத்தில் என்னிடத்தில் த்வேஷம் முதலான துஷ்கர்மங்களைச் செய்யுமவர்களை ஸம்ஸாரத்தில் தள்ளுகிறேன். அதிலும், அஸுர ஜன்மத்தில்தள்ளுகிறேன் என்று பகவான்தானே சொல்லியிருக்கிறபடியாலும்,

तेषामहं समुद्धर्ता मृत्युसंसारसागरात् ।
भवामि न चिरात् पार्थ मय्यावेशितचेतसाम् ॥

இந்தச்லோகத்தில், "என்னிடத்தில் மிகவும் பக்தி பண்ணுபவர்களை ஸம்ஸாரமாகிற ஸாகரத்தினின்றும் எடுத்து விடுகிறேன் மோக்ஷத்தை அடையும்படி செய்கிறேன்" என்று பகவானே சொல்லியிருக்கிறபடியாலும், பாபகர்மங்களைச் செய்பவர்களுக்கு அதற்குப் பலனுக ஜந்ம பரம்பரையாகிற ஸம்ஸாரத்தையும்,பகவத்பக்தி பண்ணுபவர்களுக்கு மோக்ஷத்தையும் உண்டாக்குகிருன் என்று கீழ்ச்சொன்ன ச்ருதியின் அர்த்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனுல்,பகவானுடைய நிக்ரஹ

"தேஷாமஹம் ஸமுத்தர்த்தாம்ருத்யு—ஸம்ஸார-ஸாகராத்।
பவாமி நசிராத் பார்த்தமய்யாவேசிதசேதஸாம் ॥".
அத்-12, ச்லோ-7.

த்தால் (தண்டனையால்) ஸம்ஸாரம் என்றும், அநுக்ரஹத்தால் மோக்ஷம் என்றும் கிடைக்கிறது. ஆகையால், பகவானுடைய நிக்ரஹத்தால் ஏற்படும் ஸம்ஸாரம் ஸத்யம் என்று ஸ்பஷ்டமாகிறது.

தைத்திரீயோப நிஷத்தில் ஆநந்த வல்லியில், பகவானுடைய உபாஸனத்தைச் செய்யுமவன் பரம வ்யோமத்தில் (ஸ்ரீவைகுண்டத்தில்)ப்ரஹ்மத்தோடுகூட ப்ரஹ்மத்தின் குணங்களையும் அநுபவிக்கிறுன் என்று சொல்லியிருக்கிறபடியால் ஸ்ரீ வைகுண்டத்தில் பகவானையும், அவனுடைய கல்யாணகுணங்களையும் அநுபவிப்பது மோக்ஷம் என்று கிடைக்கிறது. ஆகையால் ஜீவனும் ப்ரஹ்மமும்வேறுஎன்கிற ப்ரமம் ஸம்ஸாரமென்றும், ஜீவனுக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஐக்யஜ்ஞானத்தால் உண்டாகும் அந்த ப்ரமநிவ்ருத்தி முக்தி என்னும் பக்ஷம், ச்ருதிஸம்மதமன்று என்று ஸ்ரீ பகவத் ராமாநுஜரின் அபிப்ராயம்.

---

* ॥ जगत्सत्यत्वनिरूपणम् ॥

ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம் என்கிற ஐந்து பூதங்களும், அவைகளின் கலப்பினல் உண்டான சராசரரூபமான இந்தப்ரபஞ்சமும் ஸத்யமாயுள்ளது. †கானல்நீர்போல் அஸத்யமன்று. கானல்நீரில் ஸ்நாநம் பானம் முதலியவை செய்யமுடியாது. அவ்வாறில்லாமல் நதியிலுள்ள ஜலம் ஸ்நாநம் முதலியவைகளுக்கு உபயோகப்படுகிறபடியால், கானல் நீரைப்போல இதுவும் பொய்யாயிருக்க முடியாது. பொய்யாயிருந்தால் அதைக்கொண்டு கார்யம் நடவாது. ஆகையால் ஆற்றின் ஜலம் ஸத்யமானது. அது ஸத்யமாஞல்,¶ப்ரவாஹத்திற்கு முன்னும் பின்னும் ஜலம் காணவேண்டுமே, அவ்விதம் இல்லாததை எப்படி உண்மையானது என்று சொல்லலாம் என்னில், முன்னும் பின்னும் காணுததால் ப்ரவாஹம் அநித்யமென்று கிடைக்குமேயொழிய அஸ

* ஜகத்—ஸத்யத்வ—நிரூபணம்.

† பாலைவனத்தில் மத்யானத்தில் ஸூர்யகிரணங்கள் பரவுவதால் காணப்படும் ஜலம்.

¶ प्रवाहः —வெள்ளம்.

த்யமென்று கிடைக்காது. அஸத்யமாவது—ஒரு கார்யத்திற்கும் உதவாதது. அநித்யமாவது—கார்யத்திற்கு உபயோகப்பட யோக்யதையோடு சிலகாலமிருந்து அழிந்துபோவது. இதற்கு த்ருஷ்டாந்தம்—மண்ணை ஜலத்தைச் சேர்த்து பிசைந்தால் அது உருண்டையாகிறது. பிறகு குயவனால் பானையாகச் செய்யப்படுகிறது. அப்போது ஜலம் கொண்டுவருவது முதலிய கார்யங்களுக்கு உபயோகப்படுகிறது. கல், தடி முதலானவைகளால் அந்தப் பானையை அடித்தால், அது பானை என்னும் *ஆகாரத்தைவிட்டு ஓடாகிறது. அந்த ஓட்டை உடைத்தால் பொடியாய் மண்ணுகிறது. ஆகையால் மண் என்னும் வஸ்து நித்யமாயுள்ளது. இடையிடையே வரும் ஆகாரங்கள் அநித்யம். முதலிலுள்ள வஸ்து எப்பொழுதும் உள்ளதுதான். ஆனால் நதிஜலமும் முன்னும் பின்னும் இருக்கவேண்டாவோவென்றால்—அதில் சிறிதுபாகம் மணலில் மறைந்தும், சிறிது ஸூர்யகிரணங்களில் கலந்தும் போகிறபடியால் காணப்படுவதில்லை. வஸ்து உள்ளதுதான். ஆனால் ப்ரவாஹமாயுள்ள

* आकार; —உருவம்.

ஆகாரம் அப்போது இல்லாதபடியால் †கார்ய காரியாவதில்லை. இதனால் அது அஸத்ய மாக மாட்டாது, அநித்யமாகும். நித்யமாவது எப்போதும் அநுவர்த்திக்கும் வஸ்து. ப்ரவாஹாகாரம் எப்போதும் அநுவர்த்தித்து வராமையால் அநித்யமாய் முடிகிறது. இப்படியே, மண்பொன் முதலியவைகளுக்கு அப்போதைக்கப்போது வரும் பானை, காப்பு முதலிய ஆகாரங்களிலும் கண்டு கொள்வது. அநித்யமாயிருப்பது தான் அஸத்யமாகை என்றால், இப்படிப் பட்ட அஸத்யமாகை விருத்த மன்று. இந்த அஸத்யமாகையும் ப்ரவாஹாகாரத்திற்கே தவிர எப்போதும் அநுவர்த்திக்கும் ஜலத்திற்கு இல்லை.

ஸத்யமாவது-எப்போதும் அநுவர்த்திக்கும் வஸ்து. இது இரண்டு விதம்-ஒன்று ஸ்வரூபத்தில் மாறுபாடில்லாமல் அநுவர்த்திக்கும்; மற்றொன்று ஸ்வரூபத்தின் மாறுபாட்டோடு அநுவர்த்திக்கும். முதலில்சொல்லியது அபரிணாமி, நித்யம். பரப்ரஹ்மமும்

---

† कार्यकारि — (குளிப்பது குடிப்பது முதலிய) கார்யங்களுக்கு உபயோகமாயிருப்பது.

ஜீவாத்மாக்களும் இவ்வகைப்பட்டன. இரண்டாவது *பரிணாமி, நித்யம் ; ப்ரக்ருதி, காலம் முதலியவைகள் இதைச் சேர்ந்தன.

ப்ரக்ருதியாவது ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், ப்ருதிவீ முதலிய விகாரங்களை அடைந்துகொண்டு இவைகளுக்கெல்லாம் மூலகாரணமான வஸ்து. உலகில் காணப்படும் எல்லாப் பதார்த்தங்களும் இதன் விகாரங்களேயாகும். ப்ரக்ருதி-ஸ்வரூபம் எப்போதும் அநுவர்த்திக்கும்; அதன் விகாரங்கள் அவ்வப்போது உண்டாய் சிலகாலமிருந்து பிறகு கழியும். அவைகளைக் கொண்டு காரியங்கள் நடக்கிறபடியால் அவைகளெல்லாம் ஸத்யம். ஆனால் ஸ்வப்நத்தில் ஒரு மனிதன் பொன் வெள்ளி முதலியவைகளைக் காண்பதாகவும், அவைகளைக்கொண்டு காப்பு, கடுக்கன் முதலியவை செய்து தரிப்பதாகவும் காண்கிறான். இப்படி ஸ்வப்நத்தில் காணப்பட்ட வெள்ளி முதலானவைகளைக் கொண்டு நகை செய்வது தரிப்பது முதலியகாரியங்கள் நடக்கிறபடியால்

*परिणामि— மாறுதல் அல்லது விகாரத்தையுடையது. அதில்லாதது அபரிணாமி.

அவை ஸத்யமாகத் தடையென்ன என்றால், ஸ்வப்நகாலத்தில் அவைகளால் சில கார்யங்கள் நடந்ததாகக் கண்டாலும், தூங்கி எழுந்ததும், தன் கையிலும் காதிலும் பூண்டு கொண்டதாகக் கனவு கண்ட காப்பு கடுக்கன் முதலியவைகள்காணப்படுவதில்லை. ஸ்வப்நம் கண்டேன், ஒன்றுமில்லை என்று அந்த வஸ்துக்களுக்கு இல்லாமை காண்கிறபடியால் ஸ்வப்நத்தில் கண்டவஸ்துக்களும் அதனால் உண்டானதாகக் கண்ட காரியங்களும் பொய்யாகின்றன: *ஜாக்ரத்தசையிலும் நடுப்பகலில் கானல் நீரைக்கண்டு, பின்பு கிட்டப்போய்ப் பார்த்தால், இது ஜலமன்று நாம் ப்ரமித்தோம் என்று புத்தி உண்டாகிறபடியால் இதுமித்யை. உண்மையான நதீ ஜலத்தில் ஜாக்ரத்--தசையில் நாம் ஸ்நாநபானம் செய்வதாலும், செய்தது பொய்யென்று பின்னால் தோன்றாதபடியாலும், ப்ரத்யக்ஷத்தால் காணப்படுகிற சராசர ரூபமான ப்ரபஞ்சம் ஒன்றுமில்லை என்கிற ஞானம் உண்டாகாமையாலும் இவை உண்மையாக உள்ளவை. இங்கு இது அறியத்

* जाग्रद्दशा—விழித்துக் கொண்டிருக்கும் காலம்.

தக்கது—சில இடங்களில் இல்லாத வஸ்துக்கள் தோன்றுகின்றன. சில இடங்களில் இருக்கிற வஸ்துத்தான் தோன்றுகிறது. ஆகையால் ஒரு வஸ்து தோன்றுகிறது என்கிற இவ்வளவு மாத்திரத்தைக் கொண்டு வஸ்து உண்மையாகவே உள்ளது என்று நிச்சயிக்கக் கூடாது. கண்டபின் கிட்டப் போய்ப்பார்த்து, வஸ்து அங்கே இல்லாமற்போனால், 'வஸ்து இல்லை, இருப்பதாக நாம் ப்ரமித்தோம்' என்று ஞானமுண்டானால் முன் பிறந்த ஞானம் ப்ரமமென்றும், கண்டதுமாத்ரமேயொழிய இங்கே ஒன்றுமில்லை என்று ஞானமுண்டாகாதபோது முன்புண்டான ஞானம் *யதார்த்தமென்றும் நிச்சயித்து, இவைகளைக் கொண்டு வஸ்து உண்டு இல்லை என்று நிச்சயிக்கவேண்டும்.

ஸ்வப்நத்தில் கண்ட வஸ்து தூங்கி எழுந்த பின் கண்டதொழிய ஒன்றுமில்லையென்றும், பாலைவனத்தில் தோன்றியது ஜலம் இல்லை என்று உறுதியாகத் தெரிகிறபடியாலும், முதலிலுண்டான ஞானம் ப்ரமமாய், அதில் தோன்றிய வஸ்துவும் அஸத்யமா

---

*यथार्थ:—

கிறது. ப்ரத்யக்ஷத்தில் காண்கிற ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களில் இவை ஒன்றுமில்லை என்கிற புத்தியுண்டாகக் காணுமையால் இந்த ப்ரத்யக்ஷம் யதார்த்தமாகி அதில் காணும் வஸ்துக்களும் ஸத்யமாக இருக்கின்றன. இது ஸத்யம், இது மித்யை, என்று அறிவதற்கு இது வழி.

சராசரரூபமான உலகம் ப்ரத்யக்ஷத்தால் அஸத்யம் என்று ஏற்படாவிட்டாலும், ச்ருதியில் ‘ ப்ரபஞ்சமொன்றும் ஸத்யமன்று ’ என்று சொல்லப் படுகிறபடியால், இந்த ப்ரபஞ்சம் அஸத்யம் என்று ஒப்புக்கொள்ள வேண்டாவோ என்றுல் ஸர்வஸம்மதமான ச்ருதிகளில் அப்படிச் சொல்லியிருப்பதாகக் காணவில்லை. மேலும் ப்ரத்யக்ஷவிருத்தமான விஷயத்தை ச்ருதி சொல்லவும் மாட்டாது. மேல்பார்வையில் சில ச்ருதிகளுக்கு அப்படி அர்த்தம் தோன்றினுலும், ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமில்லாமல் அவைகளுக்கு அர்த்தம் சொல்ல முடியுமாயிருக்க, ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமாக அர்த்தம் செய்வது உசிதமன்று.

ப்ரத்யக்ஷத்தால் அறிந்துகொள்ள முடி-

யாத அத்விதீய-ப்ரஹ்ம-ஆத்மைக்யத்தைத் தெரிவிக்கவே ச்ருதி அவதரித்திருக்கிற படியால் இவைகளுக்கு ப்ரபஞ்சம் மித்யை என்பதிலேயே நோக்கம். ஆகையால் ப்ரத்ய க்ஷத்திற்கு விருத்தமாயிருந்தாலும் †ப்ரபஞ்ச மித்யாத்வமே ச்ருதிக்குப்பொருள் என்று ஒப் புக்கொள்ளவேண்டாவோ என்னில்--அத்விதீ ய-ப்ரஹ்ம-ஆத்மைக்ய--ஞானத்தை உண்டாக் குவதற்காக ச்ருதி * ஆவிர்பவித்தது என்று ஸித்தித்தாலன்றோ ச்ருதிக்கு † ப்ரபஞ்ச-மித் யாத்வம்பொருள் என்று ஒப்புக்கொள்ளவேண் டும். அது அப்படி இல்லை. ப்ரத்யக்ஷத்திற்கு எட்டாததாய் ‡ ஸம்ஸாரிகள் அவசியம் அறிய வேண்டிய அநேகார்த்தங்களைத் தெரிவிப்பதற் காகவே ச்ருதிகள் தோன்றியிருக்கின்றன. ஜகதீச்வரன் ஒருவனிருக்கிறானென்றும், அவ னையாராதித்தால் நமக்கு இஷ்டமான பலங்க ளைக்கொடுக்கிறானென்றும், இது முதலான பல விஷயங்களைத் தெரிவிப்பதற்காக ச்ருதி

---

* தோன்றிற்று

† प्रपञ्चमिथ्यात्वं — உலகம் பொய்என்பது.

‡ संसारि — (கர்மத்தால்) இவ்வுலகில் உழலும் ஜீவன்கள்.

ஆவிர்பவித்தது. ஈச்வரன் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறுன், ரக்ஷிக்கிறுன், ஜகத்திற்குள் புகுந்து அதை நியமிக்கிறுன், தன் ஸங்கல்பமாத்ரத்தாலே தரிக்கிறுன், தன்னேயாராதித்தவர்களுக்கு பலத்தைக்கொடுக்கிறுன் என்று இது முதலான ப்ரத்யக்ஷத்தால் அறியமுடியாத பல அர்த்தங்களேத்தெரிவிக்கிறது என்று ஒப்புக்கொண்டால் ச்ருதியின் ஆவிர்பாவம் ப்ரயோஜனமுள்ளதாயாகவில்லேயா? இப்படியிருக்க, அத்வியீய-ப்ரஹ்ம-ஆத்மைக்யத்தைத் தெரிவிக்கைக்காக ச்ருதி ஆவிர்பவித்தது என்று ஒப்புக்கொண்டு, ப்ரபஞ்சத்தை *நிஷேதிக்கிறுப்போல் மேல் பார்வைக்குத்தோன்றும் சில ச்ருதிகளுக்கு அதுவே அர்த்தமென்று சொல்லுவது உசிதமன்று. அப்படி ஒப்புக்கொண்டால் ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளேச் சொல்லும் ச்ருதிகளுக்கு † வையர்த்யம் வரும்.

இங்கே இது தெரிந்துகொள்ளவேண்டும்—ச்ருதிகளில் சில, 'ஈச்வரன் ரக்ஷகன், ஜகத்து ரக்ஷிக்கப்படுகிறது; ஈச்வரன் நியமிக்

---

*निषेधः— இல்லே என்று சொல்லுவது.

†वैयर्थ्यम्—ப்ரயோஜனமில்லாமை.

கிறவன், ஜகத்து நியமிக்கப்படுகிறது ; அவன் தரிக்கிறவன், இது தரிக்கப்படுகிறது', என்று இவ்விதமாக ஈச்வரனுக்கும் ஜகத்துக்குமுள்ள பலவித ஸம்பந்தங்களைச் சொல்லுகின்றன. சில ச்ருதிகள் ஜகத்து இல்லை என்று நிஷேதிக்கிருப்போல் தோன்றுகின்றன. இப்படி ச்ருதிகள் இரண்டுவிதமாக இருக்கிறபடியால், ச்ருதிக்கு ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும் உள்ள முன் கூறப்பட்ட ஸம்பந்தங்களைச் சொல்வதில் நோக்கா, அல்லது ஜகத்தை இல்லை என்று சொல்வதில் நோக்கா என்று விசாரிப்போம். ஜகத்தை நிஷேதிப்பதில் தான் நோக்கம் என்று ஒப்புக்கொண்டால் ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும் ஸம்பந்தங்களைச் சொல்லும் ச்ருதிகள் வ்யர்த்தமாய் விடுகின்றன. ஏனெனில், ப்ரத்யக்ஷத்தினல் ஈச்வரனுக்கும் ஜகத்துக்கும் ஒரு ஸம்பந்தம் தோன்றுகிறது, அந்த ஸம்பந்தத்தை இந்த ச்ருதிகள் * அநுவதிக்கின்றன என்று சொல்லவொண்ணுது. அந்த ஸம்பந்தங்கள் ப்ரத்யக்ஷத்திற்கு எட்டினலன்றோ அதற்கு அநுவாதம் என்று சொல்லலாம்.

---

* अनुवाद :—வேறென்றினல் தெரிந்துகொண்டதை மறுபடிசொல்லுவது.

ஈச்வரனே கண்ணுக்கு எட்டாதவனுயிருக்க அவனேடு ஸம்பந்தம் எப்படி கண்ணுக்குத் தெரியும் ? இனி அந்த பலவிதமான ஸம்பந்தங்களை ஜகத்தோடு நிஷேதிக்கைக்காக இந்த ஸம்பந்தங்களை ச்ருதி * விதிக்கிறது என்று சொல்வோமாஞல், அப்போது கண்களுக்கு எட்டாத அர்த்தங்களை ச்ருதி தானே சொல்லி தானே நிஷேதிக்கின்றது என்று சொன்னதாக ஆகும். இது பைத்தியக்காரனுடைய வ்யாபாரம் போலாகும்.

ஈச்வரனுக்கும் தனக்குமுள்ள ஸம்பந்தத்தையறிந்து, அவனை உபாஸித்து இஷ்டபலங்களை அடைவதற்காக இந்த ஸம்பந்தங்களை ச்ருதி சொல்லுகிறது என்றும் சொல்லக்கூடாது. ஏனென்ருல் அப்போது † ப்ரபஞ்ச-நிஷேத-ச்ருதிகள் ப்ரபஞ்சத்தை மாத்திரம் நிஷேதிக்கிறதா அல்லது ப்ரபஞ்சத்தோடு கூட ஈச்வரனுடைய § ரக்ஷகத்வம் முதலிய

---

*विधिः— ஏற்கனவே தெரியாததைத் தெரிவிக்கிறது, அல்லது ஒருகார்யத்தில் ப்ரவ்ருத்தியாத ஒருவனை அதை செய்யும்படி தூண்டுவது.

† प्रपञ्चनिषेधश्रुति—உலகம் இல்லை என்று சொல்லும் ச்ருதி.

§ रक्षकत्वं—ரக்ஷிக்கும் தன்மை.

குணங்களையும் நிஷேதிக்கிறதா என்று விசாரிப்போம். ப்ரபஞ்சமாத்ரத்தை நிஷேதிக்கிறது என்றால், ஈச்வரனுடைய ரக்ஷகத்வாதி குணங்களுக்கு நிஷேதமில்லை என்று கிடைக்கும். இதனால் *ப்ரஹ்மம் ‡அத்விதீயம் என்று சொல்லுவது ஸித்தியாமல்§உத்தேச்யஸித்தி பிறவாது. அந்த குணங்களையும் நிஷேதிக்கிறது என்று ஒப்புக்கொண்டால், அப்போது ஈச்வரனுக்குச்சொன்ன ரக்ஷகத்வாதி குணங்கள் ஒன்றுமில்லை என்று கிடைக்கையால் ஈச்வரனுக்கும் ஜகத்துக்கும் கீழ்ச்சொன்ன ஸம்பந்தவிசேஷங்களை விதிக்கிற வாக்யங்களுக்கு உத்தேச்யம் ஸித்தியாமல்,அவைகள் வ்யர்த்தமாய் விடும். தன் ரக்ஷணார்த்தமாக ஈச்வரனை உபாஸிப்பதில் ப்ரவ்ருத்திப்பிப்பதன்றோ அந்த வாக்யங்களுக்கு உத்தேச்யம்? ரக்ஷகத்வாதி-குணங்கள் அவனுக்கு இல்லை என்று தெரிந்தால், தன் ரக்ஷணத்திற்காக அவனை உபாஸிப்பதில் சேதநர்கள் எப்படி முயலு

---

* நிர்குணம்—குணமற்றது.

‡ अद्वितीयं—இரண்டாவதாக ஒன்றுஇல்லாதது.

§उद्देश्यासिद्धिः—விருப்பத்தினுடைய நிறைவேறுதல்.

வார்கள் ? ஆகையால் ப்ரபஞ்சத்தை நிஷேதிக்கிறதுபோல் தோன்றும் வாக்யங்களுக்கு ப்ரபஞ்சநிஷேதத்தில் தாத்பர்யம் கொள்ளுகை அநுபபந்நம். ஆகையால் சில வாக்யங்கள் ஜகத்துக்கும் ஈச்வரனுக்கும் பலவித ஸம்பந்தங்களைச்சொல்லி, அதனால் ப்ரபஞ்சத்திற்கு * ஈச்வர-பாரதந்த்ர்யத்தை அறிவிக்கின்றன. இந் நிஷேதவாக்யங்கள் ப்ரபஞ்சத்திற்கு ஸ்வாதந்த்ர்யத்தை நிஷேதிக்கின்றன என்று கொள்ளுகை உசிதம். அப்போது †ஸ்வாதந்த்ர்ய-நிஷேதமுகத்தால் ஜகத்துக்கு ஈச்வரனோடு ஸம்பந்தம் சொல்லும் ச்ருதிகளால்கிடைத்த ஈச்வர-பாரதந்த்ர்யத்தை நிலைப்படுத்தியதாய் எல்லா வாக்யங்களும் ‡ஸார்த்தகமாகின்றன. ஆகையால் ச்ருதிகளில் ஜகத்திற்கு நிஷேதம் இல்லை. ச்ருதி 'ப்ரஹ்மம் § அநந்தம்', என்று சொல்லுகிறது. அநந்தமாகை

---

* ईश्वरपारतन्त्र्यं—ஈச்வரனுக்குஅதீனமாயிருத்தல்

† स्वातन्त्र्यनिषेधमुखेन—தன்னிஷ்டப்படி நடக்கச்சக்தியற்றது என்று சொல்லுகிற இவ்வழியால்

‡ सार्थकं—ப்ரயோஜனத்தோடு கூடியதாக.

§ अनन्तम्—

யாவது இங்கே இல்லை, இப்பொழுது இல்லை, இதுவன்று என்கிறஅளவு இல்லாமலிருக்கை.

¶ஜடமான ப்ரபஞ்சம் ஸத்யமாக இருந்த தேயாகில் அஜடமான ப்ரஹ்மம் ஜடமான ப்ரபஞ்சமன்று என்று அளவு வரவேண்டி இருப்பதால் ச்ருதியில் ப்ரஹ்மத்திற்குச் சொன்ன *ஆநந்த்யம் †அநுபபந்நமாகிறது. ப்ரஹ்மம் அத்வித்யம் என்று ச்ருதி சொல்லுகிறபடியால் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் இரண்டாவதான வஸ்து இல்லை என்று கிடைக்கிறது. இந்த § த்வைத-ப்ரபஞ்சம் ப்ராந்தி மாத்திரமாயுள்ளது, அத்வைதமே பரமார்த்தமாயுள்ளது என்று சில ச்ருதிகள் சொல்லுகின்றன. இப்படியே சில புராணங்களும் ப்ரபஞ்சம் ஸ்வப்நம் போன்றது என்று சொல்லுகின்றன. இவைகளால் ப்ரபஞ்சம் அஸத்யமென்று கிடைக்கவில்லையோ என்றால்:—

¶ जडं—ஞானமில்லாதது.

*आनन्त्यं—அளவற்ற தன்மை.

†अनुपपन्नं—அயுக்தம்

§ பல பேதங்களையுடைய உலகம்.

அநந்தமாகையாவது-தேசத்தாலும், கால த்தாலும், வஸ்துவாலும், அளவில்லாமலிரு க்கை; இவைகளில் மூன்றுவது தனக்கு மேற் பட்ட ஒருவஸ்து இல்லாமலிருக்கையே யொ ழிய அந்தவஸ்துவன்று என்னும்படி இருக் கையன்று. ப்ரபஞ்சம் ஸத்யமாக இருந்தா லும் ப்ரஹ்மத்தைக்காட்டிலும் ஒரு ப்ரகாரத் தாலும் உயர்ந்த வஸ்து வேறொன்று இல்லா மையால் அதற்கு ஒருவித அநுபபத்தியும் இல்லை. சில விடங்களில் அத்விதீயம் என் கிற ச்ருதிக்கு தன்னோடு ஸமானமான இரண் டாவது இல்லை என்று பொருள். ஜகத்காரண த்தைச் சொல்லுமிடத்தில் இந்த ‘ அத்விதீய ’ பதத்திற்கு தன்னையொழிய * நிமித்தகாரணம் வேறில்லை என்று பொருள்.

எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ச்ரு தியில் ப்ரபஞ்சம் மாயாமாத்ரமென்று சொல்ல ப்படவில்லை. அப்படிச்சொல்லும் வாக்யத்தை ச்ருதியென்று ஒப்புக்கொண்டாலும், ஜீவாத் மாக்களில் தோன்றும் தேவன், மனுஷ்யன்

---

* निमित्तकारणम्—பானைக்குக்குயவன் நிமித்தகா ரணம். (மண் உபாதான காரணம் (उपादान)

முதலிய பேதங்கள் பொய்யானவை, எல்லா ஜீவன்களும் ஞானைக-ஆகாரர்களாய் ஸமானர்களாயிருப்பார்கள், அவர்களுடைய ஆகாரத்தில் பேதம்கிடையாது என்றுபொருள். புராணங்களில் சொல்லப்படும் ஸ்வப்ந-த்ருஷ்டாந்தத்திற்கு, ஸ்வப்நத்தில் காணப்படும் வஸ்துக்கள் போல, இந்த உலகம் தோன்றுவதும் மறைந்துபோவதுமாய்க்கொண்டு, † அஸ்திரமென்பதில் தாத்பர்யம். ஆகையால் ஒரு ப்ரமாணத்தாலும் ப்ரபஞ்சம் இல்லை என்று புத்தி பிறக்கிறதில்லையாதலால், இது ஸத்யமென்று ஸித்திக்கிறது.

† अस्थिरं—நிலையற்றது.

* ॥ श्रीमन्नारायणस्य जगदीश्वरत्वनिरूपणम् ॥

இப்படி ஸத்யமாக நிரூபிக்கப்பட்ட ப்ரபஞ்சத்திற்கு ஸ்ரிய:--பதியான ஸ்ரீமந்நாராயணனே ஈச்வரன். இவனுக்கு ஒரு ஈச்வரனில்லை. நாராயணானுவாகத்தில் நாராயணனைத்துடங்கி 'இவன் ப்ரபஞ்சத்திற்கு ஈச்வர' னென்றும், 'ஆத்மேச்வர'னென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு 'ஆத்மேச்வரன்' என்பதற்குத் தனக்குத் தானே ஈச்வரன் என்று பொருளாய் தனக்கு வேறு ஈச்வரனில்லை என்று சொன்னதாகிறது. † ச்வேதாச்வதரம் முதலான சில உபநிஷத்துக்களில் ‡ சிவனுக்கு ஜகதீச்வரத்வம் சொல்லுவதாகத் தோன்றினாலும், அங்குள்ள சிவ சப்தம் முதலான சப்தங்களுக்கு 'சுத்தன்' 'க்ஷேமத்தைச் செய்பவன்' என்று பொருளாய் நாராயணனையே சொல்லுகிறதென்று கொள்ளவேண்டும். இருவரும் ஈச்வரர்கள் என்று

---

* ஸ்ரீமந்-நாராயணனுக்கு ஜகதீச்வரத்வ-நிரூபணம்.

† श्वेताश्वतर

‡ ஸர்வ ஜகத்துக்கும் ஈச்வரனுயிருக்குந் தன்மை சிவனுக்கே உள்ளது.

வது, சில * கல்பத்தில் சிவன் ஈச்வரன், சில கல்பங்களில் நாராயணன் ஜகதீச்வரன் என்ருவது இரண்டு ச்ருதிகளுக்கும் தாத்பர்யம் கொள்ளக்கூடாதோ வென்ருல்; அப்போது ஈச்வரர்கள் அனேகரென்றும் ஒவ்வொருவருக்கும் † ஈச்வரத்வம் ‡ வந்தேறி யென்றும் ஏற்படுகிறபடியால், 'ப்ரபஞ்சத்திற்கு ஒருவன் § சாஸ்தா இரண்டாவது சாஸ்தா கிடையாது' என்று சொல்லும் ச்ருதிகளுக்கும், 'சிவன் தான் ஜகதீச்வரன்' என்று தொடங்கி 'அவனுக்கு ஜகதீச்வரத்வம் ¶ ஸ்வதஸ்-ஸித்தம், ஒரு காரணத்தால் வந்ததன்று' என்று சொல்லுகிற ச்வேதாச்வரச்ருதிக்கும் விரோதம் வரும்.

ஆனுல் நாராயண சப்தத்திற்கு ருத்திரன் பொருள் என்று சொல்லி ருத்திரனே ஜக

---

* कल्पः—ப்ரஹ்மாவினுடைய ஒரு நாள் (1000 யுகங்கொண்டது).

† ईश्वरत्वं—ஈச்வரனயிருக்குந்தன்மை.

‡ வந்தேறி—புதிதாக வந்தது.

§ शास्ता—ஆள்கிறவன்.

¶ स्वतः सिद्धं—ஸ்வபாவமாகவே ஒரு காரணத்தை எதிர் பாராமல் உள்ளது.

தீச்வரன் என்று ஏன் சொல்லக்கூடாதென்று ஆக்ஷேபம் பண்ணக்கூடும். நாராயண சப்தம் ஒருவனுக்கே பெயராய் மற்றொரு தேவதையைச் சொல்லமாட்டாது. * சம்பு சிவன் முதலிய சப்தங்கள் அநேகார்த்தமுள்ளதாக நிகண்டுக்களில் சொல்லப்பட்டிருப்பதால், அந்த சப்தங்கள் பொதுவானதாய், நாராயணனையும் சொல்லக்கூடியவை. ஆகையால் சிவ-சம்ப்வாதி-சப்தங்களால் சில உபநிஷத்தில் ஜகதீச்வரன் சொல்லப்பட்டிருந்தாலும், அவைகள் நாராயணனுக்கே பெயராய் அங்கும் அவனொருவனுக்கே ஜகதீச்வரத்வம் சொன்னதாய் முடிகிறது.

இவன் ஈச்வரனாகையாவது-இப்பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் உடையவனாயும் † நியமிக்கிறவனாயும் ‡ ஆள்கிறவனாயுமிருக்கை. ஸ்வாமித்வம் முதலான கீழ்ச்சொன்ன குணங்கள் இவனுக்கு ஸ்வாபாவிகமாய் எப்பொழுது

---

* शम्भुः

† ஆஜ்ஞாபிக்கிறவன்.

‡ ஆள்கிறவன்—வஸ்துக்களை தன்னிஷ்டப்படி உபயோகப்படுத்திக்கொள்ள வல்லவன்.

முள்ளதாயிருக்கும். இவனுடைய ஸ்வரூபத்தில் கை கால் முதலிய அவயவங்களொன்றும் கிடையாது. இந்த ஈச்வர-ஸ்வரூபம் எங்கும் வ்யாபித்து இருக்கும். இது பரவாத தேசமில்லை. இப்படியெங்கும் பரவி இருந்தாலும், ஆங்காங்குள்ள அசுத்தங்கள் இதில் ஸம்பந்தப்படுவதில்லை. ஸம்பந்தப்படாமலிருப்பதற்கேற்ற சக்தி இந்த ஸ்வரூபத்திற்கு ஸ்வாபாவிகம். இது சுவர் முதலான வஸ்துவினாலும் தடைபடுவதில்லை. ஆகையால் எல்லாவஸ்துக்களிலும் உள்புகுந்து இருக்கும். இதில் ராகம், த்வேஷம், லோபம், மோஹம் முதலிய துர்குணங்கள் ஒன்றும் ஒருகாலத்திலும் கிடையாது. இந்த ஸ்வரூபம் தனக்கும் பிறருக்கும் அனுபவிக்க அனுபவிக்க த்ருப்தியில்லாதபடி மேல்மேல் அனுபவத்தில் ஆசையையுண்டாக்குகிற ஆநந்தரூபமாயிருக்கும். இது ஒருக்காலும் மாறுதலின்றிக்கே எப்போதும் ஏகரூபமாயிருக்கும். இதில் சிவப்பு, வெளுப்பு, கருப்பு முதலிய ரூபங்களொன்றும் கிடையாது. ஆகையால் கண்ணுக்கு விஷயமாகாது. இதை சாஸ்த்ரத்தைக்கொண்டு பரோக்ஷரூபமாயும், யோகத்

திஞல் ப்ரத்யக்ஷமாயும் காணமுடியும். இந்த ஈச்வரனுக்கு ஜீவாத்மாக்களான நம்மோடு மாதாவென்றும், *பிதாவென்றும், †ப்ராதாவென்றும், ‡விச்ரமஸ்தானமென்றும், §ஸுஹ்ருத் என்றும், அடைவேண்டிய பயன் என்றும், அதை அடைவிக்கிறவன் என்றும் இது முதலான பல ஸம்பந்தங்கள் உண்டு. ஜீவாத்மாக்களான நாம் இவனுக்கு எல்லா கைங்கர்யங்களையும் செய்யக் கடமைப்பட்டவர்கள். இவஞலே எல்லா ஸமயங்களிலும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றப்படுகிறோம். இவன் நம்மை ஆபத்திலிருந்து ரக்ஷிக்கும்போது சில காலத்தில் சில சேதனரைக் கொண்டும், சில காலத்தில் ந்ருஸிம்ம-ராம-க்ருஷ்ணுத்யவதாரங்களால் நேராகவும் ரக்ஷிக்கிறன். ஈச்வர ¶ஸங்கல்பமில்லாமல் ஒரு கார்யமும் நடவாது. இவன் தன் ஸங்கல்பத்திஞல் நமக்காகவே

---

* पिता—தந்தை.

† भ्राता—ஸஹோதரன்.

‡ विश्रमस्थानं—இளைப்பாறுமிடம்.

§ सुहृत्—சிநேகிதன்.

¶ सङ्कल्पः ஒரு கார்யத்தை நடத்தவேண்டும் என்கிற நினைவு.

இந்த ஜகத்--ஸ்ருஷ்டி முதலான வ்யாபாரங்களைச் செய்கிறான்.

அதாவது-நாம் செய்த புண்யபாபங்களுக்கீடாக நமக்கு ஸுகம், துக்கம் முதலிய அநுபவங்களைக் கொடுக்க ப்ரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களை ஸ்ருஷ்டிக்கிறான். இவைகளில் சிலது *போக்யமாயும், சிலது †போக ஸாதனமாயும் நாம் போக்தாவாயும் ஏற்படுகிறோம். சேதனர்களுக்கு துக்கத்தை சில காலங்களில் உண்டாக்கின போதிலும் ஈச்வரன் ஸ்வபாவத்தில் ‡பரமகாருணிகன். இவன் துக்கத்தைக் கொடுப்பது நமக்கு தண்டனை ரூபமாய், இவன் §ஸஹஜக்ருபைக்கு விருத்தமாகமாட்டாது. ஈச்வரன் ஒருவன் உண்டென்று நாம் நம்பாமலிருந்தாலும் அவன் கார்யங்கள் நம்மிடத்தில் நடந்தே

---

* भोग्यं—ஸ்வயம் ஆநந்தத்தை கொடுப்பதான பால், பழம் போன்றவை.

† भोगसाधनं—அவைகளுக்கு வேண்டிய தங்கக் கிண்ணி, தாம்பானம் முதலியன.

‡ परमकारुणिकः—அதிகமான தயவுள்ளவன்.

§ सहजकृपा—ஸ்வபாவமாகவே உள்ள தயவு.

விடும். நம்பினேமாகில் மிகவும் க்ஷேமமுண்டாகும்.

இவனுடைய குணங்களெல்லாம் * பரோபகாரார்த்தமாகவே யிருக்கிறபடியால் இவனை கல்யாணகுணவான் என்று ஸகல ச்ருதிகளும் ஸ்மிருதிகளும் சொல்லுகின்றன. ஸர்வஜ்ஞத்வம் முதலான இவனுடைய குணங்களை இவ்வளவு என்று எண்ணமுடியாது. †ஸர்வஜ்ஞத்வமாவது—எப்பெழுதும் எல்லா வஸ்துக்களையும் உள்ளது உள்ளபடியே பார்ப்பது. ‡ஸர்வசக்தித்வமாவது--நினைத்ததை நினைத்தபடியே முடிக்க சக்தியுண்டாயிருக்கை. இந்த சக்தி பலவிதம். ஸத்யகாமத்வமாவது-போக்யமான வஸ்துக்கள் நினைத்தபோது ஸித்தமாயிருக்கை. § ஸத்யஸங்கல்பவமாவது-தான்

---

* परोपकारार्थं—பிறருக்கு உதவுவதற்காகவே.

† सर्वज्ञत्वं

‡ सर्वशक्तित्वं

§ ஸர்வேச்வரன் விபீஷணாழ்வானை ரக்ஷிக்க ஸங்கல்பித்தபோது (நினைத்தபோது) ஸுக்கிரீவன் அங்கதன் முதலான தம்முடைய அந்தரங்கமான மந்திரிகள் தடுத்தபோதிலும் அந்த ரக்ஷணஸங்கல்பம் தடையில்லா

* ஸங்கல்பித்ததற்கு ஒருவராலும் தடையில்லாமல் ஸங்கல்பித்தபடியே நிறைவேற்றுகை. † பரமோதாரத்வமாவது — ஆஸ்ரிதர்களுக்கு அவர்களபேக்ஷித்ததற்கு அதிகமாகவே கொடுத்தும், 'நாமென்ன கொடுத்தோம்' என்றிருக்கை. இவைகளையெல்லாம் குசேலர்விஷயத்தில் காணலாம். ‡க்ருதஜ்ஞதையாவது-தன் விஷயத்தில் அல்பம் செய்தாலும் அதை எப்போதும் அதிகமாக நினைத்திருக்கை.§ஆச்ரித வத்ஸலத்வமாவது ஆச்ரிதர்களிடத்தில் எவ்வளவு குற்றமிருந்தாலும் அதைப்பாராதது போலிருக்கை. குற்றத்தையே ¶ உபஹாரமாக நினைத்திருக்கை என்று சொல்லுவாரும் உண்டு.

மல் நிறைவேற்றிற்று. பாணாஸுரனை சிக்ஷிக்க (தண்டிக்க) ஸங்கல்பித்தபோது, சிவன், ஸுப்ரஹ்மண்யன் முதலானவர்கள் குறுக்கே விழுந்தபோதிலும் அவனை தண்டித்தே விட்டான்.

* நினைத்ததற்கு.

† परमोदारत्वम्

‡ कृतज्ञता

§ आश्रितवत्सलत्वं

¶ उपहार —பகவந்-நிவேதநத்திற்கான வஸ்து.

*ஸௌசீல்யமாவது-தான்எல்லோரையும்விட ஸர்வப்ரகாரத்தாலும் உத்தமனுயிருந்தும், ஜாதி, குணம், நடத்தை இவை எல்லாவற்றிலும் மிகவும் தாழ்ந்தவர்களுடன், ஸஹோதரர்களோடு போல ப்ரியமாகப் பழகுந்தன்மை. இதை கோபாலர்கள், குஹன், இவர்கள் விஷயத்தில் காணலாம். † ஸௌலப்யமாவது ஆச்ரிதர்கள் நினைத்தமாத்திரத்தில் அவர்களிருக்குமிடத்திற்குத் தானே வந்து கிட்டுகை. ‡ ஆச்ரிதபாரதந்த்ர்யமாவது-தான் ஸர்வேச்வரனுயிருந்தும் ஆச்ரிதரிட்ட வழக்காக அவர்கள் இடும் ஏவல் தொழில்களை தன்மேன்மைக்குத் தகாததாயிருந்தாலும் மிக அன்புடன் இவ்வளவு கிடைத்ததே என்று செய்வது. இதை பாண்டவர்கள்விஷயத்தில் காணலாம். இவை முதலான எண்ணிறந்த மஹாகுணங்கள் ஸர்வேச்வரனுக்கு § ஸ்வபாவஸித்தங்களென்று ச்வேதாச்வதரோபநிஷத்தில் சொல்

---

* सौशील्यं

† सौलभ्यं

‡ आश्रितपारतन्त्र्यं

§ स्वभावसिद्धं

லப்பட்டிருக்கிறது. இவனுக்கு அஜ்ஞானம் ஒருக்காலும் கிடையாது.

இவனுக்குக்கல்யாண குணங்கள் * ஸ்வாபாவிகமாகில், ச்ருதியில் ப்ரஹ்மம் நிர்குணம் என்று சொல்லியிருப்பது எப்படி உபபந்நமாகும் என்றால்—நிர்குணம் என்பதற்கு துர்குணம் ஒன்றும் கிடையாது என்பதில் தாத்பர்யம். குணசப்தம் நல்ல குணங்களுக்கும் துர்குணங்களுக்கும் பொதுவானது. ஆகையால் ச்வேதாச்வதரோபநிஷத்தில் ஈச்வரனை 'குணீ' என்று † ஸாமாந்யமாய் குணவானென்றும், இன்னும் பல உபநிஷத்துக்களில் விசேஷித்து அந்தந்த கல்யாணகுணங்களையுடையவன் என்றும் சொல்லியிருக்கிறபடியால் நிர்குணம் என்று சொல்லும் ச்ருதிக்கு துர்குணம் ஒன்றுமில்லை என்றே தாத்பர்யம் கொள்ளவேண்டும். ‡ அதவா குணமென்று ப்ரக்ருதியிலுள்ள ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று குணங்களுக்குப்பேராய், ஸர்வேச்வர

---

* स्वाभाविकं— ஸ்வபாவத்தினாலேயே உள்ளது.

† सामान्यः—பொதுவில்.

‡ अथवा—அல்லது.

னிடத்தில் இந்த குணங்களில்லை என்று கொள்ளலாம்.

இப்படி ஸகல கல்யாண--குணங்களோடும் கூடினவனான ஸர்வேச்வரனுக்கு, அபராதம் செய்தவர்களை அவர்களுடைய ஹிதத்திற்காக தண்டிப்பது ஸ்வபாவமாகையால், இந்த சேதனர்களுடைய அபராதத்தை அவனைப் பொறுக்கும்படி செய்ய ஒரு * புருஷகாரமுண்டு. இந்த புருஷகாரம் செய்பவளைத் தான் லக்ஷ்மீ என்கிறது. இவளும் ஸர்வேச்வரனைப் போலவே அநந்தமான கல்யாண குணங்களையுடையவள். இவள் அவனுடைய திவ்ய-மங்கள-விக்ரஹத்தில் தானொரு திவ்ய மங்கள-விக்ரஹத்தோடு எப்போதும் பிரியாமலிருக்கிறாள்.

†॥ श्रीमन्नारायणस्य परब्रह्मत्व सर्वशरीरकत्वनिरूपणम् ॥

இந்த ஶ்ரிய: பதியான ஸ்ரீமந்நாராயணன் தான் உபநிஷத் முதலானவைகளில் பரப்ரஹ்-

* पुरुषकार—மேற்பட்டவர்களோடு நமக்காக பரிந்து பேசுவது.

† ஸ்ரீமந்--நாராயணனுக்கு பரப்ரஹ்மத்வ ஸர்வசரீரகத்வ நிரூபணம்.

மமென்று சொல்லப்படுகிறுன். அந்தந்த உப நிஷத்துக்களில் "பரப்ரஹ்ம'மென்றும், 'பர-தத்வ' மென்றும் 'பரஜ்யோதிஸ்' என்றும், 'பரமாத்மா' என்றும், சொல்லப்படுகிறவன் நாராயணனே', என்று நாராயணுநுவாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இந்த அம்சம் கிடைக்கிறது. இவன் ப்ரஹ்மம் என்று சொல்லப்படுவது எதனுல் என்று ஒரு உப-நிஷத் கேட்டுக்கொண்டு, இவனிடத்தில் பெருமையுள்ள அநேக குணங்களிருப்பதால் இவன் ப்ரஹ்மமென்று சொல்லப்படுகிறுன் என்று உத்தரம் சொல்லியிருக்கிறது. அதனுல் இவனே பரப்ரஹ்மமென்றும் இவனுக்கு மேற்பட்ட நிர்குணப்ரஹ்மமென்று ஒன்று கிடையாது என்றும் தெரிகிறது. இந்த குணங்களெல்லாம் இவனுக்கு ஸ்வாபாவிகங்-களென்று ச்வேதாச்வதரோபநிஷத் சொல்லு-கிறது என்று முன்பே சொன்னேம்.

சேதனுசேதனரூபமான ஸர்வப்ரபஞ்ச-மும் இவனுக்கு சரீரமாயிருக்கும். கை கால் முதலான அவயவங்களோடும் கண் காது முதலிய இந்திரியங்களோடும் கூடினதன்றே

சரீரமென்பது? அப்படி யில்லாத சேதனு-சேதன வஸ்துக்களை சரீரமென்று எப்படி சொல்லக்கூடுமென்முல்--கீழ்ச்சொன்ன சரீர லக்ஷணம் சரீரம் என்று சொல்லப்படும் எல்லாவற்றிற்கும் பொதுவாகமாட்டாது. மனுஷ்யசரீரம் ஒருவிதமாயும், பசு பக்ஷிகளின் சரீரம் மற்ருெரு விதமாயும் பாம்பு, தேள், முதலியவைகளினுடையது வேறுவிதமாயும் இருக்கிறது. செடி, கொடி, புல், மலை முதலிய ஸ்தாவரங்களின் சரீரங்கள் ஒவ்வொன்றும் வேறு வேறு விதமாக இருக்கின்றன. இருந்தாலும், இவைகளெல்லாம் சரீரம் என்றே லோகத்திலும் சாஸ்த்ரத்திலும் வ்யவஹாரம் இருக்கிறது. * ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் அந்தர்யாமிப்ராஹ்மணத்தில் ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம், ஆகிய பூதங்களையும் அவைகளின் விகாரமான † பௌதிகங்களையும் ஜீவாத்மாவையும் தனித் தனியே எடுத்து, ஒவ்வொன்றும் பரமாத்மாவிற்கு சரீரம் என்று ஆதரவு தோன்றும்படி

---

* बृहदारण्यकोपनिषत्—अन्तर्यामिब्राह्मणम्

† भौतिक

அடிக்கடி சொல்லி யிருக்கிறது. இப்படியே ஸுபாலோபநிஷத்திலும் 'ப்ருதிவீ முதலியவை பரமாத்மாவுக்கு சரீரம்' என்று சொல்லலப்பட்டிருக்கின்றது.

ச்ருதிகளில் சரீரமென்று இருக்கிற வ்யவஹாரங்களெல்லாம் வேறு ஏதோ ஒரு தாத்பர்யத்தைக்கொண்டு வந்ததே யொழிய சரீரமென்று சொல்ல வந்ததல்ல என்று சொல்ல முடியாது. தாத்பர்யத்திற்கு * ஞாபகமாக சாஸ்த்ரஜ்ஞர்கள் ஒப்புக்கொண்டிருக்கிற அப்யாஸம், அபூர்வதை, உபபத்தி முதலியவைகள் இங்கே இருப்பதால் இவையெல்லாம் பரமாத்மசரீரமென்று சொன்னதற்கு மற்ற சரீரம்போல் சரீரமென்பதிலேயே தாத்பர்யம் என்பது தெரிகிறது.

†அப்யாஸமாவது—சொன்னதை திருப்பித்திருப்பிச் சொல்லுவது. ‡ அபூர்வதையா

---

* तात्पर्यज्ञापकलिङ्ग—அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் காரணங்கள்.

† अभ्यासः

‡ अपूर्वता

வது—மற்றொரு ப்ரமாணத்தால் அறியப்படா மலிருக்கை. * உபபத்தியாவது யுக்தியைக் கொண்டு அதை நிரூபிக்கை. இந்த மூன்றும் இங்கே காணப்படுகின்றன. அப்யாஸம் முன்னமேயே காட்டினோம். இந்த விஷயம் ப்ரத்யக்ஷம் அநுமானம் இவைகளால் கிடைக்காதாகையால் அபூர்வதையு மிருக்கிறது. இவைகளை சரீரமென்றுசொல்லி, அவன் உள்புகுந்து நியமிக்கிறான் என்று சொல்லுகிறபடியால் யுக்தியைக்கொண்டு உபபாதநம் செய்ததாகிறது. இங்கே யுக்தியாவது உள்புகுந்து நியமிக்கப்படுகின்றன என்பது. இப்படி மூன்று லிங்கங்களும் காணப்படுகிறபடியால் இந்த சராசரங்களெல்லாம் பரமாத்மசரீரம்என்பதில் தாத்பர்யம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால் லோகத்தில் அல்லது வேதத்தில் சரீரமென்று வ்யவஹரிக்கப்படும் த்ரவ்யமெல்லாம் சரீரமென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். சரீரம் என்றுபெயருடையதற்கு ஒரு †லக்ஷணத்தைச் சொல்லி, அந்த லக்ஷணம் இல்லாதது சரீரம்

---

* उपपत्तिः

† **लक्षण**—ஒரு வஸ்துவை மற்ற வஸ்துக்களிலிருந்து பிரித்து அறிவிக்கும் அடையாளம்.

அன்று என்று சொல்லுவது சரீர-ஸ்வரூப த்தை பரிசீலிக்கிறவர்களுடைய க்ருத்யமன்று. லோகத்திலோ சாஸ்த்ரத்திலோ சரீரம் என்று சொல்லப்படும் வஸ்துக்களுக்கெல்லாம் பொதுவாய் அடையாளம் காட்டுவது சரீர ஸ்வரூப-சோதகர்களுடைய க்ருத்யம். ஆகை யால் சரீரமென்று சொல்லப்படும் எல்லாவற் றுக்கும் பொதுவாயும், அப்படிச் சொல்லப்ப டாத வஸ்துக்களில் இராததாயும் உள்ள ஒரு அடையாளம் சொல்லவேண்டும். அந்த அடையாளமாவது-சரீரஸ்வபாவத்தை சோதி த்தால் இப்படி ஏற்படுகிறது. ஒரு சேதன ேேனாடு சேர்க்கை யுள்ளவரையிலிருந்து அவ னை விட்டுப் பிரிந்தால் அழிந்துபோகும் யோக் யதையுள்ள ஆகாரத்தோடு கூடியிருக்கும் த்ரவ் யம் அந்த சேதனனுக்கு சரீரம். இது நம் சரீரஸ்வபாவத்தை யோசித்தால் ஏற்படுகிறது. இந்த சரீரமானது ஜீவாத்மாவோடு ஸம்பந் தித்து, அந்த ஸம்பந்தம் உள்ளவரையில் இருந்து, ஜீவாத்மா இதைவிட்டுப் பிரிந்தால் அழிந்துபோகிறது. இதற்குக்காரணம் இந்த ஜீவன் இந்த சரீரத்திற்குள் புகுந்து தன் ஸ்வ ரூபத்தாலும் தன் ஞானத்தாலும் இந்த சரீரத்

தின் ஆகாரம் குலையாதபடி தரிக்கிருன் என்பதே.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று சொல்லப்படும் மூன்று குணங்கள் உள்ளதாய், இந்த ப்ரபஞ்சங்களுக்கெல்லாம் மூலகாரணமாய் ப்ரக்ருதி என்று சொல்லப்படும் ஒரு வஸ்து மாறி மாறி வரும்தசையில் இந்த ஜீவனுடைய புண்ய-பாப-கர்மங்களுக்குப் பலங்களான ஸுக துக்கங்களை இவன் அனுபவிக்க இவன் கர்மத்தால் ஒரு விகாரத்தை யடைகிறது. இந்த விகாரம்தான் சரீரம். இதில் ஜீவன் உள்புகுந்து தன் ஸ்வரூபத்தாலும் தன் ஞானத்தாலும் இந்த சரீரத்தைத் தாங்குகிருன். விழித்துக் கொண்டிருக்கும்போது ஞானத்தால் தாங்குகிருன். புருஷன் நடக்கும்போது மெய் மறந்தால் அந்தசரீரம் தரையில்விழுந்து விடுகிறது. விழித்துக்கொண்டாகுில் எழுந்து விடுகிறது. ஆகையால் அப்போது ஞானத்தால் தாங்குகிருன் என்று கிடைக்கிறது. நல்ல தூக்கத்தில் ப்ரபஞ்ச ஜ்ஞானமில்லையாதலால் தரையில் விழுந்து கிடக்கும் சரீரத்தை அதன் உருவம் குலையாதபடி தன் ஸ்வரூபத்தால் தாங்குகிருன்.

இந்த ஜீவன் இந்த சரீரத்தை விட்டுப்பிரிந்தாலுகில் சரீரம் உருவம் குலைந்து அழிந்து விடுகிறது. இது சரீரம் என்று சொல்லப்படும் எல்லாவற்றுக்கும் பொதுவானது.

ப்ருதிவீ, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம் முதலான பூதங்களுக்கும் அந்த பூதங்களின் பரிணாமமான பௌதிகபதார்த்தங்களுக்கும் எப்போதும் ஈச்வரனைவிட்டுப் பிரிவு இல்லையேயாகிலும், பிரிந்தால் அழிந்துபோகும் யோக்யதையுண்டு. இவையெல்லாம் ஈச்வரனுடைய ஸங்கல்பத்தால் தரிக்கப்பட்டு அழியாதபடி இருக்கின்றன. அவன் ஸங்கல்பம் மாறியபோது அந்த ரூபம் குலைந்து போகிறது. ஆகையால் இவைகளெல்லாம் ஸர்வேச்வரனுக்கு சரீரமாகத் தடையில்லை. ஜீவாத்மாவும் ஈச்வரனுடைய நித்யஸங்கல்பத்தால் ஸ்வரூபம் குலையாதபடி தாங்கப்படுகிறான். ஈச்வரனுடைய ஸங்கல்பமில்லையாகில் ஜீவாத்மாவின் ஸ்வரூபமும் குலைந்துவிடலாம். ஈச்வரன் இந்த வஸ்துக்கள் மாறுபாடில்லாமல் இப்படியே எப்போதும் இருக்கவேண்டுமென்று ஸங்கல்பித்தால் அந்த வஸ்துக்களெல்லாம்

அப்படியே நிற்கின்றன. இது அப்போதைக் கப்போது மாறுபாடுகளை அடையக்கடவது என்று ஸங்கல்பித்தால் அப்படியே ஆகிறது. சேதநாசேதன வஸ்துக்களெல்லாம் ஈச்வர னுக்கு பரதந்த்ரமாயிருக்கையே இவையெல் லாவற்றிற்கும் காரணம்.

ஆகையால் எல்லாவஸ்துக்களும் பரமா த்மாவினுடைய சரீரமாய், பரமாத்மா எல்லா வஸ்துக்களுக்கும் ஆத்மாவாகிறான். ஆத்மா வாவது தன் ஸ்வரூபத்தாலும் ஞானத்தாலும் தரிக்கிறவன். எந்த வஸ்துவை எவன் இப்படி தரிக்கிறானோ அந்த வஸ்துவுக்கு அவன் ஆத்மா. இவைகளெல்லாம் ச்ருதி-ஸித்தம்.

இந்த *சரீராத்மபாவத்தை மற்ற ஸித்தாந் திகள் ஒப்புக்கொள்ளாமல் இந்த ஸித்தாந்தி கள் மாத்திரம் ஒப்புக்கொள்ளுகிறபடியால், இது இந்த ஸித்தாந்தத்திற்கு முக்யாம்சம். இதையறிந்தால் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் அபேதம் சொல்வதுபோல் தோன்றும் சில ச்ருதிகளின் வாஸ்தவ தாத்பர்யம் நன்றாய்

* शरीरात्मभावः

ஏற்படும். அந்த தாத்பர்யமாவது, 'ஈச்வரன் ஸர்வ-அசேதன-சரீரகன், ஸர்வ-சேதன-சரீரகன்,' என்பதுதான். இந்த அம்சம் மேல் விவரிக்கப்படும்.

* जीवेश्वरभेदनिरूपणम्

எங்கும் பரவி ஸஞ்சாரமில்லாத ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் போலன்றிக்கே, ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ஸ்வபாவத்திலேயே மிகவும் அணுவாய், ஸஞ்சாரத்தோடு கூடியதாயிருக்கும். இந்த ஸ்வரூபம் மாறுதலில்லாமல் எப்போதும் ஏகரூபமாயிருக்கும். ஈச்வரஸ்வரூபம்போல இதுவும் அநுபவிக்க அநுபவிக்க த்ருப்தியில்லாதபடி ஆநந்தரூபமாயிருக்கும். ஆனால் ஈச்வர--ஸ்வரூபாநுபவ-ஆநந்தத்திற்கும் ஜீவாத்ம--ஸ்வரூபாநுபவ-ஆநந்தத்திற்கும் மேருபர்வதத்திற்கும் கடுகுக்கும் போல மிக ஏற்றத்தாழ்வு உண்டு. இதற்கும் அழிவுகிடையாது. இந்த ஜீவாத்ம ஸ்வரூபத்திலும் கைகால் முதலிய அவயவம் ஒன்றும் கிடையாது.

* ஜீவேச்வர-பேத-நிரூபணம்.

வெளியில் தென்படும் வஸ்துக்கள் தன்னைத்தான் காட்டிக் கொடுக்கமாட்டாமல், தன்னைக்காட்டிக் கொடுப்பதற்கு வேறொரு வெளிச்சத்தை அபேக்ஷிக்கிறுப் போலன்றிக்கே, இந்த ஸ்வரூபம் எப்போதும் 'நான்' 'நான்' என்று தானே தன்னை தனக்குக்காட்டும். இது தான் வெளியிலுள்ள வஸ்துக்களுக்கும் இந்த ஆத்மாவுக்கும் உள்ள வாசி. ஈச்வரஸ்வரூபமும் இப்படிப்பட்டதுதான். இதைக்கொண்டு தான் வெளியில் காணப்படும் வஸ்துக்களை ஜடமென்றும் ஆத்மாவை ஞானஸ்வரூபமென்றும் சொல்லுகிறது.

ஆனால் இந்த ஸ்வரூபமும் ஈச்வர-ஸ்வரூபமும் அயலாருக்குத் தன்னைக்காட்டும் போது, அவர்களுடைய ஞானத்தை யபேக்ஷிக்கும். ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் தன்னைக் காட்டிலும் வேறொருவஸ்துவை அறிவதற்கு ஞானம் என்று வேறொரு வஸ்து உண்டு. அது தீபத்திற்கு *ப்ரபைபோல, எப்போதும் இந்த ஸ்வரூபத்தை ஆச்ரயித்தே யிருந்து வெளியிலும் பரவும். இதைத்தான் ஆத்ம

* प्रभा —ப்ரகாசம்

ஸ்வரூபத்தை யாச்ரயித்திருப்பதால் * தர்மபூத ஞானமென்று சொல்லுகிறது. இதைக்கொண்டும் வெளியில் தென்படும் ஜடவஸ்துவுக்கும் இந்த ஆத்ம ஸ்வரூபத்திற்கும் வாசி ஏற்படுகிறது. இந்த தர்மபூதஜ்ஞானம் இவ்வாத்ம ஸ்வரூபங்களுக்கெல்லாம் ஸ்வாபாவிகமாயுள்ளது. இந்த ஞானத்திற்கும் அழிவு இல்லை. ஆனால் † ஸங்கோசம் ‡ விகாஸம் என்கிற மாறுபாடுண்டு. இது எப்போதும் எங்கும் பரவியிருக்கும் ஸ்வபாவமுள்ளது. ஆனால் ஜீவாத்மாவினுடைய தர்மபூதஜ்ஞானத்திற்கு ஸம்ஸாரதசையில் புண்யம் பாபம் என்கிற கர்மத்தால் ஸங்கோசவிகாஸங்களுண்டு. ஸம்ஸாரதசையிலிருக்கும் ஜீவர்களுடைய தர்மபூதஜ்ஞானம் கண் முதலான ஞானேந்த்ரியங்களால் வெளியில் பரவும். இதைத்தான் விகாஸமென்று சொல்லுகிறது. இது கண்வழியாக

---

* धर्मभूतज्ञानं—ஆச்ரயமாயுள்ள ஞானம் ஒன்று. அதுதான் ஆத்மா. அதை ஆச்ரயித்திருக்கும் ஞானம் மற்றொன்று. அதுதான் தர்மபூதஜ்ஞானம்.

† सङ्कोचः—சுருங்குதல்.

‡ विकासः—பரவுதல்.

ப்ரஸரிக்கும்போது நேரிலிருக்கும் வஸ்துக் களோடு ஸம்பந்திக்கும். அப்போது இதை நான் பார்க்கிறேன் என்கிற ஞானம் உண்டாகிறது. இந்த ஞானம் நேரிலிருக்கும் வஸ்துவையும் தன்னையும் காட்டும். நேரிலிருக்கும் வஸ்துவை 'இது' வென்றும், தன்னை 'பார்க்கிறேன்' என்றும் காட்டும். 'நான்' என்று ஆத்மா தன்னைத்தானே காட்டும். இப்படி ஞானங்கள்தோறும் ஆத்மாவும் வஸ்துக்களும் தர்மபூதஜ்ஞானமும் தோன்றிக்கொண்டேவரும். இந்த தர்மபூதஜ்ஞானம் தூக்கத்தில் தன்னையும் மற்றொரு வஸ்துவையும் காட்டமாட்டாது; ஆத்மாவோடு அடங்கிக்கிடக்கும். இதுதான் ஸுஷுப்தி. இதுதான் ஞானத்திற்கு ஸங்கோசம் என்று சொல்லப்படுகிறது.

இச்சை, ப்ரயத்னம், ஸுகம், துக்கம் முதலியவைகளெல்லாம் இந்த தர்மபூதஜ்ஞானத்தின் பரிணாமங்கள். இந்த பரிணாமங்களைக்கொண்டு ஜ்ஞாதா, கர்த்தா, போக்தா, ஸுகீ, துக்கீ முதலிய வ்யவஹாரங்கள் நடக்கின்றன. இந்த வ்யவஹாரங்களெல்லாம் தர்மபூதஜ்ஞானத்திற்கும் அதன் பரிணாமமான ப்ரயத்னாதி

களுக்கும் ஆத்மாவோடு வாஸ்தவமான ஸம்பந்தத்தால் வருகிறபடியால், இவை ப்ரமத்திஞல் வந்தவையன்று.

சில ச்ருதியில் 'ஞானம் இச்சை முதலானவை எல்லாம் மனஸ்ஸே' என்று சொல்லியிருப்பதற்கு, தர்மபூதஜ்ஞானத்திற்கு அந்தந்த விகாரம் உண்டாகும்போது மனஸ்ஸுக்கும் இச்சை ஸங்கல்பம் முதலிய பரிணமம் உண்டாகையால் அந்த பரிணமத்தைச் சொல்லியதில் அபிப்பிராயம். ஆனல் ச்ருதியில் சொல்லப்பட்ட மன:--பரிணம விசேஷங்களைக் கொண்டே ஆத்மா ஞாதா கர்த்தா போக்தா இது முதலான வ்யவஹாரங்களை நிர்வஹிக்கலாயிருக்க, மனஸ்ஸின் பரிணமமான ஞானம் ஒன்று, ஆத்மாவுக்கு தர்மபூதஜ்ஞானம் வேருென்று என்று இரண்டு ஞானம் ஏன் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று ஆக்ஷேபம் வருகிறது; இதற்கு ஸமாதானம்—

ஆத்மாவுக்கு சேதனன் என்றும் ஞ: என்றும், ஞாதா, கர்த்தா, போக்தா என்றும், இது முதலான வ்யவஹாரங்கள் ச்ருதியில் காணப்படுகின்றன. சேதனன் முதலானவைகளுக்

கெல்லாம் ஞானவான் என்று அர்த்தம் சொல்லவேண்டும். இது மன:--பரிணாமமான ஞானத்தின் ஸம்பந்தத்தைப்பற்றி வந்ததன்று. அப்படியானால் ஆத்ம ஸ்வரூபத்தைச் சொல்லும்போது சேதனன் முதலான வ்யவஹாரம் வராது. †வ்யாகரண-வ்யுத்பத்தியால் பார்த்தால் ஞானத்திற்கு ஆச்ரயன் என்று ஏற்படுகிறது. ஆகையால் ஞானம் இவனுக்கு ஸ்வாபாவிக தர்மம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால்தான் ஸ்ரீ விஷ்ணுதர்மத்தில்,

* " तथा हेयगुणध्वंसादवबोधादयोगुणाः ।
प्रकाश्यन्ते न जन्यन्ते नित्या एवात्मनो हि ते ॥ " என்று

ஆத்மாவுக்கு ஞானம் நித்யம் என்று சொல்லியிருக்கிறது. மன:--பரிணாமமான ஞானத்தைக்கொண்டு வந்ததாகில், மனஸ்ஸுக்கு சேதனம் என்று வ்யவஹாரம் வரவேண்டிவரும். அப்படி வ்யவஹாரம் காணவில்லை. ஆகையால் மன:--பரிணாம-விசேஷ-ரூபமான ஜடமான ஞானம் வேறு; ஆத்மாவுக்கு ஸ்வா

---

† இலக்கண நூலின் முறைப்படி.

* ததா ஹேய-குண-த்வம்ஸாதவபோதாதயோ குணா: | ப்ரகாச்யந்தே ந ஜந்யந்தே நித்யா ஏவாத்மனோ ஹி தே. ||

பாவிகதர்மமான ஞானம் வேறு. இது ஆத்மாவினுடைய பரிணாமமன்று. தர்மங்களெல்லாம் தங்களுக்கு ஆச்ரயமான வஸ்துவின் பரிணாமமாகவே இருக்கவேண்டுமென்று நியமமில்லை.

இந்த ஜீவாத்மாக்கள் * அஸங்க்யேயர். இவர்களெல்லாரும் ஈச்வரனைக் காட்டிலும் வேறுபட்டவர்கள். ஒருவருக்கொருவரும் வேறுபட்டவர்கள். இது கடோபநிஷத்திலும் ச்வேதாச்வதரோபநிஷத்திலும் 'நித்யமான ஒரு சேதனன் நித்யரான பல சேதனர்களுக்கு அபேக்ஷிதங்களையெல்லாம் செய்கிறான்' என்று சொல்லியிருக்கிறபடியால் ஸித்திக்கிறது. அதே கடோபநிஷத்தில், 'ஜீவன் சரீரத்தோடு ஆழ்ந்து துக்கப்படுகிறான். தன்னைக்காட்டிலும் வேறுபட்ட ஈச்வரனை எப்போது ஸாக்ஷாத்கரிக்கிறானோ அப்போது சோகம் கழிந்தவனாகிறான்' என்று ஜீவேச்வர பேதம் ஸ்பஷ்டமாய்ச் சொல்லியிருக்கிறது. இப்படி ஜீவேச்வர-பேதத்தைச் சொல்லும் பல ச்ருதிகளுண்டு.

ஒரு முகத்துக்கு பல கண்ணாடிகளில் பல ப்ரதிபிம்பங்கள் ஏற்படுகிறதுபோல, ப்ரஹ்

---

* असंख्येय—கணக்கிடமுடியாதவர்கள்.

மத்திற்கு பலவற்றில் ஏற்பட்ட பல ப்ரதிபிம்பங்களான ஜீவர்களை இந்த ச்ருதி சொல்லுகிறது என்று சொல்லமுடியாது. ப்ரதிபிம்பமாயிருந்தால், அதற்கு ஆதாரமான கண்ணாடி நசித்தபோது, ப்ரதிபிம்பமும் நசித்து அநித்யமாகிறதுபோல, இங்கும் ப்ரஹ்மப்ரதிபிம்பத்துக்கு ஆதாரமான அந்தக்கரணங்கள் * நச்வரங்களாக ஒப்புக்கொள்ளுகிறபடியால், அவை நசித்தபோது ப்ரஹ்ம-ப்ரதிபிம்பமான ஜீவர்களும் நசித்து அநித்யர்களாக வேண்டிவந்து ஜீவர்களை நித்யர்களென்று சொன்னது அநுபபந்நமாய்விடும்.

லோகத்தில் ரூபமுள்ள வஸ்துவுக்கு ப்ரதிபிம்பம் கண்டோமேயொழிய ரூபமில்லாத வஸ்துவுக்குக் கண்டதில்லை. ஆகையாலும் ரூபமில்லாத ப்ரஹ்மத்தின் ப்ரதிபிம்பம் ஜீவர்கள் என்று சொல்லுவது அநுபபந்நம்.

ஜீவாத்மா ப்ரஹ்மத்தைக்காட்டில் வாஸ்தவமாய் வேறுபட்டிருந்தால், 'தத் த்வமஸி' என்கிற ச்ருதியில் ஜீவாத்மாவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸ்வரூபைக்யம் சொல்லுவது எப்படி உபபந்நமாகும் என்றால், அதற்கு உபபத்தி

* नश्वर—அழியும் ஸ்வபாவமுள்ளது.

சொல்லுகிறோம்.—இங்கே ஜீவப்ரஹ்மங்களுக்கு ஸ்வரூபைக்யம் சொல்லவில்லை. ப்ரஹ்மம் தான் ஒன்றே காரணமாகவும் கார்யமாகவும் இருக்கிறது என்று காட்டுகிறது இந்தச்ருதி.

இந்த அர்த்தம் மனதில் நன்றாய் தெரிந்துகொள்வதற்காக ப்ரஹ்மத்தினுடைய ஜகத்ஸ்ருஷ்டிக்ரமத்தை இங்கே சொல்லுகிறோம்:-

சேதனாசேதன-ரூபமான ப்ரபஞ்சமெல்லாம் ப்ரஹ்மத்திற்கு சரீரமாக இருக்கிறது என்கிற அம்சத்தை ச்ருதிகளைக்கொண்டு முன்பே நிரூபித்தோம். ப்ரஹ்மத்திற்கு சரீரமான சேதனாசேதனமிரண்டிற்கும் *ஸ்தூலாவஸ்தை †ஸூக்ஷ்மாவஸ்தை என்று இரண்டு அவஸ்தைகளுண்டு. இதில் அசேதனமான ப்ரக்ருதிக்கு ஸ்தூலாவஸ்தையாவது--பஞ்சபூதங்களாயும் தேவமனுஷ்யாதிசரீரங்களாயும் ஆகுகை; ஸூக்ஷ்மாவஸ்தையாவது--அது நிவர்த்திக்கை. சேதனனுக்கு ஸ்தூலாவஸ்தையாவது--தேவமனுஷ்யாதி சரீரங்களின் ஸம்பந்தத்தால்வரும் ஞானவிகாஸம்; ஸூக்ஷ்மாவஸ்தையாவது--அவனுடைய ஞானத்தி

* स्थूलावस्था † सूक्ष्मावस्था

ற்கு மிகவும் ஸங்கோசம். அதாவது அந்த ஞானம் ஒன்றையும் க்ரஹிக்கமாட்டாதபடி நிற்கை. இவ்விரண்டு அவஸ்தைகளிலும் சேதநாசேதனமிரண்டும் ப்ரஹ்மத்திற்கு சரீரமாய் ப்ரஹ்மம் சேதநாசேதன*சரீரகமாயே இருக்கும்.

ஒருவனுக்கு தன் சரீரத்தில் ஜாட்யமுண்டானால் அஸ்வஸ்த-சரீரகனாய் தன் சரீரம் ஒரு கார்யத்திற்கும் உதவாமலிருப்பதைக் கண்டு நாம் ஸ்வஸ்தனாகக் கடவோமென்று ஸங்கல்பித்து ஒரு உபாயத்தாலே ஸ்வஸ்த சரீரகனாகிறாப்போல, ப்ரஹ்மம் ப்ரளயகாலம் வந்தவாறே தன் சரீரமான சேதநாசேதனங்கள் அதிஸூக்ஷ்மாவஸ்தையை அடைந்து † லீலாரஸத்திற்கு உபயுக்தமாகாதபடியைக் கண்டு, அவையிரண்டையும் ஸ்தூலமாக்கி, ஸ்தூல-சேதநாசேதன-சரீரகனாகக் கடவேன் என்று ஸங்கல்பித்து, தன்விசித்ர சக்தியாலே அசேதனத்திற்கு க்ரமக்ரமமாய் தேவமனுஷ்யாதி சரீரமாகையாகிற ஸ்தூலாவஸ்தையை

---

* शरीरकः—(சேதநாசேதனங்களை) சரீரமாக உடையவன்.

† लीलारसं—விளையாட்டினால் உண்டாகும் த்ருப்தி.

யும், இந்த ஶரீர சம்பந்தத்தால் சேதனனுக்கு ஞானவிகாஸரூபமான ஸ்தூலாவஸ்தையையும் உண்டாக்கி, ஸ்தூலாவஸ்தையை அடைந்த சேதநாசேதன-சரீரகமாயாகிறது. இந்த அர்த்தம் 'அந்த மஹாபுருஷன் * ஏகாகியாயிருந்ததினால் † அரதியை அடைந்தான். பின்பு இந்த ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தான், என்று சொல்லும் ச்ருதியில் ஸ்பஷ்டம். இங்கே ப்ரஹ்மத்திற்கு ஸூக்ஷ்ம-சிதசித்-சரீரகமாயிருக்கை காரணாவஸ்தை என்றும் ஸ்தூல-சிதசித்-சரீரகமாகுகை கார்யாவஸ்தை என்றும் சொல்லப்படுகிறது. ஆகையால் காரணமும் கார்யமும் ஒரு ப்ரஹ்மமேயாகிறது. இதைச் சொல்லுகிறது 'தத்த்வமஸி' வாக்யம். இந்த அம்சங்களெல்லாம் ஸ்ருஷ்டிக்ரமத்தைச் சொல்லும் முன் வாக்யங்களை விசாரித்தால் அவைகளால் நன்றாய் ஏற்படும்.

சாந்தோக்யோபநிஷத்தில் இந்த ‡ ப்ரகரணாரம்பத்தில் பிதா புத்ரனைப் பார்த்து 'எந்த வஸ்துவையறிந்தால் இத்த ப்ரபஞ்சமெல்

---

* एकाकी— தனியாக இருப்பவன்.

† अरति:—அத்ருப்தி.

‡ प्रकरणं—ஒரு விஷயத்தை நிரூபிக்கும் இடம்.

லாம் அறிந்ததாக ஆகிறதோ அந்த வஸ்துவைக் கேட்டறிந்தாயா' என்று கேட்க, 'ஒன்றை யறிந்தால் எல்லாம் எப்படி அறிந்ததாகும்' என்று புத்ரன் கேட்டான். 'ஒரு ம்ருத்பிண்டத்தை அறிந்தால், மண்விகாரமானவை எல்லாம் அறிந்ததாகிறுப்போல், அந்த வஸ்துவை அறித்தால் எல்லாம் அறிந்ததாகக்கூடும்' என்று பிதா பதில் சொன்னார். அந்தவஸ்துவைத் தாங்களே எனக்குச்சொல்லவேண்டுமென்று பிள்ளை கேட்க, தந்தை பதில் சொல்லுகிறுரென்றுதுடங்கி, "இந்த ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கு முன் ஒன்ருன ஸத்தாயிருந்தது. அந்த ஸத் 'நான்பஹுவாகக் கடவேன்' என்று ஸங்கல்பித்து, தேஜஸ், ஜலம், ப்ருதிவீ இவைகளைக் க்ரமமாக ஸ்ருஷ்டித்தது. மறுபடியும் அந்த ஒன்ருயிருந்த ஸத் 'வெவ்வேருயிருந்த அந்த மூன்றையும் ஒன்ருகக்கலப்பேன்' என்றும், 'கலந்த அந்த மூன்றினுல் * நாமருபங்களை உண்டுபண்ணுவேன்' என்றும் ஸங்கல்பித்து, அப்படியே அந்த மூன்றையும் ஒன்ருகக் கலந்து அதனுல்

* नाम—பெயர்; रूप—உருவம்.

நாமரூபங்களை உண்டாக்கிற்று. இந்த ப்ரஜை களெல்லாம் அந்த ஸத்தை மூலகாரணமாயு டைத்தானவை; இவையெல்லாம் அந்த ஸதா த்மகம்; அந்த ஸத் இந்த ப்ரபஞ்சத்திற்கு ஆத்மா" என்று சொல்லி, 'தத்த்வமஸி' என்று முடித்ததாகச் சொல்லுகிறது.

இங்கே * ம்ருத்-பிண்ட-த்ருஷ்டாந்தத்தி ஞலே ஜகத்தாகப் பரிணமிக்கும் வஸ்துவைத் தெரிந்துகொண்டாயா என்று பிதா கேட்டாரெ ன்றும், ஜகத்ரூபமாய் பரிணமித்த வஸ்துவை புத்ரனுக்குத் தான் சொல்லுகிருரென்றும் ஏற் படுகிறது. ஜகத்காரணமான வஸ்துவைச்சொ ல்லும்போது 'அது நான் பஹுவாகக்கட வேன் என்று ஸங்கல்பித்தது' என்றுசொல்லு கிறபடியாலும் 'பரப்ரஹ்மம் இப்படி ஸங்கல் பித்தது' என்று மற்றும் பல உபநிஷத்துக் களில் சொல்லுகிறபடியாலும், இங்கே காரண மாகச்சொன்ன வஸ்து ப்ரஹ்மம் என்றும், அது 'பஹுவாக ஆகக்கடவே' னென்று ஸங் கல்பித்து இந்த நாம-ரூபங்களை ஸ்ருஷ்டித் தது என்று சொல்லுகையாலே அந்த ப்ரஹ்

---

* मृत्+पिण्ड—மண் உண்டை.

மமே நாமரூபங்களையுடைய கார்யமாகவும் ஆயிற்று என்றும் ஏற்படுகிறது.

இங்கு, பல ச்ருதிகளில் நிர்விகாரமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மம் வேறு, விகாரவத்தான ப்ரபஞ்சம் வேறு. ஆகையால் 'இது முன் ஸத்தாகவே இருந்தது' என்கிற வாக்யத்தில், *'இதம்' என்று சொல்லப்பட்ட ஸவிகாரமான ஜகத் 'ஸத்' என்று சொல்லப்பட்ட ப்ரஹ்மமாயிருந்தது என்று எப்படிச் சொல்லக்கூடும்? 'பஹுவாகக் கடவேன்' என்றும், 'நாம ரூபங்களை ஸ்ருஷ்டிக்கக்கடவே'னென்றும் ஸங்கல்பித்து தேவமனுஷ்யாதி-நாமரூபங்களை ஸ்ருஷ்டித்தது என்று சொல்லுகையால் முன் ஸங்கல்பித்த பஹுத்வம் தேவமனுஷ்யாதி நாமரூபத்தையடைகை என்றும், 'முன் ஏகமாயிருந்தது' என்று சொல்லப்படும் ஏகத்வம் தேவமனுஷ்யாதி நாமரூபத்தை விட்டிருக்கை என்றும் ஏற்படுகிறபடியால், நிர்விகாரமான ப்ரஹ்மத்திற்கு இந்த நாமரூபங்களையடைகை எப்படிக்கூடும்? என்கிற † தடஸ்த-சங்கைகளையெல்லாம் பரிஹரிப்பதற்காக

* इदं—இது. † तटस्थ—ஒரு வாதத்தில் வாதிப்ரதிவாதிகள்போல் ஸம்பந்தப்படாமல் உதாஸீனமாயிருந்து கவனிப்பவன்.

வும், ம்ருத்-த்ரவ்யம் பானை முதலிய ரூபமாய் பரிணமிக்கிறாப்போல ஸத் என்று சொல்லப் படுகிற வஸ்துவே ஜகத்ரூபமாகப் பரிணமித் தது என்று பிதா சொல்லுகிறாரென்கிற ப்ரமம் தன் புத்ரனுக்கு வாராமைக்காவும், ப்ரஹ்மத் திற்கும் ப்ரபஞ்சத்திற்கும் சரீராத்மபாவத்தை 'இந்த ப்ரபஞ்சமெல்லாம் ஸதாத்மக' மென் கிற வாக்யத்தால் சொல்லி, 'தத் ஸத்யம்' என் கிற வாக்யத்தால் ஸத் என்று சொல்லப்பட்ட வஸ்து நிர்விகாரமானது என்றும், 'ஸ ஆத்மா' என்கிற வாக்யத்தால் இந்த ப்ரபஞ் சத்திற்கு அவன் ஆத்மா என்றும் சொன்னார். அதனால் 'இதம்' சப்தத்தாலும் 'ஸத்' சப் தத்தாலும் சொல்லப்படுவது ப்ரபஞ்சத்தை சரீரமாகவுடைய ப்ரஹ்மம். அதற்குக் கார்யா வஸ்தையில் வந்ததாகச் சொன்ன *நாமரூப வத்வமும், காரணாவஸ்தையில் வந்ததாகச் சொன்ன நாமரூபசூன்யத்வமும், பால்யம், யௌவனம் முதலான சரீரத்தின் அவஸ்தை களெல்லாம் சரீரத்தின் வழியாய் ஆத்மாவில் சொல்லப்படுகிறாப்போல இந்த ப்ரஹ்மத்திற்கு

* நாமரூபவத்வம்—தேவமனுஷ்யாதி-ரூபங்களையும் தேவமனுஷ்யாதி-நாமங்களையும் உடைத்தாயிருக்கை.

சரீரமான ப்ரபஞ்சத்தின் வழியாகச் சொல்லப் படுகிறது. ஆகையால் 'இதம்' என்று கார்ய மான ப்ரபஞ்சத்தைச் சொல்லும் சப்தத்திற்கு நாமரூபங்களை அடைவதாகிய கார்யாவஸ் தையையடைந்த ப்ரபஞ்சத்தை சரீரமாக வுடைய ப்ரஹ்மம் அர்த்தம். 'ஸத்' என்று காரணாவஸ்த-ப்ரஹ்மத்தைச் சொல்லும் சப் தத்திற்கு நாமரூபங்களில்லாத ப்ரபஞ்சத்தை சரீரமாகவுடைய ப்ரஹ்மம் அர்த்தம். இந்த கார்ய-காரண-ப்ரஹ்மங்களுக்கு அபேதம் சொ ல்லுவதில் அநுபபத்தியில்லை என்று புத்ர னுக்குத் தெரிவிக்கிறார்.

இந்த சரீராத்மபாவத்தைச் சொன்னமாத் ரத்தால் ப்ரபஞ்சத்தைச் சொல்லும் 'இதம்' சப்தத்திற்கு ப்ரஹ்மம் அர்த்தம் என்பதை எப்படி புத்ரன் அறியக்கூடும்? அந்த அபிப் ராயத்தால் பிதா சொன்னார் என்று எப்படிச் சொல்லக்கூடும்? என்றால், புத்ரனை ச்வேத கேது லோகத்தில் தேஹாத்மவிவேகமுள்ள இதரர்களுடைய 'நான் மனுஷ்யன்', 'நான் தேவதத்தன்' இது முதலிய வ்யவஹாரங்க ளால் சரீரத்தைச் சொல்லும் மனுஷ்யாதி-சப் தங்கள் அந்த சரீரத்தில் உள்புகுந்திருக்கிற

ஆத்மபர்யந்தத்தைச் சொல்லுகிறது என்று அறிந்து, தானும் அப்படியே வ்யவஹரிக்கிற வனுகையாலே சரீரத்தைச் சொல்லும் சப்த மெல்லாம் அதன் ஆத்மாவளவும் சொல்லும் என்று *வ்யுத்பத்தி அவனுக்கு உண்டாயிருக் கிறது என்று பிதாவுக்கு அபிப்பிராயம். ஆகை யாலே தான், சரீரத்தைச் சொல்லும் ச்வேத கேது சப்தத்தாலே புத்ரனை †ஸம்போதித்துச் சொல்லுகிறுர்.

'இதெல்லாம் ஸதாத்மகம்' என்று சொ ன்ன பிதாவுக்கு ப்ரபஞ்சத்திற்கு 'ஸத்' என்று சொல்லப்படும் ப்ரஹ்மம் ஆத்மா, இந்த ப்ர பஞ்சம் ப்ரஹ்மத்திற்கு சரீரம் என்று சொல்லு வதிலும் அதைக்கொண்டு முன்சொன்ன சங் கைகளேப் பரிஹரிப்பதிலும் தாத்பர்யம். ஒரு மண்ணே பல பானே, 'மடக்கு, சட்டி முதலிய விகாரத்தை யடைகிறது. ஆகையால் ம்ருத்- த்ரவ்யமே இவைகளெல்லாமென்று காட்டத் தொடங்கி, ஒருவன் அந்தப் பானே முதலிய வைகளேக் காட்டி, இவைகளெல்லாம் மண் ணுண்டையாயிருந்தது, இப்பொழுது குய

* व्युत्पत्ति—ஞானம். † संबोध—கூப்பிட்டு.

வன் வேலையால் இப்படிப் பலவித வஸ்துக்க ளாக ஆயிருக்கின்றன என்று சொல்லி, 'அது தானிது' என்று காட்டுகிறதுபோல; இங்கும் ப்ரபஞ்சமெல்லாம் ப்ரஹ்ம-கார்யம் என்று சொல்லத்துடங்கி, காணப்படுகிற இந்த ஸ்தூல-ப்ரபஞ்ச-சரீரகமான ப்ரஹ்மம் முன் ஸூக்ஷ்ம-ப்ரபஞ்ச-சரீரக-ப்ரஹ்மமாயிருந்தது. அது ஒருவனுடைய வ்யாபாரமில்லாமலே தன் ஸங்கல்பத்தாலேயே தன் விசித்ர சக்தியைக்கொண்டு தேவ-மனுஷ்யாதி-ரூபங்களை யுண்டாக்கி, ஸ்தூல-ப்ரபஞ்ச-சரீரக-ப்ரஹ்மமாயிற்று; அந்த ப்ரஹ்மம்தானிது என்று காட்டுகிறதற்காக 'தத்-த்வமஸி' என்று சொல்லுகிறார்.

முன் ஆரம்பத்தில் கார்யத்திற்குக் காரணாவஸ்தையைச் சொல்லி, இந்த தத்த்வமஸியால் காரணத்திற்குக் கார்யாவஸ்தையைக் காட்டுகிறார். ஆகையால் 'தத்' பதத்திற்கு ஸூக்ஷ்ம-ப்ரபஞ்ச-சரீரக-ப்ரஹ்மம் அர்த்தம்; 'த்வம்' பதத்திற்கு ச்வேதகேது என்று பெயருடைய ஸ்தூல-சரீர-*விசிஷ்டனான ஜீவ-சரீ

* विशिष्ट:—கூடியவன்.

ரகமான ப்ரஹ்மம் அர்த்தம். இதனால் மூன் ஸாமான்யத்தில் காட்டிய அர்த்தத்தை விசேஷத்தில் காட்டுகிறதாகிறது. இப்படி காரணாவஸ்தா-விசிஷ்ட-ப்ரஹ்மத்திற்கும், கார்யாவஸ்தா-விசிஷ்ட-ப்ரஹ்மத்திற்கும் ஐக்யத்தை புத்ரனுக்குத் தெரிவிக்கிறாரேயொழிய, ச்வேதகேது என்கிற ஜீவாத்மாவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஐக்யத்தை உபதேசிக்கவில்லை.

ப்ரஹ்மம் ஸர்வஜ்ஞனும், ஸர்வசக்தி, ஸத்யஸங்கல்பம்; இந்த ஜீவன் அத்யல்பஜ்ஞன், அல்பசக்தியுள்ளவன், ஸத்யமான ஸங்கல்பமில்லாதவன், பசி, தாகம் முதலிய அளவில்லாத ஹேயங்களுக்கு இடமானவன். ஆகையால் இவ்விருவருக்கும் ஸ்வரூபத்தில் ஐக்யம் எவ்விதத்திலும் அநுபபந்நம்.

இப்படியிருக்க, ச்வேதகேது என்கிற ஜீவாத்மாவுக்கு அஜ்ஞானம், அசக்தி முதலியவைகளைத் தாம் நேராகக் கண்டிருக்க, தத்வத்தை யறிந்துகொள்ளத் தன்னை ப்ரார்த்திக்கும் தன் புத்ரனை அந்த ச்வேதகேதுவுக்குப் பிதாவாகையால் ஆப்தரான இவர் ஸர்வஜ்ஞ-ஸர்வசக்திகமான ப்ரஹ்மத்துக்கும் அவனுக்கும் அநுபபந்நமான ஸ்வரூபைக்யத்தை

உபதேசிக்கிறார் என்பது மிகவும் நம்பத்தக்க தன்று.

'நீ ஆசார்யன் முகமாய் ப்ரஹ்மத்தை அறிந்தாயா' என்று தந்தை கேட்டதற்கு, 'என் ஆசார்யன் எனக்குச் சொல்லவில்லை, தாங்களே சொல்லவேண்டும்' என்கிற புத்ரனுடைய வாக்யத்தால் அவனுடைய அஜ்ஞானத்தைப் பிதா அறிந்துகொண்டிருக்கிறார் என்பதும், 'நீ பதினைந்து நாள் பட்டினி கிடந்து வா' என்ற பிதாவின் * நியமனத்தினால் பதினைந்து நாள் பட்டினி இருந்து, பதினாறுவது நாள் தன்னிடம் வந்த புத்ரன், 'என்னை பசி பாதிக்கிறது, ஒன்றும் தெரியவில்லை' என்று சொல்லுகையால் இவன் பசி முதலிய † ஹேயங்களையுடையவன் என்று தந்தை அறிந்திருக்கிறாரென்கிற அம்சமும் அந்த ப்ரகரணத்தைப் பார்த்தால் ஏற்படுகிறது.

ப்ரஹ்மத்திற்கு, குயவனைப் போலன்றிக்கே, ஸங்கல்பமாத்ரத்தாலே ஸ்ருஷ்டி சொன்னதால், அதனுடைய ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஸத்யஸங்கல்பத்வம் முதலியவைகளைப் பிதா தாமே சொல்லுகிறார்.

---

* नियमनं—கட்டளை. † हेय—வெறுக்கத்தக்க.

ப்ரஹ்மத்திற்கு இந்த குணங்களும், ஜீவாத்மாவுக்கு அல்பஜ்ஞத்வாதி குணங்களும், * கல்பிதங்களாய் அபரமார்த்தமாகையால், அவை ஸ்வரூபைக்யத்திற்கு விருத்தமன்று என்கிற அபிப்பிராயத்தால் பிதா சொல்லுகிறார் என்று சொல்லவுங்கூடாது. அப்படியானால், 'இவைகள் கல்பிதங்கள், ஆகையால் அபரமார்த்த' மென்று சொல்லியன்றோ ஸ்வரூபைக்யத்தை உபதேசிக்கவேண்டும். இந்த ப்ரகரணத்தில் அவை அபரமார்த்தமென்று சொன்னதாகக் காணவில்லை. அப்படியிருக்க, தன்னுடைய அஜ்ஞானம் அசத்தி முதலியவைகளை நேராய்க் கண்டிருக்கிற ச்வேதகேது தனக்கு ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மத்தோடு ஐக்யம் சொல்லுகிறார் என்று இந்த வாக்யத்தின் பொருளை க்ரஹித்தானென்பது † அத்யந்தம் ‡ அஸம்பாவிதமாகையால், 'இவன் அந்த அர்த்தத்தை எல்லாம் தெரிந்துகொண்டான்' என்று ச்ருதியில் மேலே தென்படும் வாக்யமும் அநுபபந்நமாய்விடும்.

---

* कल्पितं—இல்லாததை இருப்பதாக எண்ணுவது அல்லது சொல்லுவது.

† अत्यन्तं —மிகவும். ‡ असंभावितं—எண்ணத்தகாதது.

கீழே 'ஒரு ம்ருத்-பிண்டத்தை யறிந்தால், ம்ருத்-விகாரமெல்லாம் அறிந்ததாகிருப்போல ப்ரஹ்மத்தை அறிந்தால் ப்ரபஞ்சமெல்லாம் அறிந்ததாய்விடும்' என்று சொல்லி ,அதுதான் எப்படிக்கூடும்' என்கிற சங்கையைப் பரிஹரிக்கைக்காக ம்ருத் ஒன்றுதான் பரமார்த்தம், மற்ற அதன் விகாரங்களெல்லாம் அபரமார்த்தம் என்று த்ருஷ்டாந்தத்தில் காட்டினதால், ப்ரஹ்மம் ஒன்றுதான் பரமார்த்தம், மற்ற அதன் விகாரமான ஜகத்தெல்லாம் அபரமார்த்தம் என்று தெரிந்துகொள்ளக்கூடும். ஆகையால் ப்ரஹ்மத்திற்குத்தான் சொன்ன ஸர்வஜ்ஞத்வாதி--குணங்களும், ச்வேதுகேது தன்னிடத்தில் கண்ட அஜ்ஞத்வாதிகுணங்களும் அபரமார்த்தங்கள் என்று தானே அறிந்துகொள்ளக்கூடும். அப்படி யறிந்து ப்ரஹ்மத்திற்கும் தனக்கும் ஸ்வரூபைக்யத்தை அறிந்துகொள்ளக்கூடும் என்கிற அபிப்பிராயத்தால் பிதா இவ்விரண்டுக்கும் ஸ்வரூபைக்யத்தைச் சொன்னார்; புத்ரனும் அவரபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு அந்த வாக்யத்தின் பொருளை அறிந்தான் என்று சொல்லுகிறது. ஆகையால் ஒரு அநுபபத்தியுமில்லை என்று சொல்லவும் கூடாது.

ம்ருத் ஒன்றுதான் ஸத்யம், அதன் விகாரங்களெல்லாம் மித்யை என்று அந்த ப்ரகரணத்தில் சொல்லப்படவில்லை. அப்படி இருந்தால் *ம்ருத்திகைவ ஸத்யம் என்று சொல்ல வேண்டும்; அப்படிச் சொல்லாமல், †ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' என்று சொன்னதால் 'பானை சட்டி முதலியதெல்லாம் ம்ருத்-த்ரவ்யமே என்கிறதே யதார்த்தம்" என்பதே அவருடைய அபிப்பிராயம் என்று ஏற்படுகிறது.

இப்படியே, மண்ணின் விகாரமான பானை மடக்கு முதலானது வாக்காலே ஆரம்பிக்கப் படுகின்றன என்கிற இம்மாத்ரத்தாலே வாக்காலே வ்யவஹரிக்கப்படுகிறது என்று கிடைக்குமேயொழிய இவை மித்யை என்று கிடைக்காது.

மேலும் 'ம்ருத்-பிண்டத்தை யறிந்தால் அதன் கார்யமெல்லாம் அறிந்ததாக ஆகிறது' என்று சொல்லி, அதை உபபாதிப்பதற்காக, இந்த 'வாசாரம்பண' வாக்யம் தொடங்கப்பட்டிருக்கிறது. காரணம் ஸத்யம், கார்யம்

---

* मृत्तिकैव सत्यं—மண் தான் ஸத்யம்.

† मृत्तिकेत्येव सत्यं

மித்யை என்று சொன்னல், கார்யம் என்பது ஒன்று இருந்தாலன்ரே காரணத்தை யறிந்தால் கார்யமும் அறியப்பட்டதாகும் என்று சொல்லலாம்? ஆகையால் கார்யம் மித்யை என்று சொன்னதால் கீழ்ச்சொன்னது *உபபாதிதமாகாது. ஆகையால் கீழ்ச் சொன்னதற்கு உபபாதகமாகும்படியானதையே இந்த வாக்யத்திற்கு அர்த்தமாகக்கொள்ளவேண்டும். அந்த அர்த்தமாவது—கார்யகாரணங்களிரண்டும் ஒன்று என்பதுதான். அப்போது இரண்டும் ஒன்ருகையால், காரணவஸ்துவை அறிந்தால், கார்யவஸ்து அறியப்பட்டதாகிறது. ஒரு த்ரவ்யம் ஒரு ஆகாரத்தோடு இருந்து காரணமாகிறது; அதே த்ரவ்யம் மற்ரெரு ஆகாரத்தையடைந்து கார்யமாகிறது. உதாஹரணமாக, ம்ருத்-த்ரவ்யம் பிண்டாகாரமாயிருக்கும்போது காரணமாகிறது. அதுவே 'பானை' 'சட்டி' என்கிற வ்யவஹாரம் வருவதற்காக பானை முதலிய ஆகாரத்தை அடைந்து கார்யமாகிறது. த்ரவ்யம் ஒன்ருனபடியால், ம்ருத்-பிண்டத்தை அறிந்தால், பானை, சட்டி முதலியவைகளையும் அறிந்ததாகிறது.

---

* நிரூபிக்கப்பட்டதாக ஆகாது.

ஆகையால் 'வாசாரம்பண' வாக்யத்திற்கு, 'இது பானை', 'இது சட்டி' என்றிவை முதலிய லோகவ்யவஹாரம் நடப்பதற்காக ம்ருத்-த்ரவ்யம் பிண்டாகாரத்தைவிட்டு, பானை முதலான அந்தந்த ஆகாரங்களையும், அந்தந்தப் பெயரையும் அடைகிறது; அது ம்ருத்-த்ரவ்யத்தைக்காட்டிலும் வேறன்று—என்று அர்த்தம் சொல்வதுதான் உசிதம். ஆகையால் இந்த ப்ரகரணத்தில் ப்ரபஞ்சத்திற்கு மித்யாத்வம் சொல்லப்படவில்லை.

தன் புத்ரனுக்கு ப்ரபஞ்சமித்யாத்வத்தைத் தெரிவிக்க பிதாவுக்கு அபிப்பிராயமானல், அப்போது அதற்காக, 'ஒரு கயிற்றின் ஸ்வரூபத்தை அறிந்தால், இது ஸர்ப்பம், * அம்புதாரை, பூமியின் வெடிப்பு இது முதலான ப்ரமத்தினுலுண்டாகும் ஸர்ப்பம், அம்புதாரை, பூமியின் வெடிப்பு முதலிய விகாரங்களெல்லாம் அறியப்பட்டதாகிறதுபோல, ப்ரஹ்மம் ஒன்றையறிந்தால் அதில் ப்ராந்தியினுலுண்டான இப்ப்ரபஞ்சரூபமான விகாரங்களெல்லாம் அறிந்ததாகும்' என்று சொல்லவே

* ஜலத்தைக் கொண்டுபோகும்பொழுது பூமியில் கோடாக சிந்தியதினுல் உண்டான அடையாளம்.

ண்டும். ப்ரஹ்மஸ்வரூபத்தையும் ப்ரபஞ்சஸ்வரூபத்தையும் இதுவரையில் அறியாதவனை தன் புத்ரனுக்கு, ம்ருத்தின் விகாரமான பானை சட்டி முதலானவை பொய் என்று த்ருஷ்டாந்தஜ்ஞானமே இருக்கமாட்டாது. கயிற்றை ஸர்ப்பமாக க்ரஹிப்பது தன்னிடத்திலும் பிறரிடத்திலும் காண்கையால் கயிறு உள்ளது, ஸர்ப்பம் முதலியவை பொய் என்கிற த்ருஷ்டாந்தஜ்ஞானம் அவனுக்கு ஸுலபமாய் வரக்கூடும். ஆகையால் * ரஜ்ஜூ-ஸர்ப்ப-த்ருஷ்டாந்தத்தை விட்டு ம்ருத்-பிண்ட-த்ருஷ்டாந்தத்தைச் சொல்வது அநுபபந்நமாகும். ம்ருத்பிண்டம் பானை சட்டிகளாக ஆகிறது. ரஜ்ஜூ ஸர்ப்பமாகத் தோன்றுகிறது என்று இவ்விரண்டு த்ருஷ்டாந்தங்களுக்கும் இவ்வளவு † வைஷம்யமுள்ளது.

இப்படி 'ஒன்றை யறிந்தால் ப்ரபஞ்சமெல்லாம் அறிந்ததாக ஆகிறது' என்று தந்தை புத்ரனுக்குச் சொன்னதுபோல, முண்டகோபநிஷத்தில், "ஒரு வஸ்துவை

---

* रज्जुसर्प—பழுதையைப் பார்த்து பாம்பு என்று ப்ரமிப்பது.

† वैषम्यं—வித்தியாஸம்.

யறிந்தால் எல்லாம் அறிந்ததாகும்' என்று கேட்டிருக்கிறேன். அந்த வஸ்து எது?" என்று சிஷ்யன் ஆசார்யனைக் கேட்க, ஜகத் காரணமான ப்ரஹ்மத்தை ப்ரஸ்தாவித்துக் கொண்டு, *ஊர்ண-நாபி என்னும் ஒரு ஜந்து தன் வாயிலிருந்து நூல்களை வெளியிலுண்டாக்கி அதைக்கொண்டு †விஹரித்து, மறுபடியும் அந்த நூலை விழுங்கி விடுகிறதுபோல, ப்ரஹ்மமும் ப்ரபஞ்சத்தையுண்டாக்கி, பிறகு தானே ‡க்ரஸிக்கின்றது. எப்படி பூமியில் ஓஷதிகள் உண்டாகின்றனவோ அப்படியே ப்ரஹ்மத்தினிடமிருந்து ப்ரபஞ்சம் உண்டாகிறது. இந்த த்ருஷ்டாந்தங்களைக் காட்டி இந்த ப்ரஹ்மத்தை அறிந்தால் ஜகத் அறியப்பட்டதாகும்' என்று சிஷ்யனுக்கு ஆசார்யன் பதில் சொன்னதாகத் தெரிகிறது.

இதே ரீதியில், ப்ருஹதாரண்யகத்தில் யாஜ்ஞவல்க்யர் தன் பத்னிக்கு, 'ப்ரஹ்மத்தை யறிந்தால் இப்ப்ரபஞ்சங்களெல்லாம் அறிந்ததாகிறது' என்று சொல்லி, ஈரவிறகில் உண்'

* ऊर्णनाभिः—சிலந்தி வகையைச்சேர்ந்த ஒரு சிறியபூச்சி.

† ஸஞ்சரித்து. ‡ விழுங்குகிறது.

டான அக்னியிலிருந்து புகைகள் கிளம்புவது போல இந்த ப்ரஹ்மத்திலிருந்து ப்ரபஞ்சங்கள் உண்டாகின்றன என்று ப்ரஹ்மம் ஜகத் காரணம் என்பதற்கு த்ருஷ்டாந்தம் காட்டினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

முதல் ஊர்ண--நாபி-த்ருஷ்டாந்தத்தில் ஜந்துவின் சரீரத்தில் ஒரு பாகம் நூலாகிறது. இரண்டாவதில் பூமி ஓஷதிகளாக மாறுகிறது. மூன்ருவதில் ஈரவிறகு புகையாக மாறுகிறது. இப்படி மூன்று ஆசிரியர்கள் கூறிய த்ருஷ்டாந்தங்களிலும் ப்ராந்தி என்று தோன்றுகிற த்ருஷ்டாந்தம் சொன்னதாகக் காணவில்லை. ஆகையால் ம்ருத்-பிண்ட-த்ருஷ்டாந்தத்தால் ப்ராந்தியைக் காட்டுகிருர் என்பது மிகவும் அநுபபந்நம். ஆகையால் 'தத் த்வமஸி' வாக்யத்திற்கு ஜீவ-ப்ரஹ்ம-ஸ்வரூபைக்யம் அர்த்தமென்று சொல்லுவது சரியல்ல.

இந்த ஜீவாத்மஸ்வரூபத்தில் ஸ்த்ரீ, * புமான், தேவன், மனுஷ்யன், பசு, பக்ஷி, மரம் முதலிய ஜாதிகள் கிடையாது. இவையெல்லாம் சரீரத்திலுள்ள ஜாதிபேதங்கள்.

---

* पुमान्—புருஷன்.

ஜீவாத்மாக்களின் ஸ்வரூபத்தில் தாரதம்யமும் இடையாது. எல்லா ஜீவாத்மாக்களும் ஞானாகாரராய் ஸமானராயிருப்பார்கள். இவர்கள் *பத்தர், முக்தர், நித்யர் என்று மூன்று வகைப்பட்டிருப்பார்கள். ஸம்ஸாரத்தில் ஸுக துக்கங்களை அனுபவிப்பவர்கள் பத்தர். அது கழிந்து மோக்ஷத்தை அடைந்தவர் முக்தர். எப்போதும் †ஸம்ஸாரகந்தமே இல்லாதவர் நித்யர். 'எப்போதும் பரமாத்மஸ்வரூபத்தை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லும் ச்ருதியால் மூன்றாவது வகுப்பிலுள்ளவர்கள் உண்டென்று ஏற்படுகிறது.

---

* बद्धः † संसारगन्धः—ஸம்ஸாரத்தின் வாஸனை.

* ॥ संसारसत्यत्वनिरूपणम् ॥

இந்த ஜீவாத்மாவுக்கு ஸம்ஸாரமாவது-- புண்யம் பாபம் என்கிற இவன் செய்யும் கர்மத்தினுடைய பலத்தை அனுபவிக்கைக்காக ஈச்வரனுடைய ஸங்கல்பத்தால் வந்திருக்கும் ப்ரக்ருதி என்று பெயருடைய அசேதனவஸ்துவினுடைய ஸம்பந்தம். புண்யமாவது-- சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட கர்மங்கள். பாபமாவது சாஸ்த்ரத்தில் நிஷேதிக்கப்பட்ட கர்மங்கள். ப்ரக்ருதியாவது-ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களுக்கு ஆச்ரயமான அசேதன--த்ரவ்யம். இதின் ஸ்வரூபமும் ஸத்யமானது. இது மேல்மேல் விகாரங்களை யடைந்துவரும். அந்த விகாரங்கள் அநித்யம். இது பகவானுடைய ஸ்வரூபத்தையும் ஜீவாத்மாவினுடைய ஸ்வரூபத்தினுண்மையையும் தெரியாதபடி பண்ணும் ஸ்வபாவமுள்ளது. தன் விஷயத்தில் போக்யதா ,புத்தியையும் உண்டாக்கும். இது பகவானுக்கு ஸ்ருஷ்டிக்கு †உபகரணமாயிருக்கும்.

---

* ஸம்ஸார-ஸத்யத்வ-நிரூபணம்.

† उपकरण— ஸாதனம்.

இது *விசித்ர-கார்யகரமாகையால் மாயை என்று இதை ச்ருதி சொல்லுகிறது. †ஸத்யலோக பர்யந்தமான ஸகல லோகங்களும் அவைகளிலுள்ள வஸ்துக்களும் இந்த ப்ரக்ருதியின் பரிணாமமாயிருக்கும். பகவான் ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் இந்த ப்ரக்ருதிக்கு தன் ஸங்கல்பத்தால் ஐந்து ஞானேந்த்ரியங்கள் ஐந்து கர்மேந்த்ரியங்கள், மனஸ் என்று இவைகளுக்குப் பொதுவான மற்றொரு இந்த்ரியம், ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், ப்ருதிவீ, என்று பஞ்சமஹா-பூதங்களென்னும் விகாரங்களை உண்டாக்குகிறான். இம்மஹா-பூதங்கள் ஐந்தையும் ஒவ்வொன்றையும் இரண்டாகப் பிரித்து, அதில் ஒவ்வொரு பூதத்தின் ஒரு பாதியை நான்காகப் பிரித்து, அந்த நான்கு பாகங்களையும் மற்ற பூதங்களுடைய பாதிபாதி பாகத்துடன் சேர்க்கிறான். அப்போது ப்ருதிவீயினுடைய பாதி-பாகத்துடன் ஜலம், தேஜஸ்,வாயு,ஆகாசம்இவைஒவ்வொன்றினுடைய

---

* विचित्रकार्यकर —விசித்ரமான கார்யத்தைச் செய்வது.

† सत्यलोक—ப்ரஹ்மாவினுடைய லோகம்.

எட்டிலொரு பாகம் கலந்து * 'பஞ்சீக்ருத-ப்ருதிவீ' ஆகிறது. இப்படியே ஜலாதிகளிலும் கண்டுகொள்வது. இந்த பஞ்சீக்ருத பூதங்களையும், பதினேரு இந்த்ரியங்களையும் கொண்டு † ஸுர-நர-திர்யக்-ஸ்தாவரமென்னும் நான்குவித சரீரங்களை உண்டாக்குகிறுன்.

ஆகையால்தான் இந்த சரீரங்களை ‡ப்ராக்ருதமென்றும் § பாஞ்சபௌதிகமென்றும்

---

* पञ्चीकृतपृथिवी—ப்ருதிவியின் ஒருபாதி, ஜலத்தின் எட்டில் ஒருபங்கு, தேஜஸ்ஸின் எட்டில் ஒருபங்கு, வாயுவின் எட்டில் ஒருபங்கு, ஆகாசத்தின் எட்டில் ஒருபங்கு இவைகளைக்கலந்தால், இது 'பஞ்சீக்ருத ப்ருதிவீ' யாகிறது; இப்படியே ஜலத்தின் ஒருபாதி, ப்ருதிவியின் எட்டிலொன்று, தேஜஸ்ஸின் எட்டிலொன்று, வாயுவின் எட்டிலொன்று, ஆகாசத்தின் எட்டிலொருபங்கு இவைகளைக்கலந்தால் 'பஞ்சீக்ருத ஜலம்' ஆகிறது. இப்படியே 'பஞ்சீக்ருத தேஜஸ் 'பஞ்சீக்ருத வாயு' 'பஞ்சீக்ருத ஆகாசம்' இவைகளுக்குப் பார்த்துக்கொள்ளவும்.

† सुर—தேவர்கள்; नर—மனிதர்கள்;
तिर्यक्—பசுபக்ஷி முதலியன; स्थावर—செடி கொடி முதலியவை.

‡ प्राकृतं—ப்ரக்ருதியிலிருந்து உண்டானது.

§ पाञ्चभौतिकं—ஐந்து பூதங்களின் சேர்க்கையினல் உண்டானது.

சொல்லுகிறார்கள். ஜீவாத்மாவுக்கு அவனவன் கர்மத்திற்கீடாக அந்தந்த சரீரத்தோடு ஸம்ப ந்தத்தை ஈச்வரன் உண்டாக்குகிறான். இந்த சரீரத்தோடு ஸம்பந்தத்தால் ஜீவாத்மாவினு டைய தர்ம பூதஜ்ஞானத்தினுடைய ஸ்வாபா விக--விகாஸ--சக்தி தடைபட்டு அது ஸங் கோசத்தை அடைகிறது. இந்த தர்மபூதஜ் ஞானத்திற்கு விகாஸசக்தியாவது-எங்கும் பரவி எல்லா வஸ்துவையும் க்ரஹிக்கத்தக்க சக்தி. இதற்கு ஸங்கோசமாவது—இந்த சக்தி தடைபட்டு சிலவற்றைமாத்திரம் க்ரஹி க்கை. அப்போது ஜீவாத்மாவினுடைய ஸ்வ ரூபம் உள்ளது உள்ளபடியே தெரியாமல் போகிறது. ஜீவாத்மஸ்வரூபம் தன்னை அறி யத்தகுந்த ஸ்வபாவமுள்ளதாயிருந்ததேயாகி லும், அதற்கு தேஹம் முதலியவைகளைக்காட் டிலும் தனக்குள்ள வாசியையும், ஈச்வரனைக் காட்டிலும் உள்ள வாசியையும் அறியத்தகு ந்த சக்தியில்லை. அதை அறிவிக்கத்தகுந்த சக்தியையுடையது தர்மபூதஜ்ஞானமே. இத ற்கு அந்த சக்தி தேஹஸம்பந்தத்தால் தடை பட்டிருக்கிறபடியால் அந்த வித்யாசங்களை இவன் அறிகிறதில்லை. ஆகையால் தனக்கும்

சரீரத்திற்கும் அபேதப்ரமமும் 'நான் ஸ்வதந்த்ரன்' என்கிற ப்ரமமும் உண்டாகிறது. *வஸ்துஸ்திதியில் இவன் தேஹாதிகளைக்காட்டிலும் வேறுபட்டவனுகையாலும், ஈச்வரனுக்கு பரதந்த்ரனுகையாலும், 'நான்மனுஷ்யன், கறுத்தவன், சிவந்தவன், ஸ்வதந்த்ரன்' இது முதலான ஞானங்களெல்லாம் ப்ரமமாகிறது. தேஹாத்ம விவேகமுள்ளவர்களுடைய 'நான் மனுஷ்யன்', 'கறுத்தவன்,' முதலியஞானங்கள் 'நான் மனுஷ்யசரீரகன்' என்று இப்படி க்ரஹிக்கிறபடியால் ப்ரமமன்று.

ஜீவாத்மாவுக்கு இன்னும் பல சக்தியுண்டு. தன்னிடத்தில் புண்ய-பாப-ரூப-கர்ம பலங்கள் தட்டாதபடிக்கீடான சக்தியும், *ஜரா-மரணங்களும் பசி தாகங்களும் வராதபடிக்கீடான சக்தியும், தனக்கு இஷ்டங்களெல்லாம் கிடைக்கத்தகுந்த சக்தியும், ஸங்கல்பித்ததை முடிக்கத்தகுந்த சக்தியும் ஈச்வரனுக்குப் போல இருக்கின்றன. இவையெல்லாம் கர்மத்

---

* वस्तुस्थिति — உண்மையில்.

* जरा—கிழத்தனம்.

தாலுண்டான சரீரஸம்பந்தத்தால் தடைபட்டு * கார்யகாரியாவதில்லை. இந்த சக்திகளெல்லாம் இவன் மோக்ஷத்தை யடையும்போது ஆவிர்ப்பவித்து கார்யகாரியாகின்றன. ஈச்வரனுடைய இந்த சக்திகளுக்கு ஒருபொழுதும் தடை கிடையாதாகையால் எப்பொழும் கார்யகாரியாகவே இருக்கின்றன. இந்த சரீரம் குலைந்தபோது பஞ்சபூதங்களும் ஸூக்ஷ்மமாய் இந்த ஜீவனை விட்டுப்பிரியாமலே இருக்கின்றன. அதனால் அப்போதும் இந்த சக்திகள் தடைபட்டே இருக்கின்றன.

இந்த பூத-ஸூக்ஷ்மங்களும் பதினொரு இந்த்ரியங்களும் ஸ்ருஷ்டி தொடங்கி மஹாப்ரளயம் வரையில் இவனோடு ஒட்டிக்கொண்டே இருக்கும். மஹா-ப்ரளயத்தில் இவைகளெல்லாம் தமஸ்ஸென்னும் அதிஸூக்ஷ்மாவஸ்தையை யடைந்து இவனோடு ஒட்டிக்கொண்டிருக்கும். ஆகையால் ஸூக்ஷ்மமாகவோ ஸ்தூலமாகவோ இருக்கிற ப்ரக்ருதி ஸம்பந்தம் இந்த ஜீவனுக்கு மோக்ஷம் போகிறவரையில் விடாது. இதில் ஸ்தூலப்ரக்ருதி-ஸம்

* कार्यकारी—கார்யத்தைச் செய்யத்தக்கது.

பந்தம் வரும்போது ஸ்வல்ப-ஜ்ஞான-விகாஸம் உண்டாய், சில வஸ்துக்களை அறிந்து கொள்வான். அதி-ஸூக்ஷ்மமான ப்ரக்ருதி ஸம்பந்தம் வந்தபோது ஞானம் அதிஸங்குசிதமாய், இவன் அசேதனத்தைக்காட்டிலும் வாசியில்லாமல் இருப்பான்.

இப்படி இவனுக்கு தேஹாத்மவிவேகம் தடைபட்டிருக்கிறபடியால் ஹேயமான சரீரத்தோடு ஐக்யபுத்தியும், அந்த சரீரத்திலும் அதற்குப் போஷகமான அன்னபாநாதிகளிலும் போக்யதா-புத்தியும் பிறக்கிறது. பிறகு அவைகளை ஆசைப்பட்டு, அவைகளுக்காக ஸத்கர்மங்களையோ துஷ்கர்மங்களையோ செய்கிறான். அவைகளுக்குப் பலமான ஸுகதுக்கங்களை அனுபவிக்கைக்காக ஸ்வர்க்கநரகாதிகளுக்குப் போவதும் வருவதுமாய், பிறப்பதும் இறப்பதுமாய், இப்படி ஜனன-மரண-ப்ரவாஹத்திலே யகப்பட்டுக்கொண்டு * மஹாக்லேசங்களை அனுபவிக்கிறான். ஒரு † ஸார்வபௌமன் ஒருவனுக்குப் பல வேஷங்களைப்

* महाक्लेश — பெரியகஷ்டங்களை.

† सार्वभौमः — சக்ரவர்த்தி,

போட்டு, அவனைக் கூத்தாடச் செய்து, அதைக் கண்டு லீலாரஸத்தை அனுபவிக்கிறு ப்போல, ஸர்வேச்வரன் இந்த சேதனனுக்கு அவர்களுடைய கர்மாநுகுணமாக தேவமனுஷ்யாதி ப்ராக்ருத-சரீர-ஸம்பந்தமாகியவேஷத்தைக்கட்டி, தேஹாத்மப்ரமத்தால் இவன் தட்டுக்கெட்டுத் தடுமாறுகிறபடியைக் கண்டு *லீலாரஸத்தை அனுபவிக்கிறபடியால் ஈச்வரனுக்கு இந்த ப்ரக்ருதி மண்டலம் 'லீலாவிபூதி' என்று சொல்லப்படுகிறது.

ப்ரக்ருதி-மண்டலமாவது-முன் சொன்ன ப்ரக்ருதி-பரிணாமமான தேசவிசேஷம். ஈச்வர ஸங்கல்பத்தால் இந்த ஸம்ஸாரம் வாஸ்தவமாயுண்டாகிறபடியால் ஸம்ஸாரம் ஸத்யமானது.

---

* ஸம்ஸாரம் அதாவது ஜகத்ஸ்ருஷ்டி ஈச்வரனுடைய 'லீலாரஸத்துக்'காகவே யேற்பட்டது. ஆனால் அந்த ஜகத்ஸ்ருஷ்டி ஜீவாத்மாக்களுடைய கர்மத்தை அநுஸரித்திருக்கிறபடியால், ஜீவர்களுடைய கர்மபல அநுபவார்த்தமாயும் ஆகிறது. இப்படி இவர்களுடைய அநுபவத்தைக்கண்டு ஈச்வரனுக்கு ஏற்படும் அநுபவம் லீலாரஸம் எனப்படுகிறது.

* ॥ मोक्षस्वरूपनिरूपणम् ॥

ஜீவாத்மா தன் கர்மத்தால் ஜனனமரண ப்ரவாஹத்தில் விழுந்து துக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது, ஈச்வரன் இவனுடைய துக்கத்தைப்பார்த்துப் பொறுக்கமாட்டாமல், இவனை அந்த ப்ரவாஹத்தினின்றும் கரையேற்ற நினைத்து, அதற்கு ஒரு † அவஸரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான். பாணப்புழு ஏதோ கோடு குறிக்க, அது ஒரு எழுத்தாய் முடிகிறாப்போல, ஜீவாத்மா செய்யும் வ்யாபாரங்களில் ஒன்று ‡ ஸுக்ருதம் மாதிரியாக ஆகிறது. ஈச்வரன், இதை § வ்யாஜமாகக்கொண்டு, மறு ஜன்மத்தில் இவன் தாயின் கர்ப்பத்தில் ஜனிக்கும்போது, இந்த ஜீவன் ஆசார்யஸம்பந்தம் பெற்று மோக்ஷ ஸம்பத்தைப் பெறக்கடவன் என்று கடாக்ஷிக்கிறான்.

அந்த கடாக்ஷம் பெற்ற ஜீவாத்மா க்ரமமாய் ¶ ஸாத்விகனாய் ஆசார்யஸம்பந்தத்தைப்

---

* மோக்ஷ-ஸ்வரூப-நிரூபணம்.

† अवसरः—ஸமயம். ‡ सुकृतं—புண்யம்.

§ व्याज—காரணம். ¶ सात्त्विक—ஸத்வகுணத்தை அதிகமாகஉடையவன்.

பெறுகிறான். பின்பு முன் நிரூபித்தபடி தன் ஸ்வரூபத்தையும் ஈச்வரனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களையும், இருவருக்குமுள்ள ஸம்பந்தங்களையும் ஆசார்யன் தெளிவாய் உபதேசிக்க அறிகிறான். அந்த உபதேசத்தால் *த்ருடமான தத்வஜ்ஞானம் பிறந்து ஸம்ஸாரம் † ஹேயம், மோக்ஷஸம்பத்து ‡ உபாதேயம் என்கிற விவேகம் உண்டாகிறது. அதனால் ஸம்ஸாரத்தைவிட்டு மோக்ஷத்தை யடையவேண்டுமென்று பேராவல் உண்டாய், ஆசார்யனிடமிருந்து மோக்ஷத்திற்கு உபாயங்களை அறிகிறான்.

அந்த உபாயங்கள் பக்தி, ப்ரபத்தி என்று இருவகை. இவைகளில் பக்தியாவது- உபநிஷத்துக்களில் சொல்லப்படும் ஸத்-வித்யை, தஹர-வித்யை, உபகோஸல-வித்யை, சாண்டில்ய-வித்யை, ஆநந்த-மய-வித்யை, அக்ஷி-வித்யை, பூம-வித்யை, வைச்வானர-வித்யை, ப்ரதர்தன-வித்யை, மது-வித்யை, பஞ்சாக்னி-வித்யை முதலான ப்ரஹ்ம-வித்யைகள்.

---

* दृढ—உறுதியான. † हेय—வெறுக்கத்தகுந்தது.
‡ उपादेयं—ஏற்றுக்கொள்ளத்தகுந்தது.

இவைகள் அந்தந்த வித்யா-ப்ரகரணத்தில் சொல்லப்படும் சில சில குணங்களோடு கூடிய ப்ரஹ்மோபாஸனமாய் இருக்கும். ஒவ்வொரு வித்யையிலும் உபாஸ்யகுணங்கள் வேறு வேருக இருக்கும். எல்லா ப்ரஹ்ம வித்யைகளிலும், ப்ரஹ்மத்திற்கு * அஸாதாரணமான ஸத்யத்வம், ஞானத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் என்கிற ஐந்து குணங்கள் தொடர்ந்துவரும். இந்த உபாஸனங்கள் எல்லாவற்றிலும் வரும் மோக்ஷபலம் ஏகரூபமாயிருக்கும். பலத்தில் தாரதம்யம் கிடையாது. இந்த ப்ரஹ்மோபாஸனங்கள் † நிரதிசய-ப்ரீதி-ரூபமாகிறபடியால் பக்தி என்று சொல்லப்படுகின்றன. இந்த ப்ரஹ்ம-வித்யைகளில் ‡ த்ரைவர்ணிகர்களுக்கு மாத்திரம் அதிகாரம் உண்டு. இவைகளில் தனக்கு இஷ்டமான ஒரு வித்யையைத்தான் ஒருவன் அநுஷ்டிக்கவேண்டும். ஒரு வித்

---

* असाधारण—ஒருவனுக்கே உள்ளதாய் மற்றவருக்கு இல்லாதது.

† निरतिशयप्रीति—மிகவும் அதிகமான ப்ரீதி.

‡ त्रैवर्णिक—(ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைச்ய) என்கிற மூன்று வர்ணத்தைச் சேர்ந்தவர்.

யையைத் தொடங்கினுல் ஒரு ஜன்மத்திலே யே முடிவடைகிறது என்கிற நியமமில்லை. ஒரு ஜன்மத்தில் முடிந்தாலும் முடியலாம், பல ஜன்மங்கள் கழிந்து முடிந்தாலும் முடிய லாம்.

இதற்கு முடிவாவது ஸாக்ஷாத்-கார-ரூப மாகை. உபாஸனங்கள் ஸ்மரணரூபமாயிருந் தாலும், * அநவரதபாவனையால் † ஸாக்ஷாத் காரமாய் முடிகிறது.

இப்படி விளம்பத்தைப் பொறுக்காத த்ரைவர்ணிகர்களுக்கும், ப்ரஹ்மவித்யையில் அதிகாரமில்லாத மற்ற எல்லா சேதனர்களுக் கும் தாங்கள் நினைத்தபோது மோக்ஷத்தை அடைவதற்கு மற்றொரு உபாயம் உண்டு. இதுதான் ‡ 'ப்ரபத்தி' என்றும், 'சரணாகதி'

---

* अनवरतभावना—இடைவிடாத த்யானம்.

† ஸாக்ஷாத்காரம்—சாஸ்த்ரத்தால் அறிவதுபோல் இல்லாமல் நேரில் கண்ணால் காண்பதுபோல் பார்ப்பது.

‡ प्रपत्तिः—தனக்கு இஷ்டமான ஒரு பலத்தைப்பற்றி மிகவும் த்ருடமான நம்ப கத்துடன், 'என்னிஷ்டத்தை நிறைவேற்றி என்னை காப்பாற்றவேண்டிய பரம் தேவரீரு டையது' என்று ஒரு மந்த்ரத்தைக்கொண்டு பகவானிடத்தில் பண்ணும் புத்திவிசேஷம்.

என்றும், 'ந்யாஸவித்யை' என்றும் பல உபநிஷத்துக்களிலும், இதிஹாஸபுராணங்களிலும், விசேஷமாய் பஞ்சராத்ர-சாஸ்த்ரங்களிலும் சொல்லப்படுகிறது. இதன் ஸ்வரூபம், * அநுஷ்டானப்ரகாரங்கள், எல்லாம் விசதமாயும் விஸ்தாரமாயும் பஞ்சராத்ர-சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. உபநிஷத்துக்கு † உபப்ருஹ்மணமான ஸ்ரீ பகவத்கீதையைப்போல இந்த பஞ்சராத்ரமும் பகவானலேயே சொல்லப்பட்டதாகையாலும், உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கும் அர்த்தத்தை ‡ விசதீகரணம் பண்ணுகையாலும், வேதவிருத்தமான அம்சம் இதில் ஒன்றுமிராமையாலும், இது வேதம்போல் ப்ரபல-ப்ரமாணமாயிருக்கும்.

இந்த பஞ்சராத்ரத்தில் § "वासुदेवात् संकर्षणो नाम जीवो जायते" என்று வேதவிருத்தமான ஜீவோத்பத்தி சொல்லியிருக்கிறபடியால், இது

---

* अनुष्ठानप्रकारः—செய்யும் முறை.

† उपबृंहणं—பொருளை விவரிக்கும் க்ரந்தங்கள்.

‡ विशदीकरणं—தெளிவாக்குதல்.

§ "வாஸுதேவாத் ஸங்கர்ஷணோ நாம ஜீவோ ஜாயதே"

எப்படி ப்ரமாணமாகும்? என்றால், இங்கே ஜீவாத்மாவுக்கு உத்பத்தி சொல்லவில்லை. ஸங்கர்ஷணன் என்ற பெயருடைய ஒரு ஜீவாத்மா இருந்தாலன்றோ அதற்கு உத்பத்தி சொல்லுகிறது என்று சொல்லுவது? பகவானுடைய வாஸுதேவன் என்கிற * வ்யூஹத்திலிருந்து ஸங்கர்ஷணம் என்கிற வ்யூஹம் உண்டாகிறது. இது † ஜீவாபிமானியாகையாலே ஜீவன் என்று சொல்லப்படுகிறது. ஸங்கர்ஷண-வ்யூஹம் என்கிற பகவானுடைய அவதாரவிசேஷத்திற்கு உத்பத்தி உண்டாகையால் இது வேதவிருத்தமன்று. இந்த அர்த்தம் பஞ்சராத்ரத்தில் அந்தப் ப்ரகரணத்தை முன் பின் பர்யாலோசித்தால் ஸ்பஷ்டமாகும். வ்யூஹத்தின் ஸ்வரூபம் மேலே சொல்லப்போகிறோம்.

மஹாபாரதத்தில் சாந்தி-பர்வத்தில் நாராயணீயோபாக்யானத்தில் இந்தப்பஞ்சராத்ர-சாஸ்த்ரத்தை மிகவும் கொண்டாடி இது வேதம் போல் ப்ரமாணம் என்று விஸ்தாரமாக வ்யா

---

* व्यूहः— திருமேனிப் பிரிவு.

† जीवाभिमानी— ஜீவதத்வத்தை தன்னுடையதென்று அபிமானிக்கிற தேவதை.

ஸ-பகவான் சொல்லியிருக்கிறார். ஆகையால் இந்த பஞ்சராத்ரம் சொன்ன விஷயத்தில் அப்ராமாண்ய-சங்கை பண்ணுவது வேதத்தில் சொன்ன அர்த்தத்தில் அப்ராமாண்ய-சங்கை பண்ணினதுபோலாகும். ஆகையாலேதான் * அபிகமனம், † உபாதானம், ‡ இஜ்யை, § ஸ்வாத்யாயம், ¶ யோகம், என்று இந்த சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட ** பஞ்ச-கால-ப்ரக்ரியையைக்கொண்டு பகவதாராதனத்தை இதில் சொன்ன க்ரமத்தால் எல்லா வைதிகர்களும் இதில் சொன்ன மாத்ரத்தாலேயே நடத்திவருகிறார்கள்.

இந்த பக்தி ப்ரபத்திகளிரண்டில், இந்த சேதனன் தன் அதிகாரத்திற்கு அனுகுணமான ஒன்றை யனுஷ்டித்தால், பக்தியோகம்

---

* अभिगमनं—காலையில் பகவானை ஸேவிக்கச் செல்லுதல். † उपादानं—பகவதாராதனத்திற்கு வேண்டிய த்ரவ்யங்களை சேகரித்தல்.
‡ इज्या—பகவதாராதனம். § स्वाध्यायः—வேதாத்யயனம், சாஸ்த்ரங்களை வாசித்தல் முதலியவை. ¶ योगः—பகவத்-த்யானமும், பிறகு நித்ரையும். ** पञ्चकालप्रक्रिया—ஒருதினத்தை 5 ஆகப்பிரித்து ஒவ்வொரு காலத்திலும் செய்யவேண்டிய காரியக்ரமம்.

ஸாக்ஷாத்காராவஸ்தையை யடைந்தபிறகு, அந்த சரீரத்தின் முடிவில் இவனுடைய புண்யபாபம் * நிச்சேஷமாய் கழிந்துவிடுகிறது. ப்ரபத்தியை அநுஷ்டித்தவனுக்கு, ப்ரபத்தியை அநுஷ்டிக்கும்போது இவன் கோலின காலத்திலேயே கர்மங்கள் நிச்சேஷமாய் கழிந்துவிடுகின்றன.

கர்மங்களாவன—புண்யம், பாபம் ஆகிய இரண்டும். இதில் புண்யமாவது—இவனுக்கு இஷ்டமான ஸாம்ஸாரிக-பலங்களுக்கு ஸாதனமாக சாஸ்த்ரங்களில் விதிக்கப்படும் யாகம், தானம், ஹோமம் முதலியவைகளை அநுஷ்டிப்பதால் உண்டாகும் பகவானுடைய ஸங்கல்ப-விசேஷம். இது இந்த இந்த கர்மத்திற்கு இந்த இந்த பலங்களைக்கொடுக்கக் கடவோம் என்கிறதாய் இருக்கும். பாபமாவது-அநிஷ்ட-பலத்திற்கு ஸாதனமான சாஸ்த்ர-நிஷித்த-கர்மங்களைச் செய்வதாலுண்டாகும் (அதன் பலத்தைக் கொடுப்பதைப் பற்றிய)பகவத்-ஸங்கல்பம். இந்த ஸங்கல்பங்கள் இச்சேதனனுக்கு அந்தந்த பலங்களைக் கொடுக்கு

* निःशेष—மிகுதியில்லாமல்.

மளவும் அனுவர்த்திக்கும். இவை அனுவர்த்தித்தால், அந்தந்த கர்மபலங்களைக் கொடுப்பதற்காக ஈச்வரன் மேல் மேல் ஜன்மங்களை யுண்டாக்குகிறான். இப்படி வருகிற ஜன்மபரம்பரைக்கு முடிவில்லாமல், எப்போதும் ஜனன-மரண-ப்ரவாஹத்தில் விழுந்து மஹாக்லேசத்தை அனுபவிக்கவேண்டிவரும். பக்தி ப்ரபத்திகளில் ஒன்றை அனுஷ்டித்தால் அதனால் பகவானுக்கு இவனிடத்தில் ப்ரீதி பிறக்கிறது. அதனால் இதற்கு முன் அநாதிகாலம் துடங்கி இதுவரையில் அனுவர்த்தித்து வந்திருக்கும் கீழ்ச்சொன்ன பகவத்-ஸங்கல்பங்களெல்லாம் நிவ்ருத்திக்கும். இவைகளுக்கு நிவ்ருத்தியாவது-இதுவரையில் இவன்செய்த கர்மங்களில் பலம் கொடுத்தது போக, மிகுந்தவைகளுக்குப் பலம் கொடுக்கக் கடவோமல்லோம் என்கிற ஸங்கல்பம். இது பிறந்தால் மேல் ஜன்மத்திற்குக்காரணமில்லையாகையால் அடுத்த ஜன்மம் இருக்காது.

இங்கே அநிஷ்டங்களைக் கொடுக்கத்தக்க பாபகர்மங்கள்போல, இஷ்டமான ஸாம்ஸாரிக-பலத்தைக் கொடுக்கும் புண்ய-கர்மங்

கள் கழியாவிட்டால், அவைகளின் பலமான ஸாம்ஸாரிக-ஸுகங்களை அனுபவிக்கைக்காக ஜன்மம் வரவேண்டி, அந்த ஜன்மத்தில் செய்யும் புண்ய-பாபங்களின் பலங்களை அனுபவிப்பதற்காக ஒழிவில்லாத ஜன்மபரம்பரை வந்துவிடும். ஆகையால் பாப-கர்மங்களுக்குப்போல, புண்ய-கர்மங்களுக்கும் பலம் கொடுக்கக்கடவோமல்லோம் என்று பகவான் ஸங்கல்பிக்கிறான். இப்படி புண்ய-பாப-ரூப-கர்மங்கள் கழிந்தபின்பு, அதனால் வந்த அநாதியான ப்ரக்ருதி-ஸம்பந்தமாகிய ஸம்ஸாரம் நீங்குகிறது. பின்பு இவன் மோக்ஷத்தைப் பெறுகிறான்.

மோக்ஷமாவது—நித்ய-விபூதியில் வரும் பகவதனுபவ-விசேஷம். நித்ய-விபூதியாவது இந்த ப்ரக்ருதி-மண்டலத்திற்கு மேலிருக்கும் ஒரு லோக-விசேஷம். இது கீழ்ச்சொன்ன ப்ரக்ருதி-பரிணாமமான 'ஸத்ய-லோகம்' என்று சொல்லப்படும் சதுர்முக-ப்ரஹ்ம-லோகம் முதலிய லோகங்கள்போலன்றிக்கே * 'சுத்த-ஸத்வம், என்கிற பெயருடைய த்ரவ்யத்தின் பரி

* शुद्धसत्वं

ஞமமாயிருக்கும். இந்த சுத்த-ஸத்வம் ரஜஸ், தமஸ் என்கிற குணங்கள் கலவாத ஸத்வ-குணத்தை யுடையதாயிருக்கும். இது ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணங்களை யுடையதான த்ரி-குணமென்று பெயருடைய ப்ரக்ருதி-த்ரவ்யத்தைக்காட்டிலும் மிகவும் வாசியுள்ளதாயிருக்கும். இப்படி சுத்த-ஸத்வ-பரிணமமான லோகம் உள்ளது என்கிற அம்சம் புருஷ-ஸூக்தத்திலும் உத்தர-நாராயணத்திலும் 'ஆதித்ய-வர்ணனை மஹா புருஷன் தமஸ்ஸுக்கு அப்பால் இருக்கிறான்' என்று சொல்லுகையாலும், க்ருஷ்ண-யஜுர்-வேதத்தில் 'இந்த ரஜஸ்ஸுக்குமேல் வஸிக்கிறான்' என்றும், ஸுபாலோபநிஷத்தில், * 'அ-புநர்-பவ' என்கிற நாடியால் புறப்பட்டு இந்த ஜீவன் ப்ரஹ்மாண்டாவரணமான † ப்ருதிவீ, ‡ அப், தேஜஸ், வாயு, ஆகாசம் இவைகளை பேதித்து, தமஸ்ஸையும் பேதித்து, அதற்கு மேலே போகிறான்' என்றும் சொல்லியிருக்கையாலும் கிடைக்கிறது. ஸ்ரீ மஹாபாரதத்தில்

---

* अपुनर्भव—மறுபடி ஸம்ஸாரத்துக்கு வாராதபடி போவதற்கு மார்க்கமான நாடி.

† आवरण—மூடி. ‡ अप्—ஜலம்.

ஆரண்ய-பர்வதத்தில் * தேவதூத-முத்கல-ஸம்வாதத்தாலும் இன்னும் பல ப்ரமாணங்களாலும் இந்த அம்சம் சொல்லப்படுகிறது.

இந்த சுத்த-ஸத்வ-த்ரவ்யம் ப்ரக்ருதி-த்ரவ்யம்போல ஞான-ஸங்கோசத்தை உண்டாக்குவது, பசி தாஹம் முதலியவைகளையுண்டாக்குவது முதலான தோஷமொன்றும் இல்லாதது. இதின் ஸ்வரூப-ஸ்வபாவாதிகளை "நித்ய-வீபூதி-வைபவம்" என்கிற க்ரந்தத்தில் சொல்லியிருக்கிறோம். அதில் கண்டுகொள்ளவும்.

இந்த சுத்த-ஸத்வத்தின் பரிணமமான லோகம் 'பரம-பதம்' என்றும், 'ஸ்ரீவைகுண்டம்' என்றும், † 'பரம-வ்யோம' என்றும், ‡ 'த்ரிபாத்-விபூதி' என்றும் 'நித்ய-விபூதி' என்றும் சொல்லப்படுகிறது. இந்த லோகத்திற்கு பகவத்-ஸங்கல்ப-விசேஷத்தால் ஒருக்காலும் அழிவில்லை. ஆகையாலேயே இது 'நித்ய-விபூதி' என்று பேர்பெற்றது.

---

* देवदूत-मुद्गल-संवादः † परम-व्याम—மஹாகாசம்.
‡ त्रिपाद्विभूति

இந்த லோகத்தில் * 'அயோத்யை' என்றும், 'அபராஜிதை' என்றும் சொல்லப்படுகிற ஒரு பட்டணம் உண்டு. அதில் 'ஆநந்தமயம்' என்கிற ஆயிரக்கால் மண்டபத்தில் திவ்யபர்யங்கத்தில் பகவான் தனக்கு அஸாதாரணமான திவ்ய-மங்கள-விக்ரஹத்தோடு இருக்கிறான். இது தலவ-காரோப-நிஷத்திலும், கௌஷீதக்யுபநிஷத்திலும், ப்ருஹதாரண்யகத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது, இந்த திவ்ய-மங்கள-விக்ரஹத்தோடுகூடிய பகவானைத்தான் 'பர-வாஸுதேவன்' என்று சொல்லுகிறது. இந்த விக்ரஹம் சுத்த-ஸத்வ-த்ரவ்ய-மயமாய், அத்யந்த-விலக்ஷணமாய், பரமாத்ம-ஸ்வரூபம்போல அனுபவிக்க அனுபவிக்க புதிது புதிதாய்த் தோற்றிக்கொண்டு, த்ருப்தியில்லாதபடி மேல் மேல் அனுபவிக்க ஆசையுண்டாக்கும். பகவானுக்குத் தன் ஸ்வரூபத்தைவிட இது மிகவும் ப்ரியமாயிருக்கும். பகவான் முக்தர்களுக்கும், நித்யர்களுக்கும் எப்போதும் அனுபவம் கொடுப்பதற்காக இந்தவிக்ரஹத்தை நித்யமாக இருக்கும்படி ஸங்கல்பித்திருப்பதால் இது நித்யமாய் இருக்கும்.

---

* अयोध्या

ஸர்வேச்வரன் இந்த விக்ரஹத்தை அநேகவிதமாய் பரிணமிக்கச்செய்து லோகோபகாரார்த்தமாக அநேகாவதாரங்களைப்பண்ணுகிறான். அந்த அவதாரங்கள் * வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்று நாலு வகைப்படும். இவற்றில் வ்யூஹமென்பது 'ஸங்கர்ஷண-ப்ரத்யும்ன-அநிருத்த' என்று மூன்று வகைப்படும். வாஸுதேவனிடத்திலிருந்து உண்டான ஸங்கர்ஷண-விக்ரஹத்தோடு கூடிய பகவான் ஸங்கர்ஷணன் என்று சொல்லப்படுகிறான். இவன் ஜீவ-தத்வத்திற்கு அபிமானி-தேவதை. இந்த ஸங்கர்ஷண-விக்ரஹத்திலிருந்து ப்ரத்யும்னன் என்கிற விக்ரஹம் உண்டாகிறது. அதோடு கூடிய பகவான் ப்ரத்யும்னன் என்று சொல்லப்படுகிறான். இவன் மனஸ்-தத்வத்திற்கு அபிமானி-தேவதை. இந்த விக்ரஹோத்பத்திகளைத்தான் பஞ்சராத்ரத்தில் 'वासुदेवात् संकर्षणो नाम जीवो जायते' என்றும், †'संकर्षणात् प्रद्युम्नसंज्ञं मनः' என்றும் சொல்லுகிறதே யொழிய ஜீவாத்மாவுக்கும் மனஸ்ஸுக்கும் உத்பத்தி சொல்லுகிறதன்று.

---

* विभव † ஸங்கர்ஷணாத் ப்ரத்யும்ன-ஸம்ஜ்ஞம் மன:

ப்ரத்யும்ன-விக்ரஹத்திலிருந்து * அநிருத்த-விக்ரஹம் உண்டாகிறது.

இதில் ஸங்கர்ஷண-ரூபியான பகவான் தானே பஞ்ச-ராத்ர-சாஸ்த்ரத்தையும், ருத்ராந்தர்யாமியாயிருந்து ஜகத்-ஸம்ஹாரத்தையும் செய்கிறான். ப்ரத்யும்ன-ரூபனான பகவான் சதுர்முக-ப்ரஹ்மாந்தர்யாமியாய் ஜகத்-ஸ்ருஷ்டியைச்செய்கிறான். *அநிருத்த-ரூபனாய் ஜகத் ரக்ஷணத்தைச் செய்கிறான்.

விபவமாவது-ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள். இவைகளைக்கொண்டு எல்லாராலும் கண்களால் காணப்படுபவனாய், ஸாது-பரித்ராண-துஷ்ட-நிக்ரஹங்களைச் செய்து, லோகத்தைத் தன்லீலைகளால் ஆனந்திப்பிக்கிறான்.

அந்தர்யாமியாவது--ஹ்ருதய-ப்ரதேசத்துக்குள்ளே இருப்பதாய், யோகிகளுக்கு த்யான-விஷயமான ஒரு ஸூக்ஷ்ம-ரூபத்தோடு கூடிய பகவான்.

அர்ச்சையாவது-திவ்யதேசங்களிலே ரங்கநாத-ஸ்ரீநிவாஸ-வரதாதி ரூபனாய்க் கொண்டு ஸர்வ--ஸுலபனாய் ஆராதிக்கப்

* अनिरुद्ध

பட்டு, ஆராதகர்களுக்கு வேண்டிய பலன்களைக் கொடுக்கும் விக்ரஹ-விசேஷத்தோடு கூடிய பகவான்.

கீழே சொன்னபடி, ஸம்ஸாரம் கழிந்த ஜீவாத்மா நித்ய-விபூதியில் திவ்யபர்யங்கத்தில் வீற்றிருக்கும் பர-வாஸுதேவனைக் கிட்டுகிறான். அப்போது அவனுக்கு ஞான-ஸங்கோசம் நிச்சேஷமாய்க் கழிந்து ஞானத்திற்கு ஸ்வாபாவிக-விகாஸம் ஆவிர்ப்பவிக்கிறது. இந்த ஆவிர்ப்பாவம் நித்ய-விபூதியில் திவ்ய-பர்யங்கத்திலிருக்கும் பர-வாஸுதேவனைக் கிட்டினால்தான் உண்டாகும். இந்த விகாஸத்தால் தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தையும், லீலா-விபூதி, நித்ய-விபூதி என்கிற * உபய-விபூதிகளோடும், ஸகல-கல்யாண-குணங்களோடும், திவ்ய-மங்கள-விக்ரஹத்தோடும், ஸ்ரீ-பூமி-நீளை என்கிற திவ்ய-மஹிஷிகளோடும் கூடியிருக்கிற பகவானையும் உள்ளது உள்ளபடியே எள்ளளவும் விடாமல் அநுபவிக்கிறான்.

---

* उभय—இரண்டு.

இப்படி அனுபவிக்கப்படும் வஸ்து மிக வும் ப்ரியமாயிருக்கிறபடியால் இந்த அனுப வம் பரமானந்த-ரூபமாயிருக்கும். இந்த ஆன ந்தம் பகவானுக்கும் நித்யருக்கும் முக்தருக் கும் ஸமானமாயிருக்கும். ஆனந்தத்தில் தார தம்யம் கிடையாது. இந்த ஆனந்தம் பின்பு ஒருக்காலும் நிவ்ருத்திக்காமல், எப்போதும் அநுவர்த்தித்தே வரும். இந்த அனுபவம் தான் மோக்ஷம் என்று சொல்லப்படுகிறது: இம்மோக்ஷம் நித்ய-விபூதி என்கிற லோகம் சேர்ந்த பிறகுதான் கிடைக்கும்.

விசிஷ்டாத்வைத-ஸித்தாந்த-ப்ரகரணம்

முடிந்தது.

* ॥ सिद्धान्तत्रयभेदहेतुनिरूपणप्रकरणम् ॥

இப்படி மூன்று ஸித்தாந்தங்களுடைய ஸ்வரூபத்தை நிரூபித்தோம். இனி இந்த ஸித்தாந்த-பேதங்கள் உண்டானதற்குக் காரணத்தை நிரூபிக்கிறோம்.

சாந்தோக்யோபநிஷத்தில் பிதா புத்ரனுக்கு உபதேசித்ததாகச் சொல்லியிருக்கும் 'தத் த்வமஸி' வாக்யத்திற்கு நிர்வாஹம் சொல்லும் வழியின் பேதத்தால் இந்த ஸித்தாந்த-பேதம் உண்டாயிற்று. இதுதான் பேதமுண்டானதற்கு முக்கியகாரணம். இந்த 'தத் த்வமஸி' வாக்யத்திற்கு, ஒரு ஜீவாத்மாவைப் பார்த்து 'நீ அந்த ப்ரஹ்மம் தான்' என்று அர்த்தம் ஆகிறது. வேறு சில ச்ருதிகளில் 'ஜீவன் வேறு, ப்ரஹ்மம் வேறு' என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த இரண்டு ச்ருதி-வாக்யங்களுக்கும் ஒன்றுக்கொன்று விரோதம் வருகிறது.

இதற்கு த்வைதஸித்தாந்திகள் செய்யும் பரிஹாரம்:—

* ஸித்தாந்த-த்ரய-பேத-ஹேது-நிரூபண-ப்ரகரணம்.

சாந்தோக்யத்தில் இந்த ப்ரகரணத்தில் 'தத் த்வமஸி' என்கிற வாக்யத்திலுள்ள 'தத்' என்பதற்கு முன் 'ஆத்மா' என்ற பதம் இருக்கிறது. இந்த இரண்டையும் சேர்த்தால் 'ஆத்மா-தத்' என்றாகிறது.

இந்த இடத்தில் 'ஆத்மா அதத்' என்று பிரித்தால், 'அதத் த்வம்'—'நீ அந்த ப்ரஹ்மம் அன்று' என்று ஜீவனைப் பார்த்துச் சொன்னதாகிறது. ஆகையால் விரோதமில்லை.

* அதவா, ஒரு ராஜ்யத்தைக்காட்டி, இது ராஜாவின் அதீனம் என்று தெரிவிக்கைக்காக 'இதெல்லாம் ராஜா' என்று சொல்லுமாப் போலே, இங்கும் நீ ப்ரஹ்மத்திற்கு அதீனம் என்று தெரிவிப்பதற்காக 'நீ அந்த ப்ரஹ்மம்' என்று சொல்லுகிறது. ஆகையாலும் விரோதமில்லை என்று (த்வைத-ஸித்தாந்திகள் நிர்வஹிப்பார்கள்). இப்படி ஜீவ-ப்ரஹ்ம-பேதம் இந்தச்ருதிக்கு அர்த்தமென்று சொல்லுகிறபடியால் இதற்கு 'த்வைத-ஸித்தாந்தம்' என்று பெயர் வந்தது. த்வைதமாவது பேதம்.

---

* अथवा—அல்லது.

இந்த நிர்வாஹத்தில், 'அதத்' என்று பதம் பிரிப்பதாலும், ததீனம் என்று *உபசா ரோக்தியாக அர்த்தத்தை நிர்வஹிக்கிறபடியா லும் அஸ்வாரஸ்யம் வருகிறது. ஆகிலும் அநேக ச்ருதிகளோடு விரோதம் வாராமைக் காக இந்த அஸ்வாரஸ்யத்தை ஸஹிக்க வேண்டுமென்று இந்த ஸித்தாந்திகளின் அபிப்பிராயம்.

அத்வைதிகள் சொல்லும் பரிஹாரம்:—

ப்ரஹ்மம் என்று சொல்லப்படும் சைதன் யம் ஒன்றே மாயையிலும் மாயா-கார்யமான அந்தக்கரணத்திலும் ப்ரதிபலிப்பதினால் ஈச் வரன் ஜீவன் என்கிற பேதம் ஏற்படுகிறது. இந்த ஜீவேச்வர-ஸ்வரூபத்தை விவேசித்தால் சைதன்யம் ஒன்றேயுள்ளது என்று கிடைக்கி றது. ப்ருஹதாரண்யகத்தில் ஈச்வரனைத் தொடங்கி 'ஸர்வமும் இவன் வசத்திலிருக் கிறது, எல்லாவற்றிற்கும் இவன் ஈச்வரன், இவன் பூதங்களுக்கெல்லாம் அதிபதி, பூதங் களைக் காப்பாற்றுகிறவன்' இது முதலான குணங்களைச் சொல்லி, 'இந்த ஆத்மா கீழ்ச்

---

* उपचारोक्ति—முக்கியமான அர்த்தத்தை விட்டு வேறு அர்த்தம் சொல்வது.

சொன்னபடியன்று, இவனிடத்தில் ஒன்றும் தட்டுவதில்லை' என்று கீழ்ச்சொன்ன குணங்களையெல்லாம் கழிக்கிறபடியால் ஒரு குணமுமில்லாத சுத்தசைதன்யமொன்றே பரமார்த்தம் என்று ஈச்வர-ஸ்வரூபத்தை விவேசித்தால் கிடைக்கிறது.

ஜீவனாவது--ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி என்கிற மூன்றவஸ்தைகளையும் மாறி மாறி அடைபவன். இதில் * ஜாக்ரதவஸ்தையாவது--கண் முதலிய இந்த்ரியங்களைக்கொண்டு வெளியிலிருக்கும் வஸ்துக்களை அனுபவிக்கை. ஸ்வப்னாவஸ்தையாவது--ஜாக்ரதனுபவம் கழிந்து, அந்த அனுபவத்தாலுண்டான வாஸனாரூபமான பதார்த்தங்களை அனுபவிக்கை. ஸுஷுப்தியாவது--அந்த அனுபவமும் கழிந்து கேவலம் அஜ்ஞானானுபவம். இந்த மூன்றவஸ்தைகளில், ஜாக்ரதவஸ்தையில் காணப்பட்ட பதார்த்தங்கள் ஸ்வப்னாவஸ்தையில் தென்படாமல் கழிந்துபோகின்றன. ஸ்வப்னாவஸ்தையில் கண்டவை ஸுஷுப்த்யவஸ்தையில் தென்படாமல் போகின்றன. இப்படிக் கழிந்துபோவதால் † பாஹ்ய-ப்ரபஞ்

---

* जाग्रदवस्था † बाह्यप्रपञ्चं—வெளியிலுள்ள உலகம்.

சமும் ஸ்வாப்ன-ப்ரபஞ்சமும் வாஸ்தவமன்று. இரண்டவஸ்தைகளிலும் 'நான்' 'நான்' என்று தோற்றுவது அந்தக்கரணத்தில் ப்ரதிபலிக்கும் சைதன்யம். ஸுஷுப்த்யவஸ்தையில் அஜ்ஞானமாத்ரத்திற்கு அனுபவம்வந்து அந்தக்கரணமும் கழிந்துபோகிறது. யோகதசையில் அஜ்ஞானமும் தோற்றுமல் சைதன்யம் மாத்ரம் தோற்றுகிறபடியால் அஜ்ஞானமும் கழிந்துபோகிறது. ஆகையால் சைதன்யமொன்றே வாஸ்தவமாயுள்ளது.

இந்த சைதன்யத்திற்கு அநாதிகாலந் தொடங்கி அஜ்ஞான-ஸம்பந்தம் நேர்ந்திருக்கிறது. அந்த அஜ்ஞானம் அந்தக்கரணமாய் மாறுகிறது. அந்த அந்தக்கரணம் ஸ்வாப்ன ப்ரபஞ்சம் பாஹ்ய-ப்ரபஞ்சம் ஆகிற விகாரங்களை அடைகிறது. ஆகையால் அஜ்ஞானமும், அந்தக்கரணமும், ஸ்வாப்ன-ப்ரபஞ்சமும், ஜாக்ரத்-ப்ரபஞ்சமும் மித்யையாய் முடிகிறது. சைதன்யமாத்ரம் சேஷிக்கிறது. இது தான் ஜீவனுடைய விவேசன-ப்ரகாரம். இந்த விவேசனத்திற்காகத்தான் ப்ருஹதாரண்யகம், மாண்டூக்யம் முதலான உபநிஷத்துக்கள்

ஜாக்ரத் முதலான அவஸ்தா-த்ரயத்தை நிரூபிக்கின்றன.

இப்படி ஜீவாத்மாவை விவேசித்தால் சேஷித்த சுத்த-சைதன்யம் 'த்வம்' பதத்திற்கு அர்த்தம். ஈச்வர ஸ்வரூபத்தை விவேசித்ததில் சேஷித்த சுத்த சைதன்யம் 'தத்' பதத்திற்கு அர்த்தம். ஆகையால் 'தத்' 'த்வம்' பதங்களிரண்டும் சுத்த சைதன்ய ஸ்வரூபம் ஒன்று என்று காட்டுகின்றன.

இங்கே 'தத்' 'த்வம்' என்கிற பதங்களுக்கு சுத்த சைதன்யம் பொருள் என்று சொல்வதில் அஸ்வாரஸ்யம் வருகிறது. ஆகிலும்'தத் த்வமஸி' என்கிற உபதேச-ஸ்வாரஸ்யத்தால் பிதா புத்ரனுக்கு ப்ரத்யக்ஷாதிகளாலே அறிய முடியாததான ப்ரஹ்மாத்ம-ஐக்யத்தை உபதேசிப்பதற்காகத் தொடங்குகிருர் என்று தெரிகிறது. ஒன்பது * பர்யாயம் இவ்விதம் உபதேசிப்பதாலும், இவ்வர்த்தம் ப்ரத்யக்ஷாதிகளாலே கிடைக்காததாகையாலும், இப்படியறிந்தவனுக்கு மோக்ஷபலம் சொல்லுகை

* पर्याय:—தடவை.

யாலும், பிதா-புத்ர-ஸம்வாத-ரூபமான *அர்த்தவாதம் காண்கையாலும், இங்கேயுள்ள 'தத், த்வம்' பதங்களின் அர்த்தத்தை சோதிப்பதற்காக ப்ரவ்ருத்தித்த ப்ருஹதாரண்யகம் முதலிய உபநிஷத்துக்களினுடைய சில ப்ரகரணங்களில் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் சொல்லியகுணங்கள் கல்பிதங்கள் என்று கழித்து, சைதன்யத்தின் ஐக்யத்தை உபபாதிக்கையாலும், இந்த 'தத் த்வம்' என்கிற உபதேசத்திற்கு சுத்த-சைதன்ய-ஐக்யத்திலேயே நோக்கு என்று கிடைக்கிறது. ஆகையால் இந்த அஸ்வாரஸ்யம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அத்வைத-ஸித்தாந்திகளின் அபிப்பிராயம்.

சுத்த-ஜீவ-சைதன்யத்திற்கும், சுத்த-ப்ரஹ்ம-சைதன்யத்திற்கும் அபேதம் இந்த 'தத் த்வமஸி' ச்ருதிக்கு அர்த்தமென்று நிர்வஹிக்கிறபடியால் இதற்கு 'சுத்தாத்வைத-ஸித்தாந்தம்' என்று பெயர் வந்தது.

---

* अर्थवादः—இந்த விஷயத்தை ரூபிப்பதற்காக சொல்லப்படும் சிறியகதை.

விசிஷ்டாத்வைதிகள் சொல்லும் பரிஹாரம்:—

ஜாக்ரத்-தசையில் காணப்படும் வஸ்துக்கள் ஸ்வப்னுவஸ்தையில் காணப்படாதது மாத்திரத்தைக்கொண்டு அவையில்லை என்று சொல்வது அநுபபன்னம். ஸ்வப்னுவஸ்தையில் கண் முதலிய இந்த்ரியங்களுக்கு வெளியில் பரவுதல் இல்லாமையால் வெளியிலிருக்கும் வஸ்துக்கள் தென்படவில்லை. தென்படாதது வஸ்து இல்லாமையாலன்று. ஆகையால்,ஸ்வப்னத்தில்தென்படாத மாத்திரத்தைக்கொண்டு ப்ரபஞ்சம் இல்லை என்று சொல்லக்கூடாது. ப்ரபஞ்சம் ஸத்யமென்பதை முன்பே நிரூபித்தோம். ஆகையால் யதார்த்தமாயும் விசித்ரமாயும், பலவகைப்பட்டதுமான இந்த ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கைக்கு வேண்டிய ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தித்வம் ஸத்ய-ஸங்கல்பத்வம் முதலான குணங்களை ப்ரஹ்மத்திற்கு பரமார்த்தமாய் ஒப்புக்கொள்ள வேண்டுமாகையாலும், ப்ரஹ்மத்திற்கு ஸர்வஜ்ஞத்வாதி-குணங்களை ச்ருதி தானே சொல்லி தானே நிஷேதிக்கிறது என்பது உன்மத்த-வ்யவஹாரம் போல்

ஆகுமாகையாலும் ப்ரஹ்மத்தின் குணங்கள் அபரமார்த்தமென்று சொல்வது கூடாது. அந்த குணங்கள் எல்லாம் ஸ்வாபாவிகம் என்று ச்ருதி சொல்லுகிறது.

ஜீவாத்மா இந்த ஸம்ஸாரத்தில் அகப்பட்டுக்கொண்டு அனேகவித துக்கங்களை அனுபவித்துக்கொண்டு, ப்ரஹ்மத்தை யுபாஸித்து, அதனால் துக்கங்களைக் கழித்துக் கொள்ளுகிறான்என்றும் ச்ருதி சொல்லுகிறது. இப்படி, தன் துக்கத்தைக் கழித்துக்கொள்ள ஞான சக்திகளில்லாமல், அல்பஜ்ஞனாய், அல்ப-சக்திகனாய், ஸத்ய-ஸங்கல்பனல்லாதவனாய், துக்கங்களில் மூழ்கிக்கிடக்கும் ஜீவாத்மாவுக்கும், எப்பொழுதும் ஸர்வஜ்ஞமாய், ஸர்வ-சக்தியாய், ஸத்ய-ஸங்கல்பமாய், ஒருக்காலும் துக்கலேசமுமில்லாததுமான ப்ரஹ்மத்திற்கும் ஸ்வரூபைக்யம் மின்மினிப்பூச்சிக்கும் ஸூர்யனுக்கும் ஸ்வரூபைக்யம்போல் அஸம்பாவிதமாகையால், 'தத் த்வமஸி' வாக்யத்திற்குக் கீழ்ச்சொன்ன நிர்வாஹம் உபபன்னமாகாது. ஆகையால் இந்த ச்ருதிக்கு வேறு விதமாக நிர்வாஹம் சொல்லவேண்டும்.

"ப்ரஹ்மம் 'நான் பஹுவாகக்கடவேன்' என்று ஸங்கல்பித்து, ஜகத்தை ஸ்ருஷ்டித் தது" என்றுபல ச்ருதிகள் சொல்லுகையாலும் 'ப்ரஹ்மம் தன்னைத்தானே செய்தது' என்று தைத்திரீயத்தில் ஸ்ருஷ்டி-ப்ரகரணத்தில் சொல்லியிருப்பதாலும், ப்ரஹ்மமே பஹு வாக ஆயிற்று என்று கிடைக்கிறது. நிர் விகாரமான ப்ரஹ்மத்திற்கு நேராக பஹுவாக ஆகை அநுபபன்னம். ஆகையால் இதற்கு உபபத்தி வருவது எப்படி என்று விசாரிக்கும் போது, ப்ரஹ்மத்திற்கு ப்ரபஞ்சமெல்லாம் சரீரமென்று ப்ருஹதாரண்யகத்தில் சொல்லி யிருப்பதாலும்,

*"सोऽभिध्याय शरीरात् स्वात् सिसृक्षुः विविधाः प्रजाः। अप एव ससर्जादौ........" என்று மநுஸ்ம்ருதி யில் ப்ரஹ்மம் தன்னுடைய சரீரத்திலிருந்து ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்தது என்று சொல்லி யிருப்பதாலும், ப்ரஹ்மத்தினுடைய சரீரம் ப்ரபஞ்சமாக பரிணமிக்கிறது என்றும், ப்ரஹ்மத்திற்குத் தன் சரீரமான ப்ரபஞ்சத்தின்

* ஸோ-பித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷு: விவிதா: ப்ரஜா: । அப ஏவ ஸஸர்ஜாதௌ........"

வழியாய் * 'பஹு-பவனம்' என்றும் கிடைப்பதால் ப்ரஹ்மமே காரணம், ப்ரஹ்மமே கார்யம் என்று கிடைக்கிறது. ப்ரஹ்மத்திற்கு சரீரமான ப்ரபஞ்சத்தில் வரும் நாம-ரூபங்களை யடைந்திருக்கையாகிற ஸ்தூலாவஸ்தை ப்ரஹ்மத்திற்குக் கார்யாவஸ்தை என்றும், அந்த நாம-ரூப-விபாகமில்லாமையாகிற ஸூக்ஷ்மாவஸ்தை ப்ரஹ்மத்திற்குக் காரணுவஸ்தை என்றும் ஏற்படுகிறது. ஆகையால் ஸூக்ஷ்ம-சிதசித்-விசிஷ்ட-ப்ரஹ்மம் காரணமென்றும், ஸ்தூல--சிதசித்-விசிஷ்ட-ப்ரஹ்மம் கார்யமென்றும் கிடைக்கிறது. இந்த அர்த்தத்தைத் தான் சாந்தோக்யோபநிஷத்தில் பிதா தன்புத்ரனுக்கு ஜகத்காரணத்தை உபதேசிக்கத்துடங்கி 'தத் த்வமஸி' என்கிற வாக்யத்தால் ஸூக்ஷ்ம-சிதசித்-விசிஷ்டமான ப்ரஹ்மம் தான் ஸ்தூல-சிதசித்-விசிஷ்ட-ப்ரஹ்மமாயிருக்கிறது என்று சொன்னுரென்று சொல்லுகிறது. இதில் ஒரு அநுபபத்தியுமில்லை.

ஆனல் 'த்வம்' பதம் ஒரு சரீர-விசேஷத்தோடு கூடியிருக்கும் சேதனனைச் சொல்லுகிற

---

* बहु-भवनं—பலவாக ஆகுகை.

தாக லோகவ்யவஹாரத்தால் கிடைத்தாலும், அந்த சரீரத்தோடு கூடின சேதன-விசிஷ்ட ப்ரஹ்மத்தைச் சொல்லுகிறது என்பது லோக வ்யவஹாரத்தால் கிடைப்பதில்லை. இங்கு அந்த அர்த்தம் கொள்வதில் அஸ்வாரஸ்யம் வருகிறது. அப்படியே 'த்வம்' பதம் ப்ரஹ்மத் தைச் சொல்லுகிறது என்று ஒப்புக்கொண்டால் 'அஸி' என்கிற * மத்யமபுருஷன் அநுபபன் னமாகிறது என்று சங்கிக்கலாம்.

சரீரத்தைச் சொல்லும் பதங்கள் அந்த சரீரத்திற்கு ஆத்மாவையும் சொல்வதை தேவன் மனுஷ்யன் முதலிய பதங்களிலே கண்டிருக்கிறோம். அப்படியே ப்ரஹ்மத்திற்கு சரீரமான ஜீவனைச்சொல்லும் 'த்வம்' பதம் ஜீவனுக்கு ஆத்மாவான ப்ரஹ்மத்தையும் சொல்லுவதில் ஒரு அஸ்வாரஸ்யமும் கிடை யாது. † 'யுஷ்மத்' சப்தத்தோடு சேர்த்துச் சொல்லும்போது ‡ தாதுவுக்கு மத்யம புரு ஷன் வரும் என்று வ்யாகரண-சாஸ்த்ரத்தில்

---

* मध्यमपुरुष—முன்னிலை. † युष्मत् (சப்தத்தோடு)—முன்னிலைப்பெயரான 'நீ' என்பதோடு.

‡ धातु—பகுதி.

சொல்லியிருப்பதால், இங்கே 'த்வம்' பதத்தோடு சேர்த்துச் சொல்லப்படும் 'அஸ்' தாதுவுக்கு *'அஸி' என்கிற மத்யம-புருஷன் அநுபபன்னம் அன்று. இதுதான் 'தத் த்வமஸி' வாக்யத்திற்கு ஸ்வரஸார்த்தம் என்று விசிஷ்டாத்வைத-ஸித்தாந்திகளின் அபிப்பிராயம்.

இப்படி காரணாவஸ்தா-விசிஷ்ட-ப்ரஹ்மத்திற்கும் கார்யாவஸ்தா-விசிஷ்ட-ப்ரஹ்மத்திற்கும் ஐக்யம் 'தத் த்வமஸி' வாக்யத்திற்கு அர்த்தம் என்று சொல்லுகிறபடியால் இதற்கு விசிஷ்டாத்வைத-ஸித்தாந்தமென்று பெயர் வந்தது.

இப்படி 'தத் த்வமஸி' வாக்யத்தின் நிர்வாஹ--ப்ரகார--பேதத்தைக் கொண்டு இந்த ஸித்தாந்த--பேதம் ஏற்பட்டது.

ஸித்தாந்த–த்ரய–பேத–ஹேது–நிருபணம்
முடிந்தது.

* असि— இருக்கிறாய்.

जिज्ञासुसुखबोधाय
सिद्धान्तत्रयसङ्ग्रहः ।
श्रीमत्कौशिकवंश्येन
देशिकार्येण निर्मितः ॥

ஸித்தாந்த-த்ரய-ஸங்க்ரஹம்

முற்றிற்று.

श्रीनिवासः प्रीयताम्
श्रीः

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	அசுத்தம்.	சுத்தம்.
38	1	முக்திஸது	முக்திஸ்து
62	11	காருணிகள்	காருணிகன்
	20	தாம்பானம்	தாம்பாளம்
63	15	ஸங்கல்பவ	ஸங்கல்பத்வ
68	19	ப்ரபஞ்சு	ப்ரபஞ்ச
75	18	ஈச்வரனுக்கும்—இதற்குப் பிறகு தனவஸ்துவுக்கும் ஈச்வரனுக்கு என்று சேர்த்துக்கொள்ளவும்.	
86	1	ஸரீரசம்	சரீர ஸம்
87	7	அறித்தால்	அறிந்தால்
	12.	ஸருஷ்டி	ஸ்ருஷ்டி
96	12	அசத்தி	அசக்தி
125	9	கிறது,	கிறது.
55	5	என்னும்படி	என்னுமளவி